REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

சுடர் ஒளி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

THE SUDAROLI

வார மலர்



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சமையல்: அத்தனை தீவுத் தீட்டத்தை வைத்தே வைத்தியத்தில் எடுக்கும் சிந்தனை

தமிழ் இன அழிப்புக்கு உதவுமா?

சர்வதேசம்: சுயநிர்ணயத்தை அங்கீகரிக்குமா?

தமிழ் இன அழிப்புக்கு உதவுமா? சுயநிர்ணயத்தை அங்கீகரிக்குமா? சர்வதேச சமூகத்தின் தெரிவு எது?

பயங்கரவாதத்தை ஒழிக்க சர்வதேச மட்டத்தில் ஆதரவு கோரி நிற்கும் ஒரு தரப்பு யுத்தத்துக்கான செலவை வரவு செலவுத் திட்டத்தில் என்றுமில்லாதவாறு பன்மடங்காக அதிகரித்து யுத்த தளபாடங்களை வாங்கிக் குவித்து, படைகளுக்கு பெரும் எண்ணிக்கையில் ஆள்களை சேர்த்து பெரும் யுத்தத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றது.

யுத்தத்தை முன்னெடுத்து வடக்கை மீட்கப்போவதாக அறிவித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில்தான் தமிழர் தரப்பு சர்வதேசத்திடம் நியாயம் கேட்கிறது. நாங்களும் உடன்படிக்கையில் இருந்து விலகி மீண்டும் போருக்கு செல்லவா என்ற கேள்வியை சர்வதேசத்திடம் தமிழர் தரப்பு எழுப்பி நிற்கிறது.

ஈழத் தமிழ் மக்களின் வருடாந்த கொள்கை விளக்கம் மாவீரர் தின உரை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மாவீரர் தின இறுதி நாளன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர் தின உரை மூலம் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச சமூகத்துக்குள் சிக்கிப்போயுள்ள தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என அவாக் கொண்டு, பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்ற சர்வதேசத்தின் நிலைப்பாட்டை கடுமையாகச் சாடியுள்ள பிரபாகரன் -

சர்வதேச சமூகம் இனியாவது எமது விடுதலைப் போராட்டம் தொடர்பாக நீதியான புதிய அணுகுமுறையை கடைப்பிடிக்கும் என எமது மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இன அழிப்புப் போரைத் தொடரும் சிங்கள அரசுக்கு இராணுவ, பொருளாதார உதவிகள் வழங்குவதை அடியோடு நிறுத்தி,சர்வதேச சமூகம் எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் இறையாண்மையையும் ஏற்று அங்கீகரிக்கும் என எமது மக்கள் இன்றைய புனித நாளிலே எதிர்பார்த்து நிற்கின்றனர். இப்படி சர்வதேச சமூகத்திடம் விண்ணப்பித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரம், உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களில் பாரபட்சம் ஆகியன காரணமாக ஆயுதம் ஏந்தி, தமிழ் மக்கள் தமது இருப்பை உறுதி செய்யும் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.



அகிம்சை வழியில் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் எல்லாம் பேரினவாதிகளால் முடக்கப்பட்டபோது, தமிழின விடுதலைக்காக ஆயுதப் போராட்டம்பரிணமித்தது.

அந்தப் போராட்டம் தரைப்படை, கடற்படை, விமானப்படை என்ற படைக்கட்டுமானங்களுடனும், தனியாட்சிக்கான நிர்வாகக் கட்டமைப்புக்களுடனும் நிமிர்ந்து நிற்கின்றது.

போராட்டம் வீறுகொண்டு தனது இலக்கை, இலட்சியத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த போதுதான் சர்வதேசம் தலையிட முன்வந்தது.

சர்வதேசத்தின் விருப்பில் நோர்வே அரசு தமிழரின் போராட்டத்தில் காலடி வைத்தது. உலக வல்லரசு நாடுகளின் ஆசீர்வாதத்துடன் வந்த நோர்வேயின் பிரசன்னத்தை தமிழர் தரப்பு வரவேற்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சமாதான வழியில் பெறும் நோக்குடன் நோர்வேயின் பிரசன்னத்தை தமிழர் தரப்பு ஏற்றுக்கொண்டது.

அந்த அடிப்படையில் இலங்கை அரசுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்யவும் தமிழர் தரப்பு இணங்கியது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி நோர்வேயின் பிரசன்னத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்றில் தமிழர் தரப்பு கைச்சாத்திட்டது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஆறாண்டு நெருங்கும் நிலையில் அந்த ஒப்பந்தத்தை மதிக்காது இலங்கை அரசு செயற்படுகிறது என்று பிரபாகரன் தனது உரையில் சாடியுள்ளார்.

''இராணுவ பலத்தைக் கொண்டு, தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்து விடலாம் என்ற மமதையில் மஹிந்த அரசு சமாதானத்துக்கான கதவுகளை இறுகச் சாத்தியது. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கி ஒடுக்கி ஆளவேண்டும் என்று ஆசை என்றுமில்லாதவாறு தீவிரம் பெற்றது. முழு உலகமும் முண்டு கொடுத்து நிற்க, போர் நிறுத்தத்தை கவசமாக வைத்து, சமாதானச் சூழலை வாய்ப்பாகப் பயன்படுத்தி மஹிந்த அரசு ஆக்கிரமிப்புப்போரை அரங்கேற்றியது.

போர் நிறுத்தத்தை கண்காணித்த கண்காணிப்புக்குழு கண்களை மூடிக்கொண்டு கைகளைக் கட்டிக் கொண்டு கொழும்பிலே படுத்துறங்கியது.

அனுசரணையாளரான நோர்வே நாட்டினர் அலுத்துப்போய் அமைதியாக இருந்தார்கள். எமக்கு சமாதானம் போதித்த உலக நாடுகள் மௌனித்துப் பேச மறுத்தன.

'சமாதானத்துக்கான போர்' என்றும் 'பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு நடவடிக்கை' என்றும் 'தமிழரின் விடுதலைக்காக விமோசனத்துக்காக நடத்தப்படும் போர்' என்றும் சிங்கள அரசு தமிழின அழிப்பை நியாயப்படுத்திப் போரைத் தொடர்கிறது.

இப்படித் தெரிவித்த பிரபாகரன், அன்று இந்தியா இழைத்த தவறை இன்று சர்வதேசமும் இழைத்து நிற்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதலில் தொடர்ந்து கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு உருப்படியான - அந்த மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய - நாட்டு மக்கள் அனைவரும் சமமாக மதிக்கக்கூடிய - நிலையை சிங்களத் தலைமைகள் உருவாக்கத் தவறிவிட்டன.

சிறுபான்மை மக்களின் பிரச்சினையை வைத்து தமது அரசியல் பந்தயத்தை - வாக்கு வங்கியை- பலப்படுத்துவதில் சிங்களத் தலைமைகள் ஈடுபட்டனவே தவிர, நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு உரிமை வழங்க முன்வரவில்லை.

இந்தக் கசப்பான வரலாற்றில் தொடர்ச்சியாக முகிழ்ந்த விடுதலைப் போராட்டம்,

ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் பிரச்சினையை சிங்களத் தலைமைகள் தீர்த்திருந்தால் இன்று இந்தச் சின்னஞ் சிறிய நாடு சிங்கப்பூராக, ஹொங்கொங்காக, ஜப்பானாக வளர்ச்சி கண்டு, சகலரும் இலங்கையர் என்ற நிலையை உருவாக்கியிருக்கும்.

சிங்களத் தலைமைகள் விட்ட தவறு காரணமாக, இன்று சர்வதேச மட்டத்தில் யுத்தப் பிணக்கு ஒன்றுக்குள் இலங்கை சிக்கியுள்ளது என்ற தகவல் வெளிவந்துள்ளது.

சர்வதேசத்தை வலுவாகக் கவர்ந்து நிற்கும் இலங்கை விவகாரம், தினமும் சர்வதேச செய்தி நிறுவனங்களில் செய்தியாகிக்

மாவீரர் தின உரை மூலம் விடுக்கப்படும் செய்தி இது!

கொண்டேயிருக்கிறது.

இலங்கையின் கிரிக்கெட் அணி சர்வதேச மட்டத்தில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறதோ, அதற்கு மேலாக தமிழர் விவகாரம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று எட்டப்பட்டு, அதன் அடிப்படையில் அரங்கேறிய பேச்சுக்கள் யாவும் தோல்வியில் முடிந்தன. ஆனாலும் அந்த ஒப்பந்தம் சர்வதேசத்தைப் பொறுத்தவரையிலும், தமிழர் தரப்பைப் பொறுத்த வரையிலும் இன்னமும் நடைமுறையில் இருக்கின்றது.

அந்த உடன்பாட்டின் பிரகாரம், அதில் கைச்சாத்திட்ட எந்தத்தரப்பும் 14 நாள் முன்னறிவிப்புக் கொடுத்து வெளியேறலாம். ஆனால் இதுவரை எந்தத்தரப்பும் அதில் இருந்து வெளியேறியதாக அறிவிக்கவில்லை.

ஆனால் ஒரு தரப்பு கிழக்கைக் கைப்பற்றி, வடக்கைக் கைப்பற்ற அதன் வாசலில் வந்து நிற்கின்றது.

தொடர் குண்டு வீச்சுக்கள் மூலமும், முன்நகர்வு நடவடிக்கை மூலமும் இராணுவ செயற்பாட்டை அந்தத் தரப்பு முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

மறுதரப்போ போர்நிறுத்த உடன்படிக்கையை, சர்வதேசத்தின் பிரசன்னத்தை இன்னமும் பற்றுறுதியுடன் ஏற்று நிற்கிறோம் என அறிவித்து தம் மீதான வலிந்த தாக்குதலை தடுப்பதாக அறிவிக்கின்றது.

சர்வதேசம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை உணர்ந்து செயற்படப் போகின்றதா? அல்லது தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர அனுமதிக்கப் போகின்றதா? இதுதான் இன்று எழுந்து நிற்கும் கேள்விகளாகும்.

இந்த நிலையில், மாவீரர் உரையில் பிரபாகரன் கடைசியாக கூறுகையில் -

சத்திய இலட்சியத்துக்காகச் சாவைத் சந்தித்துச் சரித்திரமாவதற்கு ஆயிரமாயிரம் வீரர்கள் எமது விடுதலை இயக்கத்தில் அணி வகுத்து நிற்கும்வரை எமக்கு முன்னால் எழுகின்ற எல்லாத் தடைகளையும் நாம் உடைத்தெறிந்து போராடுவோம். எதையும் தாங்கும் இயத்துடனும் இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும்வரை எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம். புனித இலட்சியத்திற்காகத் தம்மையே ஆகுதியாக்கிக் கொண்ட எமது மாவீரரை நினைவு கூரும் இன்றைய நாளில் நாம் ஒவ்வொருவரும் அந்த மாவீரரின் இலட்சியக்

யாழவன்

கனவை எமது நெஞ்சங்களில் சுமந்து அந்த மாவீரரின் இறுதி இலட்சியம் நிறைவுபெறும் வரை தொடர்ந்து போராடுவோம்.

சர்வதேசம் இன்னமும் மௌனம் சாதித்து இலங்கை அரசின் இன அழிப்புப் போருக்கு ஒத்தாசையாக - உறுதுணையாக செயற்பட முனையுமானால் இந்தச் சின்னஞ்சிறிய அழகிய இலங்கைத்தீவு இரத்தத் தீவாக மாறுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இந்த ஆண்டு யுத்தம் தீவிரமாகி இருநாடுகளின் முப்படைகளும் மோதப் போகின்றனவா? அல்லது அதைத் தடுத்து நிறுத்த சர்வதேசம் தனது பங்களிப்பை வழங்கப்போகின்றதா? அதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நீதி கிடைக்குமா? பாங்கோசை நடிக்குமா?

ஒலிபெருக்கி பாவனையை கட்டுப் படுத்தும் வகையில் உச்ச நீதிமன்றம் விடுத்திருக்கும் உத்தரவு பள்ளி வாசல்களில் தொழுகைக்கான அழைப்பை விடுக் கும் 'அதான்' எனும் பாங்கு சொல்வதிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பே இவ்விடயம் தொடர்பில் சந்தேகங்களும்,

சர்ச்சைகளும் எழுந்திருந்தன. ஒலிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அமுலுக்கு வருமாயின், அது பாங்கோசை எழுப்புவதிலும் சிக்கலைத் தோற்றுவிக்கும் என அச்சம் வெளியிடப்பட்டது.

ஒட்டு மொத்த எதிர்ப்பு!

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஏகோபித்த மார்க்க அறிஞர்கள் சபையான அ[illegible] இலங்கை ஜம்மிய்யதுல் உலமா மற்றும் அறுபதுக்கு மேற்பட்ட பொது அமைப்புகளை உள்ளடக்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில், கிழக்கு மாகாண அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம், தென் கிழக்கு முஸ்லிம் வெகுஜன மன்றம் போன்றவை

அஸ்லம் எஸ்.மௌலானா

உத்தேச ஒலிக்கட்டுப்பாட்டுச் சட்டம் அமுலுக்கு வருவதை வன்மையாக ஆட்சேபித்தன.

இது தொடர்பில் கிழக்கு மாகாண அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எல். எம். ஹனிபா மதனி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்திருந்தார்.

ஒலிக்கட்டுப்பாட்டு விவகாரத்துடன் சேர்த்து கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற அநியாயங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு- நேரம் ஒதுக்கி தருமாறு அவர் ஜனாதிபதியைக் கோரியிருந்தார்.

ஆனால், அக்கடிதம் அனுப்பப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் சந்திப்புக்கான நேரம் இன்னும் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை என அறிய முடிகிறது.

அரசுக்கு சவால்!

அதேவேளை ஒலிக்கட்டுப்பாடு பிரயோக வரையறை சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது என அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம். பௌஸி, பிரதி அமைச்சர்கள் மயோன் முஸ்தபா, கே. ஏ. பாயிஸ் ஆகியோர் வலியுறுத்திவந்தனர்.

இந்த சட்டம் அமுலுக்கு வருமாயின் நிச்சயம் பாங்கு சொல்வதிலும் தடை அல்லது கட்டுப்பாடு ஏற்படும் எனத் தெரிவித்து அவர்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பி வந்தனர். இது விடயத்தில் பெரும்பாலான முஸ்லிம் அமைச்சர்கள் மௌனம் காத்து வந்த போதிலும் அவர்களும் மறைமுகமாக தமது அதிருப்தியை வெளிக்காட்டியிருந்தனர். ஒலிப்பெருக்கி பாவனை கட்டுப்பாட்டுச் சட்டம் பள்ளிவாசல்களில் பாங்கு ஒலிப்பதில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்திருந்த மேல் மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா, இவ்விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடிய கரிசனை செலுத்துவார் என்று கூறியிருந்தார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுள் ஒருவரான ஆளுநர் அலவி மௌலானா, பாங்கு விவகாரம் அரசுக்கு சவாலாக மாறக்கூடாது என்பதற்காக, அது தொடர்பில் எழுந்த கரிசனைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதிலும், அரசு மீது பாய்ந்த காட்டமான கண்டனங்களையும், எதிர்ப்புகளையும் துணிக்க வேண்டும் என்பதிலும் குறியாக இருந்தார்.

ஓர் ஆலிம் துரோகத்தனம்!

இவ்விடயம் தொடர்பில் அரசுக்கு சார்பாக கருத்து வெளியிட்டு எதிர்ப்புக் குரல்களை வலுவிழக்கச் செய்வதற்கு வேறு எந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களும் முன்வரவில்லை. ஆனால், ஒரு மார்க்க அறிஞர்தான் இந்த வேலையை செய்வதற்கு பயன்படுத்தப்பட்டார்.

''இரவு நேர ஒலிபெருக்கி பாவனைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பள்ளிவாசல்களில் பாங்கு சொல்வதை எவ்விதத்திலும் பாதிக்கச் செய்யாது. அதற்கான உத்தரவாதத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் வழங்கியுள்ளார். சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இவ்விவகாரத்தைத் தமது அரசியல் லாபகத்திற்காகப் பயன்படுத்த முற்பட்டிருக்கின்றனர். அவர்கள்தான் வீண் புரளிகளை கிளப்பி விட்டிருக்கின்றனர். இதனை முஸ்லிம்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.''

இப்படி அந்த பிரபல்யமிக்க மார்க்க அறிஞரான நியாஸ் மௌலவி ஊடகங்களில் அறிக்கை வெளியிட்டிருந்தார். ஒலிக்கட்டுப்பாட்டுச்

சட்டம் தொடர்பில் முஸ்லிம் அமைச்சர்கள் சிலர் எதிர்ப்புக்குரல் எழுப்பியதை ஆட்சேபித்து -அதனை கண்டித்து- மலினப்படுத்தியே அவர் அறிக்கை விடுத்திருந்தார்.

(07 ஆம் பக்கம் பார்க்க)

நிரூபித்துக் காட்டும் என் மலையாள மாந்திரீக சக்தி
அதிசயம் ஆனால் உண்மை

46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது, எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் [illegible] மாந்திரிக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ [illegible] வெப் தளம். www.drpksamy.com. குறிப்பாக மாந்திரிக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விரைவு 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு 0094 112470615

[illegible]

Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.
NO- 162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13.
0112470615, 0112 342463, 0012342464 Fax: 0094 11 2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் - துர்க்காதேவி ஆலயம்- இல.33, கண்டி வீதி நுவரெலியா. Tel: 052 2222508

இலங்கை மத்திய வங்கி
ஊழியர் சேமலாப நிதியம்

அனைத்து உறுப்பினர்களுக்கும்,

உறுப்பினர் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்கள் - முதலரையாண்டு 2007

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் கிளைவாசகம் 5 (1) (ஏ) இன் நியதிகளின்படி 2007 ஆம் ஆண்டின் ஜனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதிகளில் உதவு தொகையாக வரவு வைக்கப்பட்ட தொகைகளைக் காட்டும் 2007 ஆம் ஆண்டின் முதலரையாண்டுக்கான உறுப்பினர் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்கள் உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற் காக சம்பந்தப்பட்ட தொழில் தருநர்களுக்கு நம்மால் அனுப்பி வைக்கப்படுகிறது.

தமது தொழில் தருநர்களிடமிருந்து தமது கணக்குக் கூற்றுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஊழியர் சேமநிதிய உறுப்பினர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமது கணக்குக் கூற்றுக்களை பரிசீலனை செய்யும்படி உறுப்பினர்கள் எதிர்பார்க்கப்படுவதோடு கூற்றுக்களில் ஏதேனும் தவறு / தவறுகள் இனங்காணப்பட்டால் அத்தகைய தவறின் / தவறுகளின் விபரங்களை சம்பந்தப்பட்ட தொழில் தருநர் ஊடாக கண்காணிப்பாளருக்கு அறிவிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். வை. தர்மசேன
கண்காணிப்பாளர்

ஊழியர் சேமநிதியத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
ஜனரதிபதி மாவத்தை
த.பெ.எண். 1299
கொழும்பு.

தொலைபேசி எண்கள் : நன்மைமுறை உதவுதொகைப் பிரிவு - 011-2477016
உதவுதொகைக் கூற்றுப் பிரிவு - 011-2477218
தொலை நகல் எண்கள் : 011-2321704, 2347862
மின் அஞ்சல் : dharmasena@cbsl.lk

தெற்கே திரும்பும் யுத்தம்!

நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் ஆரம்பித்திருக்கும் குண்டுத் தாக்குதல்களால் பீதியில் உறைந்து போயுள்ளது தலைநகர் கொழும்பு. எந்த வேளையில் எங்கே என்ன நடக்கும் என்ற பயப்பீதி இப்போது கொழும்பு வாழ் மக்களுக்குத் தொற்றிக் கொண்டுள்ளது.

உள்நாட்டு யுத்தம் இப்போது தெற்கு நோக்கித் திரும்பியிருக்கின்றது. இதன் காரணமாக இலங்கை அரசுக்கு இப்போது புதிய தலையிடி ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த 28ஆம் திகதி தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற இரண்டு பாரிய குண்டு வெடிப்புகள், மீண்டும் இலங்கை முழுமையான யுத்த முனைப்புக்குள் நுழைந்திருக்கின்றது என்பதைத் தெளிவாகக் காட்டியுள்ளன.

கடந்த 28ஆம் திகதி காலை 8.05 மணியளவில் கொழும்பு நாரஹேன் பிட்டியவில் அமைந்துள்ள சமூக சேவைகள் அமைச்சின் அலுவலகத்தில் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை இலக்கு வைத்து இந்தத் தற்கொலைக் குண்டுதாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. இந்த வேளையில் அமைச்சர் டக்ளஸ் அலுவலகத்தில் இருந்தபோதும் அவருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஈ.பி.டி.பியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் அமைச்சின் பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான ஸ்ரீபன் பீரிஸ் (வயது - 72) இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். தற்கொலைக் குண்டுதாரி போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர் போல தனது மார்புக் கச்சைக்குள் வெடிகுண்டை எடுத்துச் சென்று இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்.

இந்தத் தாக்குதல் நடந்து சில மணித்தியாலங்கள் கழிவதற்குள் கொழும்பில் மீண்டும் ஒரு பயங்கரத் தாக்குதல் நிகழ்ந்தது. அன்று மாலை 5.55 மணியளவில் கொழும்பு, நுகேகொடை, அரசமரச் சந்தியில் இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

ஆடைகள் விற்கும் பிரபல வர்த்தக நிறுவனமான 'நோ- லிமிட்' கடைத் தொகுதிப் பகுதியில் இந்தக் குண்டு வெடித்தது. அந்தக் கடைத் தொகுதிக்கு வந்த நபர் ஒருவர் வாசலில் பொதி வைக்கும் இடத்தில் தான் கொண்டு வந்த பொதியை வைத்துவிட்டு உள்ளே சென்றார் எனவும், மீண்டும் அவர் திரும்பி வந்த வேளையில் பொதியை எடுக்காமல் சென்றதை அவதானித்த அதற்குப் பொறுப்பான நபர் சந்தேகம் கொண்டு,பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து பொலிஸார் வந்து பொதியைச் சோதனை யிட்டபோது அது வெடித்ததாகக் கூறப்படுகின்றது. இந்தக் குண்டு வெடிப்பில் பொதுமக்கள் 19 பேர் பலியானதுடன், 40 பேர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை இடம்பெற்று ஒரு நாள் கழிவதற்குள் இடம் பெற்ற இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நெஞ்சில் பெரும் அச்சத்தையும் யுத்த பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா வான் படையினர் வன்னிப் பெரு நிலப்பரப்பில் மீது வான்குண்டுத் தாக்குதல்களை மிகத் தீவிரமாக மேற்கொண்டு வந்தார்கள். புலிகளின் இலக்குகள் மீதே தாம் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அரசு கூறிக் கொண்டபோதும் பெருமளவான பொதுமக்களே கொல்லப்பட்டும், காயங்களுக்கு உள்ளாகியும், உடமை இழப்புக்களைச் சந்தித்தும் பெரும் துன்பங்களுக்கு உள்ளானார்கள். தினமும் இந்த வான் குண்டுத் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அத்துடன் இலங்கை இராணுவத்தின் ஆள ஊடுருவும் படையணியினர் மேற்கொண்டுவரும் கிளைமோர்த் தாக்குதல்களிலும் அப்பாவிப் பொதுமக்களே பலியாகி வருகின்றனர்.

இவற்றின் உச்சமாகக் கடந்த மாவீரர் தினத்தன்று பொதுமக்கள் மீதான மிகக் கொடூரமான தாக்குதல் வன்னியில் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வானொலியான 'புலிகளின் குரல்' வானொலியின்ஒலிபரப்பு நிலையம், நடுவப் பணியகம் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட வான்குண்டுத் தாக்குதலில் அதன் பணியாளர்கள் மூவரும் பொதுமக்கள் 6 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். அன்றைய தினம் துணுக்காய், ஐயன்குளம் பகுதியில் இராணுவத்தின ஆழ ஊடுருவும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர்த்

அதிரன்

தாக்குதலில் வாகனம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த 7 பாடசாலைச் சிறுமிகள் உட்படப் 11 பொதுமக்கள் பலியானார்கள்.

இந்தச் சம்பவங்கள் புலிகளின் தலைமையை அதிக சீற்றத்துக்குள்ளாக்கி இருக்கின்றன. தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை மேற்கொள்பவர்கள் மீதான தாக்குதல்கள் தொடரும் என்பதை புலிகள் மீண்டும் ஒருமுறை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் பிரபா தனது மாவீரர் தின உரையில் அதனை மிகவும் காட்டமாகக் கூறியிருந்தார்.

''வரலாற்றில் முதல் தடவையாக எமது கரும்புலி அணியினரும் வான்புலிகளும் கூட்டாக நடத்திய எல்லாளன் நடவடிக்கை சிங்கள

(4-ஆ ஆம் பக்கம் பார்க்க)



பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் இலங்கை முடிவால் இந்தியா சீற்றம்!

கம்பாலாவில் அண்மையில் நடந்த பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் பாகிஸ்தானை இடைநிறுத்துவதை எதிர்த்து இலங்கை குரல்கொடுத்தது இந்திய வெளியுறவு வட்டாரங்களில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் அவசர நிலை பிரகடனம், அந்நாட்டில் நீதித்துறை மீது முஷாரப்பின் பலப்பிரயோகம், ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு பொதுநலவாய அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

முஷாரப் இதற்குச் சாதகமாக பதில் தராததினால், அந்நாட்டின் அங்கத்துவத்தை இடைநிறுத்துவதற்குப் பரிசீலனை செய்யப்பட்டது. எனினும், இலங்கையும் மலேசியாவும் எதிர்த்ததால் சிறு சிக்கல் ஏற்பட்டது. இலங்கையின் இம்முடிவு பலநாடுகளையும் புருவம் உயர்த்தவைத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையர் லூயிஸ் ஆர்பர் இலங்கையில் ஐ.நாவின் மனித உரிமை கண்காணிப்பு அலுவலகத்தை நிறுவியே தீருவேன் என விடாப்பிடியாக உள்ளார். மனித உரிமைகளைத் தனது நாட்டில் மீறுவதுடன் நில்லாது அவ்வாறு மீறும் மற்றொரு நாடான பாகிஸ்தானுடன் கைகோத்திருப்பதன் மூலம், தான் மனித உரிமைகளை மதியாத ஒரு நாடுதான் என்பதை இலங்கை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

முழு உலகும் பாகிஸ்தானைக் கண்டிக்கும்போது இலங்கை மட்டும் பணிந்து பேசுவது இலங்கையின் மதிப்பைக் குறைக்கவே வழிவகுக்கும். இலங்கை இவ்வாறு செய்தது ஆயுதம் பெறும் நோக்கிலேயே என்பது வெளிப்படை எனினும், அதற்காக பாகிஸ்தான் மக்களின் உரிமைகளை அடகுவைப்பது நியாயமா என்ற கேள்வியும் எழுகிறது. அதற்கு விடையானது எந்த விலையைக் கொடுத்தாவதும் யுத்தத்தை வெல்லவேண்டும் என்பதே.

இந்தியாவானது ஆயுத, இராணுவ உதவிகளை இலங்கைக்கு வழங்கிவருகிறபோதும், அது குறித்து இலங்கைக்குத் திருப்தி இல்லை. தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் ஈழஆதரவினால் இந்தியாவை சந்தேகக்கண் கொண்டே இலங்கை பார்க்கிறது. ஆனால், இந்தியா உறுதியான புலி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருப்பது தெரிந்த விடயமே! அதை இலங்கை மட்டும் ஏற்க மறுப்பது இலங்கையின் கடும்போக்காளரின் புத்திசுவாதீனமின்மையையே காட்டுகிறது. சரித்திர காலத்தில் சோழ, பாண்டிய மன்னர்களின் இலங்கை மீதான படையெடுப்புக் காலம் தொட்டு இந்தியாவை நம்பமுடியாத ஒரு 'மனநோய்' சிங்கள சமூகத்தைப் பீடித்துள்ளது. அதன் வெளிப்பாடே பாகிஸ்தான் மீதான பக்கச்சார்பாகும்.

2000ஆம் ஆண்டு மே மாதம் யாழ்ப்பாணத்தைப் புலிகள் கைப்பற்றத் தயாரானவேளை மல்டிபரல்களை உடனடியாக வழங்கி உதவியது பாகிஸ்தான். வாஜ்பாய் அரசு அமைச்சரவையைக் கூட்டி ஜோர்ஜ் பெர்னாண்டஸ், வைகோ ஆகியோரைச் சமரசப்படுத்தி தலையிடத் தயாராவதற்கிடையில் பாகிஸ்தான் முந்திக்கொண்டு மல்டிபரல் ஏவுகணைகளை வழங்கியது. எனினும், இந்தியா ஆயுதங்களை வழங்காமல் புலிகளுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்ததாகக் கூறப்பட்டது. அதாவது,

எஸ்.சுரேந்திரஜித்

பாகிஸ்தான் மல்டிபரல்கள் மூலம் சாதித்ததை இந்தியா ஒரு எச்சரிக்கை மூலம் செயற்படுத்தியது. மல்டிபரல்களுக்கு பயந்தல்ல, இந்திய எச்சரிக்கையைக் கருத்திற்கொண்டே புலிகள் பின்வாங்கினர் என்றும் கருதப்பட்டது. அந்தளவுக்கு இந்தியாவின் வலிமை பாரியது. இவ்வாறான ஓர் எச்சரிக்கை மூலமே 1983 ஜூலை கலவரங்களை இந்திராகாந்தி தடுத்து நிறுத்தியமை நினைவுகூரத்தக்கது.

இந்தியாவின் இந்த வலிமையுடன் பாகிஸ்தானின் வலிமை என்பது பூஜ்ஜியமே. அத்தகைய பாகிஸ்தானை அரவணைத்துக்கொண்டதன் மூலம் இராஜதந்திரத் தற்கொலை ஒன்றையே இலங்கை புரிந்துகொண்டுள்ளது. மூழ்கப்போகும் தோணியில் காலைவைத்துள்ளோம் என்பதை இலங்கை விளங்கிக்கொள்ள வெகுகாலம் பிடிக்காது.

பாகிஸ்தானுடன் கைகோப்பது இலங்கைக்குப் புதிதல்ல. எண்பதுகளில் ரொனால்ட் றேகன் - ஸியா உல் ஹக் - ஜெயவர்த்தன அணி சேர்க்கை குறிப்பிடத்தக்கது. ஆனால், இந்தமுறை முஷாரப் - மஹிந்த கூட்டணியில் சேர ஜோர்ஜ் புஷ்ஷினால் முடியவே முடியாது. பாகிஸ்தானையும் தலிபானையும் நம்பி மோசம்போன றேகனுடைய தவறை புஷ் செய்யமுடியாது. பாகிஸ்தான் எப்போதுமே எந்த நாட்டுக்கும் நம்பகமான கூட்டாளியாக இருந்தது கிடையாது.

பத்தித் தீப்பு

அமெரிக்காவுடன் சினேகம் பூண்ட அதேநேரம் தலிபானை வளர்த்து அமெரிக்காவின் முதுகில் குத்தியதே பாகிஸ்தான்தான். மறுபுறம் இந்தியாவானது தனது நட்பு நாடுகளுக்கு ஒருபோதுமே துரோகம் இழைத்த வரலாறு கிடையாது. சோவியத் யூனியனுடனான நட்பை இப்போதும் ரஷ்யாவுடனும் தொடர்வது இதற்குச் சான்று.

முஷாரப்பின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன. மக்கள் வாக்குகளால் அரியணை ஏறமுடியாதவரே முஷாரப். பாகிஸ்தானுடன் ஒப்பிடும்போது இலங்கையில் ஓரளவாவது ஜனநாயகம் பிழைத்திருக்கிறது எனலாம். மஹிந்த ராஜபக்ஷ எவ்வாறானவராக இருந்தாலும் மக்களின் வாக்குகளால் ஆட்சிக்குவந்தவர் ஆவார். அத்தகையவர் ஜனநாயகம் என்னவென்று தெரியாத முஷாரப்புடன் சேரும் முட்டாள்தனத்தை நிகழ்த்தியுள்ளார்.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். இலங்கையின் உள்விவகாரத்தில் மேற்கு நாடுகள் தலையிடக்கூடாது எனக் கூச்சலிடும் சிங்கள கடும்போக்காளர்கள் பாகிஸ்தான் மக்களின் உரிமைகள் மீறப்பட பச்சைக்கொடி காட்டுவது என்ன நியாயம் என்பதே அது. இது பாகிஸ்தானின் உள்விவகாரத்தில் தலையிடுவதே அன்றி வேறென்ன? 'தெருத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு அடிக்கும்' விதமாக பாகிஸ்தான் மக்களின் உரிமைகளைப் பலியிட்டு தனது நாட்டில் இரத்தம் குடிக்கும் வெறியாட்டத்துக்கு வழிதேடிக்கொண்டுள்ளது இலங்கை அரசு.

தெற்கே திரும்பும்...

(4 ஆம் பக்க தொடர்ச்சி)

இராணுவப் பூதத்தின் உச்சந் தலையில் ஆப்பாக இறங்கியிருக்கிறது. இந்த மண்டை அடி சிங்களம் கட்டிய கற்பனைகள், கண்டு வந்த கனவுகள் அத்தனையையும் அடியோடு கலைத்திருக்கின்றது. அநுராதபுர மண்ணிலே எம்மினிய வீரர்கள் ஏற்படுத்திய இந்தப் பேரதிர்விலிருந்து தேசம் இன்னும் மீண்டெழவில்லை. ஈழத்தின் எல்லையைத் தொட்டுவிட்ட இந்த வீரர்களின் உயர்ந்த உன்னத அர்ப்பணிப்பு சிங்கள தேசத்துக்கு ஒரு செய்தியைச் சொல்கிறது. அதாவது,தமிழரை அழிக்க நினைப்போருக்கு அழிவு நிச்சயம் என்பதோடு, இந்த மாவீரர்கள் பற்றவைத்துள்ள விடுதலைத் தீயின் எரிதாக்குதல்களிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தாலும் தப்பிவிட முடியாது என்பதுதான் அது." - என்று பிரபா கூறியிருந்தார்.

அத்துடன் இன அழிப்புப் போரைத் தொடரும் இலங்கை அரசு அதன் பாரதூரமான விளைவுகளை விரைவில் அனுபவித்தே தீரும் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இப்போது கொழும்பில் மீண்டும் குண்டுத் தாக்குதல்கள் ஆரம்பித்திருக்கின்றன.

நீண்டகாலமாக இவ்வாறான மிகப் பெரிய குண்டுத் தாக்குதல்கள் இடம்பெறாதமை இலங்கை அரசுக்கு பெரும் ஆறுதலாகவே இருந்தது. இதனால் தொடர்ந்தும் வன்னி மீது வான் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு புலிகளை மேலும் அடக்கி ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்றே அரசு செயற்பட்டுவந்தது. அரச பிரதிநிதிகளும் தந்திரமான முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார்கள்.

எனினும் இவற்றுக்கெல்லாம் ஆப்பு வைத்ததுபோல இப்போது கொழும்பில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. இதனால் அரசுத் தலைமை ஆடிப்போய் அதிர்ச்சியில் உறைந்திருக்கின்றது. அத்துடன் கொழும்பு வாழ் மக்களுக்கும் ஒரு பீதியான வாழ்க்கையை இந்தக் குண்டு வெடிப்புகள் ஏற்படுத்தியுள்ளன.

யுத்தம் இப்போது மெதுவாகத் தெற்கு நோக்கித் திரும்பிக்கொண்டிருக்கிறது. இதனால் அதிகம் பாதிக்கப்படப் போகின்றார்கள் தெற்குவாழ் மக்களே. தமிழ் மக்கள் படும் யுத்த வேதனைகள் இனி அவர்களுக்கும் ஏற்படுமா? என்ற கேள்வி இப்போது அங்கு எழுந்திருக்கின்றது.

எனவே அரசுத் தலைமை விரைவில் ஒரு சரியான தீர்வை முன்வைத்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் தொடரப்போவது பெரும் அழிவுகளே.

தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடரொளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை -11 இன் விடைக்குறிப்புக்கள்.

ஆசிரியர்: திரு.எஸ்.கபிலன்
(வவுனியா மாவட்ட பிரபல ஆசிரியர்.)

01. 1) 4ம் தர மாணவர்கள்
2) மீன் பிடிக்கும் காட்சி, படகுகள் உலாவரும் காட்சி
3) அபிநாத் 4) அபிநாத் 5) கழுதை, மீன்
02. 1) ஓரம் 2) சிரித்தாள் 3) அந்தி/பின்னேரம் 4)இலட்சியம்
03. 1) இங்கு 2) சில 3) கீழே 4) பொய்
04. 1) A 2) A 3) C 4) A
05. 1) 548 2) 288 3) 62
06. 1) D 2) D 3) C 4) D
07. A) 70 B) 21 C) 12 D) 24 E) 3
08. 1) 7500g 2)100cm 3) 1000ml 4) 5000m 5) 49 நாட்கள்
09. 1) ரூ.160 2) ரூ.175 3) 31250ml 4) ரூ. 240 5)ரூ 640
10. 1) 310 2) 38 3) 1056 4) 454
11. 1) த - குரங்கு
ஆ- Monkey
2) த - கிவி
ஆ- Kiwi
3) த - தோடம்பழம்
ஆ- Orange
4) த - முன்னால் பாதை திருத்தவேலை.
ஆ- Road Repairing Ahead
12. 1) Sun 2) Carpenter
13. 1) தொழிற்சாலை 2) வானம்
14. பொருத்தமான கருத்துள்ள திருத்தமான ஐந்து வாக்கியங்கள்.

மணமகள் தேவை

தனியார் வங்கியில் அதிகாரியாகப் பணிபுரியும் ஐம்பது வயது, முன்னர் திருமணமாகாத இந்து உயர்குல மாப்பிள்ளைக்கு உறவினர்கள் நாற்பது வயதுக்கு உட்பட்ட இந்து உயர்குல மணப் பெண்ணைத் தேடுகின்றனர்.

விளம்பரதாரர் 123
இல.85, ஜெயந்குமல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.

விற்பனைக்கு

நுகேகொடயில் சகல வசதிகளுமுள்ள அமைதியான சூழலுள்ள இடத்தில் அருகருகேயுள்ள இரண்டு பழைய வீடுகளுடன் கூடிய 18.5 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு.

விலை ரூ. 28 மில்லியன்
(Negotiable)
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம்:- 2869367

SCHOOL OF ENGLISH

SPOKEN ENGLISH
DURATION : 02 MONTHS
COURSE FEE : Rs.7500.00

NEW BATCHES ARE COMMENCING LIMITED SEAT BATCHES

BEGINNERS ENGLISH
DURATION : 02 MONTHS
COURSE FEE: RS. 7500.00

IELTS
DURATION : 05 WEEKS
COURSE FEE:RS 8500.00

DIPLOMA IN ENGLISH
DURATION : 02 MONTHS
COURSE FEE : RS. 7500.00

ADVANCED DIPLOMA IN ENGLISH
DURATION :02 MONTHS
COURSE FEE :RS 7500.00

THE PROGRAMMES ARE DESIGNED TO CATER THE REQUIREMENTS OF STUDENTS WITH DIFFERENT KNOWLEDGE. WE MAKE THE STUDENTS TO LIVE IN ENGLISH. JOIN US AND YOU WILL FEEL ENGLISH.

SCHOOL OF COMPUTING

CERTIFICATE COURSE IN MICROSOFT OFFICE
DURATION : 01 MONTH
COURSE FEE : RS. 4000.00

DIPLOMA IN COMPUTER STUDIES
DURATION : 02 MONTHS
COURSE FEE : RS. 6500.00

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
DURATION : 03 MONTHS
COURSE FEE : RS. 8500.00

ADVANCED DIPLOMA IN COMPUTER STUDIES
DURATION : 04 MONTHS
COURSE FEE : RS. 13 500.00

CLASS TIMINGS CAN BE ARRANGED TO THE CONVENIENT OF STUDENTS

British College of Business Studies
32,HAMPDEN LANE, COLOMBO-06
TEL : 2553106 FAX : 2365529

YOUR GATEWAY TO A BRIGHTER FUTURE

லிங்கொல்ன் கல்லூரி மலேசியா

www.lincoln.edu.my E-mail: info@lincoln.edu.my

நேர்சிங் - நாதியியல்
ஹோட்டலும் ஹோட்டறிங்கும்
பொறியியல் (இலத்திரனியலும், இலத்திரனியல் சாதனங்களும்)
கம்பியூட்டர் புறோக்கிராமிங்
வணிக நிர்வாகம்
மல்ரிமீடியா

மலேசியா

அவுஸ்திரேலியா
இங்கிலாந்து
அமெரிக்கா
நியூசிலாந்து
ஐரோப்பிய நாடுகள்
கனடா

உங்கள் தகைமைக்கேற்ற புலமைப்பரிசில் வழங்கப்படும்

08-12-2007 வரை அதிபரை இலங்கையில் சந்தித்து நேரில் பதிவு செய்யலாம்.

* தங்குமிட வசதியுடன் உள்ளடக்கப்பட்ட மிகக் குறைந்த கல்விக் கட்டணம்.
* சகல வசதிகளையும் கொண்ட மேல்நாட்டு நாகரீக குடியிருப்புக்கள்.
* பகுதிநேர வேலைவாய்ப்புக்கள். IELTS,TOFEL தேவையில்லை.
* VISA பெறுவதற்கு நேர்முக பரீட்சை தேவையில்லை.

அனுமதிக்கான குறைந்தபட்ச தகுதி
க.பொ.த.(சாதாரண்தரம்)

ஆலோசனைக் காரியாலயம் :
LINCOLN COLLEGE STUDENT COUNCIL,
NO. 399, 2nd FLOOR GALLE ROAD, COLOMBO 04.
(வோல்வோ கம்பனிக்கு முன்னால்)
TEL/FAX : 0112 552564, 0773 441523,
உயர் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றது :
KP(JPS) 5195 / IPTS/ 1222JLD 11 (4)

இலவச விரிவுரை வகுப்புக்கள்
யாழ்ப்பாண ஏஜென்ற்:
எஸ்.சிவகிரிபன்,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
தொடர்பு:- 077 5212703

சமஷ்டி

அத்தகைய தீர்வுத் திட்டத்தை கணக்கில் எடுக்கும் சிந்தனையே மஹிந்தருக்கு இருந்ததில்லை

''தென்னிலங்கை அரசியல் தலைமைகள் சிங்களப் பேரினவாதச் சகதிக்குள் வீழ்ந்து கிடக்கின்றன. சிங்கள - பௌத்த பேரினவாதக் கருத்தாதிக்கமே தென்னிலங்கையின் தேசிய சித்தாந்தமாக சிங்கள மனிதனின் மனவமைப்பைப் பற்றிப் பிடித்து சிறை வைத்திருக்கின்றது. இந்தச் சிறைக்குள் இருந்து வெளியே வரும் சுய சிந்தனைத் தெளிவும், அரசியல் திடசங்கற்பமும், நீதி - நியாயம் மீதான பற்றுறுதியும் கொண்ட எந்த அரசியல் தலைவர்களும் இன்று தென்னிலங்கையில் இல்லை.'' - என்றார் பாலசிங்கம்.

அதனால், நடப்புப் போக்குக்குள்ளேயே தங்கள் காரியங்களை - இலக்குகளை - சாதித்து விடும் எத்தர்களாகவே எல்லா சிங்களத் தலைவர்களும் இருக்கின்றார்கள். இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவோ வேறுபட்டவர்கள் அல்லர் என்றும் அவர் விளக்கினார்.

ஆனால், அன்றைய நிலையில் எனது கருத்து நிலைப்பாடு சற்று வேறாக இருந்தது. என்னோடு தனித்து இருந்து ஆற, அமர சுமார் 45 நிமிடங்கள் மனம் விட்டுப் பேசியவர் என்ற காரணத்தினாலோ என்னவோ எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ குறித்து வித்தியாசமான மனப்பதிவு அந்த முதல் சந்திப்பை அடுத்து எனக்கு ஏற்பட்டிருந்தது.

சமாதான தேவதையாக வேடம் பூண்டு ஜனாதிபதியானதும் போர் வெறித்தீவிரத்தை தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்ட சந்திரிகா குமாரதுங்கவிலிருந்தும் -

அமைதி முயற்சித் தீர்வில் ஆர்வம் காட்டுபவராகத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டு பேச்சு மேசையில் சர்வதேச இராஜதந்திர வலைப்பின்னல் மூலம் தமிழர் தரப்பைச் சிக்கவைக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிலிருந்தும் -

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வேறுபட்டவர் போல - அப்பாவி அரசியல்வாதி போல - எனக்குப் பட்டதை, பாலா அண்ணனுடனான அந்தத் தொலைபேசி உரையாடலில் நான் கோடி காட்டினேன்.

பாலா அண்ணன் நகைத்துக் கொண்டே ஒரு கேள்வியை என்னிடம் எழுப்பினார்.

''இவ்வளவு தூரம் மஹிந்த பற்றிப் பேசுகின்றாயே...! எந்தச் சந்தர்ப்பத்திலாவது தமிழர்களுக்கு உரியதைக் கொடுத்து நியாயம் செய்ய வேண்டும் என்றோ அல்லது நடைபெற்று வரும் அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் திருப்புவதற்கு பயனுள்ள நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டும் என்றோ மஹிந்த ராஜபக்ஷ உன்னிடம் கூறினாரா?'' - என்று கேட்டார் அவர்.

''இல்லை'' என்ற பதில் என்னிடமிருந்து திட்டவட்டமாக வந்தது.

''அதுதான் சிங்களத் தலைவர்களின் போக்கு. அதற்கு மஹிந்தரும் விதிவிலக்கல்லர். எது யதார்த்தமோ அது பற்றித்தான் அவர் பேசுகின்றார். தமது அரசியலுக்கு எது அவசியமோ, எது தேவையோ அது குறித்து மட்டும்தான் அவர் பேசுகிறார். அதைக் கண்டு நாம் ஏமாந்து விடக்கூடாது. இப்படி வெளிப்பகட்டுப் பேச்சுகளுக்கு எடுபட்டு எமது முன்னைய தலைவர்கள் ஏமாந்தமைதான் எமது கடந்தகால அரசியல் வரலாறு.'' - என்றார் பாலா அண்ணன்.

பிற ஒப்பீடு ஒன்றையும் அந்தச் சந்தர்ப்பத்தில் பாலா அண்ணன் குறிப்பிட்டார் என்று எனக்கு ஒரு நினைவு.

தமிழருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவதற்கான திட்டம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னைய அரசு 'பிரதேச சுயாட்சித் திட்டம்' என்ற பெயரில் வெளியிட்டது. நிதி, சட்டம் - ஒழுங்கு, நில உரிமை, கல்வி போன்ற விடயங்களில் கணிசமான அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கும் இந்த யோசனைகளை முற்போக்கானதும், புரட்சிகரமானதும் என்றும் 'தமிழர்கள் கனவிலும் காண முடியாத அளவுக்கு ஆட்சி அதிகாரப் பகிர்வு கொண்டது' என்றும் சந்திரிகா அரசு விமர்சித்தது. இந்த யோசனைகளை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு நகல் ஒன்றை சந்திரிகாவின் அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது, அச்சமயம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இதே ரணில் விக்கிரமசிங்கதான் அதை சபைக்குள்ளேயே கிழித்து எறிந்து தீயிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டிய பாலா அண்ணன், இன்று அதே ரணில் அமைதிப் பேச்சு, சமாதான முயற்சி, அதிகாரப் பகிர்வு, சமஷ்டித் தீர்வு என்று வாலைச் சுருட்டிக்கொண்டு பேச்சு மேசைக்கு அடங்கிவந்திருக்கிறார் என்பதைத் தமக்கேயுரிய 'நையாண்டி' வார்த்தைகளில் குறிப்பிட்டுச் சொன்னார்.

''அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்!'' - என்றார் சிலேடையாக அவர்.

''எங்கள் தம்பிமாரின் அடியில் இன்று வேறு வழியின்றி அடங்கி வந்திருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்ட அவர், அரசியல் யதார்த்தம் எதுவோ அதன் வழியில் செயற்படுவதே சிங்களத் தலைவர்களின் போக்கு என்று குறிப்பிட்டதுடன் அதில் மஹிந்தரும் வித்தியாசமில்லாதவர் என்றார்.

''இன்றைய அரசியல் நிர்ப்பந்தங்கள், சந்திரிகாவுக்கு மறுபுறத்தில் மஹிந்த ராஜபக்ஷவை நிறுத்தியிருக்கின்றன. அதனால், சந்திரிகாவுடன் அணி சேருபவர்கள் குறித்து மஹிந்தருக்குக் கசக்கின்றது. அதனால்தான் சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டுச் சேர்வதை அவர் வைகிறார். நாளை தமக்குத் தேவைப்பட்டால் அதே ஆட்களுடன் மஹிந்தரும் அணி சேர பின்னிற்கமாட்டார். ஏனென்றால், அவரும் அரசியல் கட்டாயங்களுக்கு அடிபணியும் சராசரி அரசியல்வாதிதான் - அரசியல் யதார்த்தவாதிதான்'' - என்றார் பாலா அண்ணன்.

அவர் அன்று குறிப்பிட்ட அதே வார்த்தையைத்தான் சுமார் இரண்டரை வருடங்கள் கழித்து - 2005 நவம்பர் 27ஆம் திகதியன்று - தலைவர் பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையிலும் நான் அவதானித்தேன்.

''கொள்கை ரீதியாக எமக்கும் அவருக்கும் (ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும்) மத்தியிலான இடைவெளி மிகப்பெரியது. எனினும், அவர் நடைமுறை அரசியலில் நம்பிக்கை கொண்ட யதார்த்தவாதி என்று கருதப்படுவதால் சமாதான வழிமுறையை எவ்விதம் கையாளப் போகின்றார் என்பதையும், தமிழ் மக்களுக்கு எவ்விதம் நீதி வழங்கப்போகின்றார் என்பதையும் முதலில் நாம் அறிந்து கொள்வது அவசியம்.'' - என்று அந்த உரையில் குறிப்பிட்டிருந்தார் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

தலைவர் பிரபாகரனின் கருத்து நிலைப்பாட்டை உள்வாங்கி, அவருக்கான மாவீரர் தின உரையை தமிழில் தயாரித்து, ஆங்கில மொழி பெயர்ப்பையும் சேர்த்துச் செய்து கொடுக்கும் அந்தப் பெரும் பணியை வருடாந்தம் மேற்கொண்டு வந்த பாலா அண்ணன் கடைசியாகத் தயாரித்த வருடாந்த மாவீரர் தின உரையில்தான் இந்த 'யதார்த்தவாதி' என்ற பதம் இடம்பெற்றிருந்தது.

* * *

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் அவரைப் பல தடவைகள் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. சில சமயங்களில் தனித்தும் அவருடன் நீண்ட நேரம் உரையாடியிருக்கிறேன். அரசியல் பற்றியும் விரிவாகப் பேசக் கிடைத்திருக்கின்றது.

எந்தச் சந்தர்ப்பதிலும் அவர் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சமஷ்டி வரை விட்டுக் கொடுக்கத் தாம் தயார் என்று கூறவேயில்லை.

அவரது பேச்சுகள் எல்லாம் மாகாண சபைகளுக்கு இன்னும் கொஞ்சம் அதிகாரங்களைக் கொடுத்து, விடுதலைப் புலிகளுக்கும் அரசியல் பதவி அலங்காரங்களை வழங்கி, மயக்கி, பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிடலாம் என்ற குறுகிய வட்டத்துக்குள்ளேயே இருந்தன.

எச்சமயத்திலும் இதற்கு அப்பால் போகும் சிந்தனையோ, பேச்சோ அவரிடமிருந்து வெளிப்பட்டதாக எனக்கு நினைவு இல்லை.

தமிழருக்குத் தீர்வு எதையும் வழங்குவதோ, யுத்தத்தையும், போழிவுகளையும் நிறுத்துவதோ அவருக்கு முக்கியமான - கரிசனைக்குரிய - விடயங்களாகப் படவேயில்லை. இவற்றுக்கு அப்பால் தென்னிலங்கையில் தனது ஆதரவுத் தளத்தைத் தக்க வைப்பதில்தான் அவரது கவனம் எப்போதும் இருந்தது.

இது குறித்து ஒரு தரம் அவரிடம் நேரடியாகக் கேட்டு நான் வாங்கியும் கட்டிக்கொண்டேன்.

''இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்காமல் காலத்தை இழுத்தடிக்கின்றீர்கள். நீங்கள் நியமித்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு இன்னும் உங்கள் கட்சியே யோசனை எதையும் முன்வைக்கவில்லை. (அச்சமயம் ஸ்ரீல.சு.கட்சி யோசனைத் திட்டம் எதையும் வெளியிடவில்லை. பின்னாளில்தான் ஏற்கனவே புளித்துப்போன - தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட - மாவட்டசபை முறைமையை ஜனாதிபதி மஹிந்தரின் சுதந்திரக் கட்சி தனது தீர்வு யோசனைத் திட்டமாக முன்வைத்தது). காலத்தை இப்படி இழுத்தடிக்காமல் உங்கள் கட்சியின் திட்டத்தைச் சமர்ப்பித்து, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை வேகமாக இயங்கவைத்துத் தென்னிலங்கையின் தீர்வு யோசனைத் திட்டத்தை வெளியிட்டால் ஏதேனும் ஒரு முடிவு எட்டுமல்லவா?'' - என்று அலரி மாளிகையில் இடம்பெற்ற ஒரு சந்திப்பின்போது வேறு சில பத்திரிகைத்துறை நண்பர்களுக்கு முன்னால் வைத்து, அதிகாரப் பிரசங்கித் தனத்துடன் - படு 'காஷுவலாக' - நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகக் கேட்டு வைத்தேன்.

திரும்பி என்னை ஆழ ஊடுருவி, முறைத்துப் பார்த்த அவர், நெத்தியடியாக எனக்குப் பதில் தந்தார்.

அந்தச் சூடான பதிலின் விவரம் என்னவென்பதை அடுத்த வாரம் பார்ப்போமா?

(தொடரும்)

ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - X

- வித்தி -

சுடர்ஒளி

டிச.02 - டிச.08. 2007

85, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்

கடந்த 28ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற இரு குண்டுவெடிப்புச் சம்பவங்களும் கொழும்பை அதிர்ச்சியில் உறையவைத்துள்ளன.

முதலாவது சம்பவம் அன்றுகாலை நாரஹேன்பிட்டியவில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு அலுவலகத்தினுள் இடம்பெற்றது.

தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் நடத்திய இந்தத் தாக்குதலில் அமைச்சர் டக்ளஸின் பொதுஜனத் தொடர்பு அதிகாரி கொல்லப்பட்டார்.

அதே தினம் மாலை நுகேகொடையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 40இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் நடந்த அடுத்தநாள் கொழும்பில் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள் மூடப்பட்டன. போக்குவரத்துகள் குறைந்து விடுமுறை தினம் போன்று கொழும்பு காட்சியளித்தது. நீண்டநாட்களின் பின்பு கொழும்பில் குண்டுவெடிப்புகள் ஏற்படுத்திய பயங்கரம் இது. இலங்கை மற்றொரு ஈராக்காகவோ ஆப்கானிஸ்தானாகவோ மாறப்போகிறதா என்ற அச்சத்தை அன்றையதினம் பலரிடம் காணக்கூடியதாக இருந்தது.

யுத்தம் புதிய ஒரு வியூகத்துக்குள் செல்வதையே இவை கோடிகாட்டுகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள்.

வன்னிப் பகுதியில் வான்படைத் தாக்குதல்கள் மற்றும் ஆழ ஊடுருவும் பிரிவினரின் கிளைமோர் தாக்குதல்களில் அப்பாவிகள் தினமும் பலியாகிவருகின்றனர். தற்பொழுது தென்னிலங்கையில் குண்டுகள் வெடிக்கின்றன. இதிலும் அப்பாவிகளே பலியாகின்றனர்.

அப்படியானால் இவை தொடர்கதையா என்ற கேள்வி எழுகிறது.

அரசாங்கத்துக்கு சமாதானத்தில் நாட்டம் இல்லை. போர் வெறியில் சந்நதம் ஆடுகிறது. ராஜபக்ஷ சகோதரர்கள் யுத்த அட்டவணை ஒன்றைத்தயாரித்துச் செயற்படுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தப் போரில் நாட்டில் பேரழிவுகள் ஏற்பட்டாலும் அரசாங்கம் கவலைப்படப்போவதில்லை.

நாட்டின் எப்பகுதியிலும் எந்நேரத்திலும் தாக்குதல்கள் நடக்கலாம் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், சகோதரருமான பஸில் ராஜபக்ஷவே கூறுகிறார்.

ஏ-9 பாதையை மூடியது மூலமும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு தடை விதித்தது மூலமும், உலகநாடுகளில் புலிகள் இயக்கத்துக்கு தடை விதித்தது மூலமும் புலிகளின் நிதி வளத்தையும், ஆயுத வளத்தையும் நசுக்கிவிட்டதாக அரசு கருதுகிறது. கிழக்கில் தான் மேற்கொண்ட படை நடவடிக்கையால் புலிகள் பலம் குன்றிவிட்டார்கள் என்கிறது.

ஆகவே, அரசாங்கம் இனிமேல் பேச்சு வார்த்தைகளுக்கு வரமாட்டாது என்பது நிச்சயம். யுத்தம் மூலம் தீர்வு காண்பதிலேயே அரசாங்கம் முனைப்பாக இருந்து வருகிறது. பாதுகாப்புத் துறைச் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷ "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாம் கொல்வது உறுதி அவரது சாவு நெருங்கிவிட்டது" என்கிறார்.

இது அரசாங்கத்தின் நோக்கத்தை நன்கு தெளிவுபடுத்துகிறது. அரசாங்கம் ஒன்றை மனதில் கொள்ளவேண்டும்.

யுத்தம் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது யுத்தம் மூலம் விடுதலைப் புலிகளைப் பலமிழக்கச் செய்து விட்டு தான் விரும்பிய ஒரு தீர்வுப் பொதியைத் திணிப்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வுப்பொதி ஒன்றினால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணமுடியும். இப்படியான தீர்வு ஒன்றுக்கு வருவதற்கு அரசாங்கம் தயார் நிலையில் இல்லை என்றால் தற்பொழுது வடக்கு கிழக்கில் மட்டும் அல்ல கொழும்பிலும் தென்னிலங்கையின் அனைய பகுதிகளில் இடம்பெறும் அவலங்களுக்கு அரசே பொறுப்பேற்கவேண்டும்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான கெடிபிடிகளால் கிழக்கில் அகதிகளாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் வாழ்க்கை கேள்விக்குறி....!

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தமது கிராமங்களில், பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டனர். குறிப்பாக குண்டுத்தாக்குதல், விமானத்தாக்குதல்கள் மூலமே வெளியேற்றப்பட்டார்கள். இதனால் மக்கள் தம்முடன் எதனையும் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் உடுத்த உடையுடன் வெளியேறினர். இந்த மக்கள் இராணுவ நடவடிக்கையின்போது தமது உறவுகளையும் இழந்துள்ளனர். வகை தொகையின்றி பலர் இறந்தும் காயமடைந்துமுள்ளனர். எனினும் இவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்தோ அன்றேல் நிவாரண உதவிகளை மேற்கொள்வது தொடர்பாகவோ எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை.

இந்த நிலையில் இடம் பெயர்ந்த இவர்கள் அண்மைக் காலங்களில் மீண்டும் அவர்களுடைய கிராமங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ள போதிலும் மூதூரில் சில இடங்களில், பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த இது வரை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை.

தற்போது கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் பெரும் மனிதாபிமான நெருக்கடி தோன்றும் அபாயமேற்பட்டிருப்பதாக கவலை வெளியிடப்படுகின்றது. விடுதலைப் புலிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனங்கள் உதவியளிப்பதாக நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. குற்றம் சாட்டியிருந்தது. இதனையடுத்து யுனிசெப் நிறுவனம் தனது பணியாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தது. இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான அச்சுறுத்தல் மற்றும் கெடுபிடிகள் காரணமாக நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் கூடுதலாக பாதிக்கப்படுகின்றனர்.

மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கும் மீள்குடியேற்றபடாத மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டியவை. குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களே! இப்படியான நிலையில் நிறுவனங்களின் நடவடிக்கைகள் பாதிப்படைவது,

மூதூர் கிழக்கான்

போரினால் அல்லல்படும் தமிழ் மக்களின் வாழ்க்கையைக் குழிதோண்டி புதைப்பதாகவே உள்ளது. கிழக்கு மாகாணத்தை பொறுத்த மட்டில் இராணுவ நடவடிக்கையினால் தமிழ் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய சூழலில் அவர்கள் தங்கள் பொருளாதாரத்தை இழந்து அவல வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

(25ஆம் பக்கம் பார்க்க)

நீதி கிடைக்குமா?....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதத்தினரும் இவ்வளவு காலமும் அனுபவித்துவந்த சமய வழிபாடுகளோடு ஒட்டிய சில உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டு- மார்க்க சுதந்திரம் பறிக்கப்படுவது போன்ற உணர்வலை மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதிலும் விசேடமாக முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிருப்தியும் விசனமும் தோன்றியுள்ளது. இவ்விடயத்தை முஸ்லிம் அரசியல் தலைமைகளில் பெரும்பாலானோர் கண்டும் காணாமலும் வாழாவிருக்கின்றனர். அரசில் ஒட்டிக் கொண்டு அமைச்சர்களாகப் பதவி வகித்து வருகின்ற முஸ்லிம் தலைமைகள் சிலர் எல்லா விடயங்களிலும் போலவே இவ்விவகாரத்திலும் வாய்பொத்தி- மௌனித்து நிற்கின்றனர்.

அமைச்சர் சேகு கொதிப்பு!

இருந்த போதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பில் விசேட பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து அமைச்சரவையின் உதவியைக் கோரியுள்ளார். கடந்த புதன்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பத்திரத்தை சமர்ப்பித்து முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தலைவர் ஹக்கீமின் கருத்துகளை உள்வாங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களில் இவ்விடயம் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு இணங்கியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தேசிய ஐக்கிய முன்னணியை (நுஆ) பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர் சேகு இஸ்ஸதீன், ஒலிபெருக்கிக் கட்டுபாட்டுச் சட்ட ஏற்பாட்டைக் கடுமையாகக் கண்டித்து- விசனம் தெரிவித்துள்ளார். இதன் மூலம் முஸ்லிம்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருக்கும் அமைச்சர் சேகு இஸ்ஸதீன் இதற்கு அரசு விரைவில் நியாயம் வழங்க வேண்டும் எனவும், இல்லையேல் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து முஸ்லிம் எம்.பிக்களும் பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசுக் கெதிராக வாக்களிக்க முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சர் அமீரலியின் நியாயம்

ஒலிக்கட்டுப்பாட்டை நீக்கும் வகையில் மாற்றுச் சட்ட ஏற்பாட்டை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கோரும் மகஜரில் கையெழுத்துகளைத் திரட்டும் தீவிர முயற்சிகளிலும் அவர் இறங்கியுள்ளார் என அறிவிக்கப்படுகிறது.

அதேவேளை வேறு சில முஸ்லிம் அமைச்சர்கள் இவ்விவகாரத்தை முஸ்லிம் சமூகம் அலட்டிக் கொள்ளத் தேவை யில்லை எனக் கூறிவருகின்றனர். குறிப்பாக அமைச்சர் அமீரலி இக்கருத்தை வெளியிட்டு வருகின்றார். அதற்கு அவர் மூன்று காரணங்களையும் முன் வைக்கிறார்.

வெலிகமவில் இரண்டு பள்ளிவாசல்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாகவே அவ்விவகாரம் நீதிமன்றம் சென்றது என்பதும் ,அதன் பிரகாரம் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றை விமர்ச்சித்துக் குறைகாண்பது நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டை சுமக்க வேண்டியேற்படும் என்பதும், இத்தீர்ப்பினால் பாதிக்கப்படப்போவது முஸ்லிம் சமூகம் மாத்திரமல்லாமல் சகல மதத்தினருமே என்பதும் அவர் முன்வைக்கும் காரணங்களாகும்.

ஆகையினால், இது தொடர்பில் அரசை விமர்சிப்பது ஏற்புடையதல்ல என்பதும் உயர் நீதிமன்றத் தீர்ப்பால் குறைகாண முடியாது என்பதும், அதனை மேன்முறையீடு செய்ய முடியாது என்பதும், முஸ்லிம்கள் மட்டும் ஏன் இதனைக் பெரிதுபடுத்த வேண்டும் என்பதும் அமைச்சர் அமீரலியின் வாதமாகும்.

எனவே அமைச்சர் சேகு இஸ்ஸதீன் வேறு ஏதோ உள்நோக்கத்தில்தான் அரசில் பழிபோட்டு- முஸ்லீம்களை சீண்டிவிட முயற்சிக்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார். கடந்த ஞாயிறு சக்தியின் மின்னல் நிகழ்ச்சியிலும் அமைச்சர் அமீரலி இதனைச் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் மயோனின் மறுப்பு

ஆனால் அதில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா அமைச்சர் அமீரலியின் கருத்துக்களுக்கு மாறுபட்ட நிலைப்பாட்டையே வெளிப்படுத்தினார். "கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த பதவிக்கு வந்தால் பாங்கோசைக்குத் தடை வரும் என்ற பிரசாரம் முடுக்கி விடப்பட்டிருந்தது.

அதனால் முஸ்லிம் சமூகம் அரசு மீது சந்தேகம் கொள்கிறது. அமைச்சர் சம்பிக்க ரணவக்க, சுற்றாடல் அமைச்சைப் பொறுப்பேற்ற கையோடு, சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில் ஒலிக்கட்டுப்பாட்டு சட்ட மூலத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தமை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கிடப்பில் கிடந்த பள்ளிவாசல் வழக்கை அழுத்தம் கொடுத்து அவசர அவசரமாகத் தூசு தட்டி விசாரணைக்கு எடுத்துக் கொண்டு - உடனடியாக தீர்ப்பு வழங்கியதன் பின்னணியில் பலமான சக்தி ஒன்று செயற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

ஆகையினால், இவ்விடயத்தில் கரிசனையற்று அலட்டிக்கொள்ளாமல் இருக்க முடியாது. அமைச்சர் சேகு இஸ்ஸதீனின் முயற்சி வரவேற்கப்பட வேண்டியதொரு விடயமே. அனைத்து முஸ்லிம் எம்.பிக்களும் ஒன்றிணைந்து இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி - நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முடியும். அதற்கு சகல தரப்பினரும் முன் வர வேண்டும்." என்று பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

அவசரம் தேவை

அதேவேளை இத்தீர்ப்பு அறிவிக்கப்பட்ட குட்டோடு தென்னிலங்கையின் சில பகுதிகளில் ஒலிபெருக்கிகளில் பாங்கு சொல்வது தடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஒலிக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை தலைநகர் கொழும்பில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகமும் ,இயல்பாகவே இருந்து வருகின்ற மார்க்க உணர்வும் தென்னிலங்கை சிங்கள மக்களினால் எந்தளவுக்கு நியாயமாக -சரியாகப் பார்க்கப்படும் என்பது முக்கிய கேள்வியாகும்.

முஸ்லிம்கள் கொண்டிருக்கும் நிலைப்பாடு இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டனப் பேரணிகளை இன்னும் அதிகரிக்கவே செய்யும். அவை தென்னிலங்கை மற்றும் தலைநகர் கொழும்பில் வேறு பல விபரீதங்களை ஏற்படுத்தக் கூடும் என புத்திஜீவிகள் அச்சம் வெளியிடுகின்றனர்.

ஆகையினால் இது தொடர்பில் உடனடியாக அரசு தரப்பில் இருந்து முஸ்லிம்களுக்கு நியாயமான பதில்கள் தரப்பட வேண்டும். அத்தகைய பதில்கள் - வாக்குறுதிகளின் அடிப்படையில் இவ்விவகாரத்துக்கு கூடிய விரைவில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் அதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்றிணைந்த சக்தியாக நின்று அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும்.

SINGAPORE
STUDY IN
MALASYIA, UK, CANADA, CYPRUS

100% visa guaranteed

For jan, 2008 intake

Pathway for your education • Education with best return • With excellent job opportunity

Availble Courses:-
- Business Administration
- Information Technology
- Law
- Hotel Management
- Engineering
- Medicine/ Nursing
- Shiping course
- Els.....

All courses are ailable in any field.

FOR SINGAPORE
- No need IELTS and TOEFL.
- No need of bank balance.
- Fly within 14 working days.
- Accomdation will be provided.
- Part time job opportunities available.
- Fly singapore with a cost of only Rs 50,000/=.
- Free air port pickup.
- PR opportunity for degree holders.

Minimum qualification G.C.E (O/L) guaranteed part time job & Accomodation

Contact : Nikil - 0774286116
Pooja - 0774285699

நீங்களும் பட்டதாரியாவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

சிங்கப்பூர், மலேசியா, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்றவற்றிற்கு STUDENT VISA அடிப்படையில் மாணவர்களை மிகத்துரிதமாக அனுப்பி சர்வதேச அங்கீகாரமுடைய பட்டதாரியாவதற்கான மாணவர்களின் கனவுகளை நனவாக்கும் சகல ஏற்பாடுகளையும் தரமாகச் செய்து தருவதில் தலைநகரின் முன்னணி நிறுவனம் OPEN INSTITUTE OF COLOMBO ஆகும். இந்நிறுவனத்தின் சேவைகளாவன-

[1] துறைசார் நிபுணர்களால் வழங்கும் தரமான ஆலோசனைச் சேவை.
[2] சிங்கப்பூர், மலேசியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிற்கு ஒரு கிழமைக்குள் பயண ஏற்பாடு.
[3] வெளிநாடுகளில் மாணவர்களிற்கான தங்குமிட வசதிகள்.
[4] கற்றலுடன் கூடவே பகுதிநேர வேலைவாய்ப்புக்கள்.
[5] அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இறுதிக் கற்கைகளை [FINAL STUDIES] கற்பதற்கு மாற்றீட்டுத் திட்டங்கள் [TRANSFER SHEME].
[6] சர்வதேச அங்கீகார பட்டதாரிச் சான்றிதழைப் பெற்று மிகக் கவர்ச்சிகரமான சம்பளத்தில் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான உத்தரவாதம்.
[7] TOFEL CLASSES
[8] AAT, CIMA CLASSES

OIC OPEN INSTITUTE OF COLOMBO

No: 40-3/1A, GALLE ROAD, 3RD FLOOR
(ADJOINING TO HSBC WELLAWATTA)
COLOMBO - 06. TEL: 0114992277

WEB: www.oiccitycampus.com E-mail: oiccitycampus@yahoo.com

நீதி கிடைக்குமா?....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் மறுபுறம் அகில இலங்கை உலமா சபை, முஸ்லிம் கவுன்ஸில் உள்ளிட்ட பல்வேறு சமய, சமூக அமைப்புக்களும் பாங்கோசை தொடர்பில் அச்சம் வெளியிட்டு, குறித்த சட்டத்தை ஆட்சேபித்திருந்தன. அதனால் நியாஸ் மௌலவியின் அறிக்கை இவற்றின் முயற்சிகளையும் சிறுமைப்படுத்தி விட்டிருந்தது.

எதிர்ப்புக்குரல் வலுவிழப்பு!

ஜனாதிபதி கலந்து கொள்ளும் வைபவங்கள் மற்றும் அரச உயர் விழாக்களில் இஸ்லாமிய சமயத் தலைவராகக் கலந்து கொண்டு ஆசி வழங்கி வருகின்ற நியாஸ் மௌலவி, அரச தரப்பிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட செய்யத் துணியாத - சொல்ல முன்வராத கருத்துக்களை அறிக்கையாக வெளியிட்டதன் பின்னணி என்ன என்பது எவருக்கும் புரியவில்லை.

மார்க்கம் மற்றும் சமூகம் சார் பாக துணிந்து நின்று குரல் எழுப்பிய முஸ்லிம் தலைமைகளைக் கொச்சைப்படுத்தி - கண்டித்து - அவர்களைக் காட்டிக் கொடுத்து - அவர்களது முயற்சியைத் தவிடு பொடியாக்க வேண்டிய தேவை இந்த மௌலவிக்கு ஏன் ஏற்பட்டது?

இது மிகவும் கவலைக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயமாகும். கடந்த செப்டெம்பர் 09ஆம் திகதி இக்கட்டுரைப் பகுதியில் எழுதப்பட்ட ஒலிக்கட்டுப் பாட்டுச் சட்டம் தொடர்பிலான முதலாவது கட்டுரையிலும் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

எது எவ்வாறாயினும் ஒலி பெருக்கி பாவனைக்கட்டுப்பாடு குறித்து உச்ச நீதிமன்றம் சமீபத்தில் வழங்கிய உத்தரவு இவர்களது முகத்திரையைக் கிழித்து விட்டிருக்கிறது. அதுவும் இரவு பத்து மணி தொடக்கம் காலை ஆறு மணி வரையான காலப்பகுதியிலேயே இக்கட்டுப்பாடு விதிக்கப்படும் எனக்கூறப்பட்டு வந்த போதிலும், நீதிமன்றம் விடுத்திருக்கும் உத்தரவு 24 மணி நேரத்துக்கும் பொது வானதாகவே அமைந்திருக்கிறது.

நீதிமன்ற உத்தரவு

அதாவது எந்தவொரு நேரத்திலும் பாவிக்க முடியாது. ஆனால் இரவு பத்து மணி முதல் காலை ஆறு மணி வரையான காலப்பகுதி தவிர்ந்த பகல் நேரங்களில் குறித்த கட்டடம் ஒன்றுக்கு வெளியே சத்தம் கேட்காதவாறு சிறியளவிலான ஒலிக் கருவியை பாவிக்கமுடியும்.

ஒலிபெருக்கி பாவிப்பது குறித்து அனுமதியை வழங்கும் அதிகாரம் இதுவரை காலமும் பொலிஸாருக்கே இருந்து வந்தது. ஆனால் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் அந்த அதிகாரம் பொலிஸாரிடமிருந்து நீதிமன்றத்துக்கு மாற்றப்படுத்தப்பட்டிருக்கிறது.

காலை ஆறு மணி தொடக்கம் இரவு பத்து வரையான காலப் பகுதியில் நிகழ்வு ஒன்று நிகழ்கின்ற கட்டடத்துக்குள் மாத்திரம் கேட்கக் கூடியதான ஒலிக்கருவியை பாவிப்பதற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மட்டுமே பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே நிபந்தனையின் கீழ் இரவு பத்து மணி தொடக்கம் காலை ஆறு மணி வரை அதி முக்கிய தேவையின் நிமித்தம் இக்கருவியைப் பாவிக்கும் அனுமதியை தமது பிரதேசத்தில் அமைந்துள்ள நீதிமன்றத்திலேயே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த அனுமதியை வழங்குவதை சுற்று வட்டாரத்தில் வசிப்போர் ஆட்சேபிக்காத பட்சத்தில் மாத்திரமே அந்நீதிமன்றம் அனுமதிப் பத்திரம் வழங்க முடியும் என்று உயர் நீதிமன்றம் விடுத்திருக்கும் உத்தரவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பகல் நேரத்திலும் கடை!

உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கும் இத்தீர்ப்பு முஸ்லிம்களின் சமயக் கடமைகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஒலிக்கட்டுப்பாட்டுச் சட்டம் ஃபஜ்ர் (அதிகாலை தொழுகைக்கான) பாங்கு சொல்வதில் மாத்திரமே தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இத்தீர்ப்பு பொதுவாக ஐவேளைத் தொழுகைக்கான பாங்கோசை எழுப்புவதிலும், வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை மற்றும் குத்பாப் பிரசங்கத்திலும் வெகுவான பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்நாட்டில் முஸ்லிம் சமூகத்தினரும், ஏனைய

(06ஆம் பக்கம் பார்க்க)

"உங்களுக்கு வேறுமிருப்பின் தொடர்ந்து வரிக்கவும்"

எமது நாடு சுதந்திரம் அடைந்து 59 வருடங்கள் ஆகின்றன. இந்த நீண்ட வருடங்களில் எமது நாடு முன்னேற்றத்தை நோக்கியா அல்லது வீழ்ச்சியை நோக்கியா பிரயாணம் செய்துள்ளது? எமது நாடு எங்கு சென்றுள்ளது?

எத்தனை சதவீதமான இலங்கையர்கள் எமது நாட்டைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள்?

எமது நாட்டை ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் எங்கு நிற்கின்றன? இந்த நாட்டு பிரஜைகளிடம் இந்தக் கேள்விகளைக் கேட்கவும். எங்கள் வருமானம் மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளது. இந்த நாட்டில் வாழும் மக்கள் இவை பற்றி சிந்திக்கிறார்களா? எமது தலைவர்கள் இந்த பின்னடைவுகள் பற்றி அறிந்துள்ளனரா?

சகல மக்களும் நாட்டிற்காக அன்பு செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

எமது அயல் நாடுகள் மிக வேகமாக முன்னேறுகின்றன. நாமும் அதே வேகத்தில் முன்னேறுவோம்.

நாம் இலஞ்சம், ஊழல், ஏமாற்றல் என்பவற்றை இல்லாதொழிப்போம்.

இந்த குற்றவாளிகளுக்கு சட்டம் தண்டனை வழங்கட்டும்.

எமது நாட்டை நேசிப்போம். உங்களால் முழு நாட்டையும் நேசிக்கமுடியாவிட்டால் பின்வரும் பொருட்களை மட்டும் கருதுங்கள்.

வரையறுக்கப்பட்ட ஹெட்டிகொட நிறுவனம் நூறு வீதமான வேறுபட்ட சித்தாலேப ஆயுர்வேத தயாரிப்புக்களை உற்பத்தி செய்கின்றது. அவர்கள் வைத்திய சாஸ்திர தரத்திற்கான அதி உயர் சர்வதேச விருதுகளை பெற்றனர். எமது 'சித்தாலேப' பொருட்கள் ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா உட்பட 20 நாடுகளுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன.

உங்களைப் புனிதப்படுத்தி உங்களை முழுமையாக பழைய கல்வெட்டுக்களில் இருந்து பெறப்பட்ட முறையில் தயாரிக்கப்பட்ட சித்தாலேப அரிஸ்ட எண்ணெய்கள், கிரித்தா கல்கா, குலி முதலியவற்றுடன் முழுமையாக இணையுங்கள்.

எமது கைதேர்ந்த ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவ ஆலோசனைகளை வழங்குவர்.

ஆயுர்வேத தயாரிப்புக்களை பாவித்து அதனால் ஏற்படும் சுகவாழ்வையும் அமைதியையும் அனுபவியுங்கள்.

சித்தாலேப நிறுவனம் ஆயிரக்கணக்கான ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஜீவனாதாரத்தை அளித்துள்ளது. இந்தத் தொழிலாளர்கள் தங்கள் தொழில் மூலம் தங்கள் பெற்றோர், பாட்டன், பாட்டி, சகோதர, சகோதரிகளை பராமரிக்கிறார்கள்.

நீங்களும் இம்மக்களின் நன்மைக்காக பங்கு கொள்ளுங்கள். உங்கள் நாட்டை நீங்கள் நேசித்தால் சித்தாலேப தயாரிப்புக்களை பாவித்து எமது நாடு முன்னேற உதவுங்கள். இந்தத் தயாரிப்புக்கள் எல்லா சில்லறை வியாபார ஸ்தாபனங்களிலும் கிடைக்கும்.

நன்றி.
சித்தாலேப வைத்தியர்
விக்டர் - ஹெட்டிகொட.

அறிவியல்

ரி.கே.ஆர்

பனிச் சிற்பம்

பனியே அழகுதான். அதுவும் சூரியன உதிக்கும் போது புல் தரையில் மினுமினுப்பதை பார்ப்பது அழகோ அழகு.
அந்த பனியிலேயே சிற்பங்கள் செய்து கலக்குகிறார்கள் கலைஞர்கள். மிக நுணுக்கமாக, கவனமாக செய்ய வேண்டிய விஷயம் இது. இருந்தாலும் பூ, இலை, ஆண்,பெண் என பலவித உருவங்களையும் அட்டகாசமாக பனியில் கொண்டு வந்து விடுகிறார்கள் சிற்பிகள். இப்படி பனியில் தயாரான சிற்பத் திருவிழா பெல்ஜியத்தின் ப்ரூக்ஸ் நகரில் நடைபெற்றது. இதில் ஏராளமான சிற்பிகள் தங்கள் கை வண்ணத்தை காட்டினர்.



முதல் அறிவியல் பத்திரிகை

தொழிற் புரட்சியின் விளைவாக வளர்ந்த அறிவியல் தொழில் நுட்பத்தை விஞ்ஞானிகள் மட்டுமின்றி சாதாரண மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் வாசகர்களுக்கான முதல் அறிவியல் 'சயன்டிபிக் அமெரிக்கா' மாத இதழாக 1845 இல் வெளியிடப்பட்டது. முதலில் இது நாளிதழாகத்தான் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு நாளும் அறிவியல் ஆராய்ச்சிப் பணிகளின் புதிய கண்டுப்பிடிப்புகள் இந்த நாளிதழில் வெளியிடப்பட்டன. அறிவியல், மருத்துவம், கணிதம் என அறிவியல் சார்ந்த அனைத்து துறைகளுக்கும் இந்தப் பத்திரிகை முக்கியத்துவம் கொடுக்கின்றது.

1912 இல் மாதப்பத்திரிகையாக மாறிய 'சயன்டிபிக் அமெரிக்கா' இன்று வரை தங்குதடையின்றி தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றது.

மனித ரோபோ!

ஹோண்டா நிறுவனம் கடந்த 21 ஆண்டுகளாக ஆராய்ச்சிக்கு மேல் ஆராய்ச்சி நடத்தி மனிதனின் ஒவ்வொரு அசைவைப் போலவே செய்யக்கூடிய வகையில் ரோபோ ஒன்றைத் தயாரித்துள்ளது. பெயர் அசிமோ. அதாவது செயல்பாட்டில் மிக நவீன கண்டுபிடிப்பு 'அட்வான்ஸ் ஸ்டெப் இன் இன்னோவேட்டிங் மோபிலிட்டி' என்பதன் ஆங்கிலச் சுருக்கம்தான் அசிமோ. மனித உடலின் சாதாரண இயக்கங்களைச் செய்யக்கூடிய இந்த ரோபோவை உலக அரங்கில் அறிமுகம் செய்ய வெளிநாடுளில் ஹோண்டா நிறுவனம் தொடர் சுற்றுலாவை ஏற்பாடு செய்துள்ளது. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு வந்த அசிமோ, அங்கு ஒரு பெண்ணுடன் கைகுலுக்குகிறது.

இடம்பெயர்வு

சுற்றுச்சூழல் மாசடைதலின் காரணமாக பறவைகளின் இடம்பெயர்வில் தற்போது கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவை பறவைகளின் வாழ்க்கைச் சூழலை கடுமையாக பாதிக்கின்றன. பொதுவாக கண்டம் விட்டு கண்டம் செல்லும் பறவைகள்தான் அதிக அளவில் நோய் எதிர்ப்பு சக்தியை இயல்பாக பெறுகின்றன. பறவைகளின் இடப்பெயர்ச்சி என்பது வெறும் இடம் மாற்றம் அல்ல, உணவுச் சங்கிலியில் முக்கியமான இடத்தை பறவைகளின் இடம்பெயர்ச்சி வகிக்கின்றது. பறவைகளின் இடப்பெயர்ச்சி குறித்து ஆராய்ச்சி செய்யும் பறவையியல் வல்லுநர்கள், ஓர் இடத்தின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல் ஏற்றவகையில் இருக்கின்றது என்பதற்கு அவ்விடத்திற்கு வரும் வெளிநாட்டுப் பறவைகளே அளவுகோல் ஆகும் எனக் கூறுகின்றனர்.

மகா புத்தர்

தாய்லாந்தின் தென்பகுதியான நராதிவத் மாநிலத்தில் மிகப் பெரிய புத்தர் சிலை ஒன்று அமைந்துள்ளது. அமைதியின் உருவான புத்தர், அமர்ந்திருக்கும் இந்தப் பகுதி முன்பு மலேசிய சுல்தான் ஆதிக்கத்தில் இருந்தது. அதை கடந்த நூற்றாண்டில் தாய்லாந்து தன்னுடன் இணைத்துக் கொண்டது. அப்போது தொடங்கிய பதற்றம் கலவரமாக உருவெடுத்து நான்கு ஆண்டுகள் நீடித்ததில் 2,700 பேர் கொல்லப்பட்டனர். எப்படியோ புத்தரின் அன்பு வழிக்கு மக்கள் திரும்பி விட்டதால் இப்போது அமைதி திரும்பி, புத்தர் சிலை இருக்கும் பகுதி சிறந்த சுற்றுலா மையமாகி இருக்கிறது.

தங்கம்

தங்கம் மட்டுமல்ல ஐதரசன் முதல் இரும்பு, செம்பு என சகல பொருட்களின் அணுக்களும் சூரியனில்தான் தயாராகின்றன. தனது ஆயுள் முடிவில் சூரியன் சூப்பர் நோவாவாக வெடிக்கும் போது எல்லா அணுக்களும் நாலாபக்கமும் பரவி மறுபடி ஒரு சூரியக்குடும்பமாக உதிக்கும் போது பூமிபோன்ற கோள்களில் தஞ்சமடைகின்றன. நமது பூமியிலுள்ள தங்கம் யாவும் வேறு ஏதோ ஒரு சூரியனில் இருந்து தோன்றியவைதான்.

யாழ்ப்பாணம்

சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

ஆன்றோர்!

மனிதன் பிறக்கும் போதிலிருந்தே அதிகம் அளவு மாறாமல் இருக்கும் உறுப்பு கண் மட்டும் தான்.

வாழுக வாழைப்பழம்

பண்டிகை நேரங்களிலும் பூஜைகளிலும் தவறாமல் இடம் பிடிப்பவை வாழைப்பழங்கள். அதனால் பண்டிகை நேரங்களில் இவை வீட்டில் அங்கே இங்கே கிடந்து சீரழியும்! சாப்பிடாமல் வீணடிப்போம். ஆனால் இந்த வாழைப்பழத்தில் உள்ள பலன்களையும் சத்துக்களையும் தெரிந்து கொண்டால் இப்படி வீணடிக்க மனசே வராது.

முக்கனிகளில் மூன்றாவது கனியான வாழைப்பழத்தை, சட்டென்று பசிப்பிணி தீர்க்கும் மருந்து என்றே சொல்லலாம். சட்டென்று பசியைப் போக்கி, சாப்பிட்ட உடனேயே உடலுக்கு உடனடியாக ஆற்றலைக் கொடுக்ககூடிய வாழைப்பழத்தில் ஏராளமான வகைகள் இருக்கின்றன.

பொதுவாக எல்லாவகை வாழைப் பழங்களிலும் பொட்டாசியம், சிறிது கல்சியம், விட்டமின் ஏ,சி சத்துக்கள், நார்ச்சத்து, ஃபிரக்டோஸ் எனும் சர்க்கரைச் சத்து, ஃபோலிக் அசிட் போன்றவை நிறைந்துள்ளன. இதய நோயாளிகள் மற்றும் வயிற்றுப்புண் உள்ளவர்கள் வாழைப்பழத்தை கட்டாயமாக உண்ண வேண்டும்.

கனிந்த வாழைப்பழத்தை குழந்தைகளுக்கு திட உணவாக கொடுக்கலாம். ஆனால் சளிப்பிடித்திருக்கும்போதோ அல்லது நெஞ்சில் கபம் கட்டிக்கொண்டிருந்தாலோ எந்த வகை வாழைப்பழத்தையும் கொடுக்கக்கூடாது. நீரிழிவு நோயாளிகள் அவரவர் இரத்த சர்க்கரை அளவைப் பொறுத்து மருத்துவர் ஆலோசனைப்படி பாதிப் பழம் சாப்பிடுவதோ அல்லது முழுவதும் தவிர்ப்பதோ நல்லது. இவர்கள் வாழைப்பழத்தை உணவுடன் சாப்பிடுவதற்கு பதிலாக உணவு வேளைக்கு இடையில் (காலை 11 மணி அல்லது மாலை 4 மணி)சாப்பிடலாம்.

''அன்பே, உனக்காக நான் தாஜ்மஹால் கட்டுவேன்!''
''இப்ப நான் மூணு மாசம். முதல்ல தாலியைக் கட்டுய்யா!''

சொன்னா கேளு ஆனந்தி... பிளாட்போம் டிக்கெட்டில் எல்லாம் பெர்ஸ்ட் கிளாஸ் கிடையாது!

''நீதிபதி யும், ஜட்ஜும் வெவ் வேறயா, என்னடா உளர்றே?''
''கோர்ட்டில தீர்ப்பு சொல்றவர் நீதிபதி. டி.வி. டான்ஸ் போட்டியில் தீர்ப்பு சொல்றவர் ஜட்ஜ்''



''ஒரு நிமிஷம் கண்ணை மூடிக் கொள்ளேன், உனக்கு ஒருசேர்ப் பரைஸ்..''
''மாட்டேன்.... நீ எஸ்கேப் ஆயிடுவே...!''

''இந்நூறு ரூபாய் பரிசு கிடைச்ச விஷயத்தை போன் பண்ணிச் சொல்றதுக்கு மட்டும் ஐயாயிரம் ரூபா ஆகியிருக்கு.''

''டெலிவரி ஆயிடுச்சா?''
''என்ன சார் நீங்க.... அதுக்கு இன்னும் மூணு மாசம் இருக்கே!''
''அட, நம்ம ஆபீஸ் சரக்குகளைப் பற்றிக் கேட்டேம்மா!''

அதிகரிக்கும் தாம்பத்திய நெருக்கடிகள்

கர்நாடகத்தின் தலைநகர் பெங்களூர் தனது ஐ.டி. கம்பெனிகளால் பிரபலமாகிக் கொண்டு போகிறது. அதே சமயம் அங்கு விவாகரத்து விகிதமும் அதிகரித்துக் கொண்டு போவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.டி. துறையில் வேலை செய்யும் ஜோடிகளின் விவாகரத்து வழக்குகள் 2003-இல் 283 மட்டுமே இருந்தன. இப்போது இது அதிகரித்து 2006-இல் 1,246 என்றாகிவிட்டது. 2003-இல் மாநிலம் முழுவதுமாக இருந்த விவாகரத்து வழக்குகள் 1,280 ஆக இருந்தன, 2006இல் - 2,493 ஆகிவிட்டது.

ஐ.டி. துறையின் சிறப்பு என்னவெனில், இதில் ஆண், பெண் இருவருக்கும் சரிசமமாக வேலை கிடைக்கிறது. இதனால் இருபாலருக்கும் தன்னம்பிக்கை அதிகமாகி, தங்கள் பிரச்சினையை தாங்களே தீர்த்துக் கொள்ளமுடியும் என்று நினைக்கின்றனர். அத்தோடு இந்தத் துறையில் சம்பளமும் அதிகம்.

ஐ.டி. துறையில்தான் வேலைத் தரமும் வினோதமாக இருக்கும். பெண்கள் இரவு நேரத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. தொடர்ந்து கணினி திரையிலே ஒன்றிப் போய்விடுவதால் இந்தத் துறையில் உள்ளவர்களுக்கு அதிக விபரம் தெரியும். தங்கள் வாழ்க்கைத் துணையின் நடத்தை பற்றி கம்ப்யூட்டரில் தெரியும். அளவு கோலுடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள் வாழ்க்கைத் துணை சோர்ந்து காணப்பட்டால் தமது மன எண்ணங்களை அவருடன் பகிர்ந்து கொள்வதற்குப் பதில் கம்ப்யூட்டர் அளவு கோலிடம் சொல்லத் தொடங்குவர். சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்குப் பதில் கம்ப்யூட்டர் கலாசாரமான 'யூஸ் அன்ட்தரோ' செய்தி யையே அளிக்கிறது. இந்தத் துறையில் இருந்து திருமணம் செய்து கொள்பவர்கள் குழந்தை பெற்றுக் கொண்டு ஓர் அழகிய வீட்டை அமைக்க இவர்களுடைய வேலை நேரம் இவர்களுக்கு- அனுமதி அளிப்பதில்லை. கணவனுக்கு ஒரு பணி நேரம் என்றால் மனைவிக்கு இன்னொரு பணி நேரம். அவர்கள் பொதுவாக பேசிக்கொள்வதே செல்போனில் தான். இந்த நிலையில் விவாகரத்து அதிகமாகத்தானே செய்யும்.!

புதிய வகை ஜட்டிகள்

இந்த கால மொடர்ன் பெண்களின் தேவையை மனதில் கொண்டு, புதிய ரக ஜட்டிகளை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் இந்திய பிரபல 'ஜாக்கி' நிறுவனத்தார். இந்த ஜட்டிகளின் சிறப்பு என்னவென்றால் பாண்டி லைனரால் ஏற்படும் கறையை நீக்கும் விதமாக வடிவமைக்கப் பட்டிருப்பதுதான். இந்த ஜட்டிகள் 'மோடல்' என்ற 97 சத விகிதம் பருத்தியும் 'லைக்ரா' என்கிற 3 சத விகிதம் நைலோனும் சேர்த்து தயாரிக்கப் பட்டுள்ளன.

விரைவாக திரும்ப வாங்கறாங்கோ!

எய்ட்ஸால் ஆயிரக் கணக்கணக்கில் மக்கள் மடிந்து கொண்டிருக்க, மிச்ச மிருக்கிறவர்களின் உயிருக்கும் உலை வைக்கிற ஒரு விஷயம் தென் ஆபிரிக்காவிலே நடந்திருக்கிறது. எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களில் 12 சத விகிதம் பேர் உள்ள தென் ஆபிரிக்காவில், பாதுகாப்பான உறவுக்கு ஆணுறை பயன்படுத்துங்கள் என அரசினர் அறிவிப்பு செய்தனர். இலவச ஆணுறைகளும் கொடுத்தனர். ஆர்வத்தில் வாங்கியவர்களுக்கு அங்கே ஏமன் காத்திருப்பது தெரியாது. பயன் படுத்திய பிறகு தான் தெரிந்தது. அதில் இருந்த ஓட்டைகளும் கிழிசல்களும், விஷயம் தாமதமாகவே அரசின் காதுகளுக்குப் போய், 40லட்சம் ஆணுறைகளை, அவற்றைத் தயாரித்த ஜெலா டெக்ஸ் நிறுவனத்துக்கே திருப்பி அனுப்பி யிருக்கின்றனர்.

வெளிமாவட்டங்களுக்கான பயண ஏற்பாடுகளில் யாழ் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள்!



உரியவர்கள் அக்கறை காட்டினால் மக்களின் பயணத்தை இலகுவாக்கலாம்!

யாழ்ப்பாணத்தில் இருந்து தென் பகுதிக்கு பயணம் செய்யும் பயணிகள் பல்வேறு சிரமங்களையும் அனுபவித்து வருகிறார்கள். குறிப்பாக யாழ். குடாநாட்டினுள் நடக்கும் சம்பவங்களினால் பொதுமக்கள் அலைச்சலுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நடவடிக்கைகளில் சிலவற்றையேனும் தவிர்க்க முடியுமானால் பொதுமக்கள் சற்று ஆறுதல் அடை யக் கூடியதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

யாழ் குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கு பயணம் செய்ய விரும்பும் பயணி ஒருவர் விண்ணப்பப்படிவத்தைப் பெற கடிதம் எழுதி கிராம அலுவலரிடம் சென்று அதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். (இந்த நடவடிக்கை சில பிரதேச செயலகங்களில் இல்லை).

சிபார்சுக் கடிதம் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் சென்று பிரதேச செயலகத்தில் படிவத்தைப் பெற்றால் அதனைப் பூர்த்தி செய்து அதில் ஒரு பிரதியையும் எடுத்துக் கொண்டு கிராம அலுவலரிடம் செல்ல வேண்டும்.

அங்கு உரிய படிவத்துடன் அதன் பிரதி, பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்திய கடிதம், தேசிய அடை யாள அட்டையின் பிரதிகள், குடும்ப புகைப்படப் பிரதிகள், பங்கீட்டு அட்டைப் பிரதிகள் மற்றும் இராவத்தினரால் சிங்களத்தில் வழங்கப்பட்ட படிவம் என்பவற்றை வழங்க வேண்டும்.

இதில் கிராம அலுவலர் விண்ணப்பப் படிவத்தின் பிரதியையும் பயங்கரவாதத்துடன் தொடர்பில்லை என்ற கடிதத்தின் பிரதியையும் பெற்றுக் கொண்டு ஏனைய படிவங்களை சிபார்சு செய்து வழங்குவார். இவைகளை மீண்டும் பிரதேச செயலகங்களுக்கு எடுத்துச் சென்று அங்கு பதிவு செய்த பின்னரே உரியவர்களிடம் கையொப்பம் பெறவேண்டும்.

இதற்கிடையில் கிராம அலுவலர் படிவங்களை சிபார்சு செய்த பின்னர் மீண்டும் விண்ணப்பப்படிவம் மற்றும் வெளிப்படுத்துகை விவரம் என்பவற்றின் பிரதிகளை எடுத்து பிரதேச செயலகத்தின் கோவைக்கு கையளிக்க வேண்டும். இதற்காக உரிய அதிகாரிகள் இல்லாத இடத்து பல மணித்தியாலம் காத்திருக்க வேண்டும்.

குறிப்பாக பிரதேச செயலகங்களில் கையொப்பம் இட தகுதி பெற்றவர்களாக பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், நிர்வாக அலுவலர் ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் பொதுமக்களின் பணியை சுலபமாக்கும் வகையில் கிராம அலுவலர்களின் பணிக்கான நிர்வாக உத்தியோகத்தர்களும் அண்மையில் அரசினால் நியமனம் செய்யப்பட்டு இத்தகைய கையொப்பங்கள் இட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். எனினும் சில இடங்களில் குறிப்பிட்ட அதிகாரங்கள் உரிய முறையில் வழங்கப்படாது உரிய அதிகாரிகள் சிலர் தமது அதிகார பங்கீட்டை மேற்கொள் ளாததினால் பல மணித்தியாலம் காத்திருந்து கையொப்பம் பெற வேண்டிய நிலைமையும் காணப்படுகின்றது.

பிரதேச செயலரிடம் கையொப்பம் பெற்ற பின்னர் மீண்டும் உரிய படிவங்கள் பிரதிகள் எடுக்கப்பட்டு அயலில் உள்ள இராணுவ முகாமில் ஒப்படைக்கப்படும். பின்னர் அந்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியிடம் கையொப்பம் பெற்று குறிப்பிட்ட பிரதேசத்தின் இராணுவ தலைமைப்பீட அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும். அங்கு குறிப்பிட்ட ஒரு நாள் வரும்படி கூறிவிடுவார் கள். அந்த நாளில் சில வேளைகளில் கிடைக்கும். சில வேளைகளில் வேறு ஒரு நாள் வரும்படி கூறிவிட்டு இரண்டாம் தடவை சென்று அனுமதிப்பத்திரத்தைப் பெறும் நிலைமையும் காணப்படும்.

அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் மீண்டும் கப்பலுக்கு பதிவு செய்ய அல்லது விமானப் பயணச்சீட்டுப் பெற நீண்ட நாள்கள் அலைய வேண்டி இருக்கும். இந்த இரு இடங்களிலும் மக்கள் பெரும் அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகுவதுடன் பல நாட்களாக - மாதங்களாக தமது பயணத்துக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும்.

விமானப் பயணத்துக்கென அனுமதி பெற்றவர்கள் கப்பலில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். எனினும் கப்பலுக்கென அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் விமானத்தில் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கப்பல், விமானம் என்பவற்றில் பயணம் செய்யும் பயண அனுமதி சீட்டை பெறுவதிலும் கூட சிலரின் செல்வாக்கும் காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றார்கள்.

கப்பலுக்கு பதிவு செய்தவர்கள் அலைந்து திரிந்து கப்பலில் பயணம் செய்வதற்கான முன் அனுமதி (ரோக்கின்) பெற்று கப்பல் திகதியையும் பெற்ற பின்னர் தமது பயணத்தை மேற்கொள்ளும் தினத்தில் முண்டியடிக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

இதற்காக யாழ். குடாநாட்டில் எந்தப் பகுதியில் இருந்தாலும் காலையில் யாழ்ப்பாணம் சிங்கள் மகாவித்தியாலயத்துக்கு சமூகம் கொடுக்க வேண்டும். அங்கிருந்து தான் பயணிகள் மீண்டும் தெல்லிப்பழைக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் மூலம் ஏற்றிச் செல்லப்படுவார்கள். இதற்காக பஸ் கட்டணம் 100 ரூபா அறவிடப்படுகின்றது.

சாதாரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பளை செல்ல பஸ்வண்டிகளில் 22 ரூபாவுக்கும் 24 ரூபாவுக்கும் இடையில் பணம் அறவிடப்படுகின்றது.

இந்த விடயத்தில் கூட உரிய பயணிகளை யாழ். பஸ் நிலையத்தில் இருந்து சிங்கள மகாவித்தியாலயப்பகுதிக்கு கொண்டு செல்ல தனியார் வாகனங்களும் கூடிய தொகையை அறவிட்டுக் கொள்கின்றன.

பயணிகளை தெல்லிப்பழைக்கு வருமாறு கூறினால் பிரச்சினை இருக்காது. அனைவரும் நேரடியாகத் தெல்லிப்பழை சோதனை நிலையத்துக்கு வரக் கூடியதாக இருக்கும். இதனால் பொதுமக்கள் அலைச்சலுக்கு உள்ளாவது தவிர்க்கப்படுவதுடன் பணச்செலவையும் குறைக்க முடியும். தெல்லிப்பழைக்கு போக்குவரத்து வசதிகளும் தாராளமாக உள்ளதனால் அது சாத்தியப்படக் கூடியதாகவும் இருக்கும்.

தெல்லிப்பழை சோதனை நிலையத்துக்கு முற்பகல் 11 மணியின் பின்னர் தான் பயணிகள் அழைத்து செல்லப்படுகின்றார்கள். எனவே முற்பகல் 11 மணிக்கு முன்னர் தெல்லிப்பழை சோதனை நிலையத்துக்கு வரவேண்டும் என்றால் பொதுமக்கள் காலையில் பதறியடித்துப் பட்டினியாக வரும் நிலையைத் தவிர்க்கலாம். பயணிகளுக்கும் அது சற்று ஆறுதலாக இருக்கும்.

அதிகாலையிலேயே பயணிகள் சிங்கள மகாவித்தியாலயத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதனால் அவர்கள் அன்று காலை முதல் அடுத்த நாள் திருமலை துறைமுகத்தை அடையும் வரை உணவு இல்லாமல் பட்டினி கிடப்பதுடன் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகின்றார்கள். குறிப்பாகப் பெண்கள் மலசல கூட வசதியின்மை, உடைமாற்றும் வசதியின்மை என்பவற்றால் பெரும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே இந்த கப்பல் மூலம் பயணிக்கும் நடைமுறைகளில் விரைவில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து பயணிகளின் பயணத்தை இலகுவாக்குவதன் மூலம் சம்பந்தப்பட்டோர் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் சம்பாதிக்கமுடியும்.

அவசர தேவைகள் நிமித்தம் வெளிமாவட்டங்களுக்குச் செல்லவேண்டியோருக்கு விரைவில் பயண அனுமதியை வழங்குவதில் காட்டும் அக்கறை போன்று பயணிகளின் நலன்களிலும் அக்கறை காட்ட வேண்டும்.

விமானப் பயணிகளைப் பொறுத்த வரையில் பயணிகள் இறக்கப்படும் இடங்கள் பஸ் நிலையத்திற்கு அண்மையாக இல்லாததினால் தனியார் வாகன உரிமையாளர்கள் மிகவும் அதிகமான கட்டணத்தை அறவிடுவதுடன் பொது மக்களை பலாத்காரமாக வாகனங்களில் ஏற்றும் நிலையும் கூட காணப் படுகின்றது.

ஆகையினால் விமானப் பயணிகளை பஸ் நிலையத்திற்கு அண்மையாக இறக்கக்கூடிய நடவடிக்கையை விமான முகவர்கள் மேற் கொள்ள வேண்டும்.

எனவே அனைத்து தரப்பினரும் இது விடயத்தில் கூடிய அக்கறை கொண்டு செயற்படுவதன் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

— வில்லவன் —

சிறுநீரில் கற்கள் வராமல் தடுப்பது எப்படி?

கேள்வி: ஆண் வயது 45. பன்னிரண்டு வருடமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றேன். கடந்த சில காலமாக எனது கால் விரல்களில் வலி ஏற்படுகின்றது. ஆரம்பத்தில் கால் ஒன்றின் சிறுவிரலில் ஆரம்பித்து மூன்று நாட்களாக நிறையவே கஷ்டப்படுத்தியது. பின்னர் அது ஓரளவு குணமாகியதும் - பாதத்தின் அடுத்த விரல்களும் வலிக்கின்றன. இது தொடர்பில் விளக்கமும் பரிகாரமும் தரவும்.

பதில்: உங்களது நீண்ட நாளைய நீரிழிவு நோய் தாக்கத்தினால் ஏற்பட்ட பிரச்சினை இது. நீரிழிவு நோய் - உடலின் நரம்புகளை முக்கியமாக PERIPHERAL NERVES எனப்படும் - கால், கைகளின் இறுதி பகுதிகளுக்கு செல்லும் நரம்புகளை தாக்கியுள்ளது. இவற்றின் உணர்வு செல்லும் வெளி உறையை - NEURAL SHEATH தாக்கி அழிக்கின்றது. இந்த உணர்வு கடத்தும் பகுதி அழிக்கப்பட்டால் - பாதங்களிலும், கை விரல்களிலும் விறைப்புத் தன்மை, வலி என்பவை ஏற்படும். விறைப்புத் தன்மைக்கு முதல், அநேகருக்கு வலிதான் ஏற்படுகின்றது. முற்றாக கடத்தும் உறை பழுதடைந்தால் மாத்திரம் விறைப்பு ஏற்படும். ஆரம்ப பாதிப்பாக ஏற்படுவதுதான் வலி. 12 வருடமாக நீரிழிவு உங்களுக்கிருந்தாலும் நீங்கள் அதை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதில் மிகவும் வெற்றியடைந்துள்ளதால் தான் இவ்வளவு காலத்திற்கு பின்னர் இப்பொழுது நரம்பு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்படியான ஆரம்பகால பாதிப்புகளுக்கு Evening Primrose oil மாத்திரைகள்,GLA மாத்திரைகள், B வகை விற்றமின் மாத்திரைகள் மிகவும் உதவும் தொடர்ந்து ஒரு மாதம் இவ்வாறு உபயோகித்து பார்க்கவும்.

கால் விரல்களில் ஏற்படும் வலிக்கு முதுகுத்தண்டில் ஏற்படும் பிரச்சினைகள். முதுகெலும்பு தொகுதிக்கூடாக வெளியில் நரம்புகள் வரும் வழியில் ஏற்படும் தடைகள் என்பவையும் காரணமாக இருக்கலாம். ஒரு Orthopaedic நிபுணரின் ஆலோசனையையும் பெறுவது விரும்பத்தக்கது.

Sciatica என்கின்ற கால்களுக்கு செல்லுகின்ற நரம்புத் தொகுதி முதுகெலும்புகளை கடந்து வரும் வேளையில் இழுக்கப்படுவதாலும் இப்படி ஏற்படலாம்.

கேள்வி: எனது மகள் வயது -16 பூப்படைந்து இரண்டு வருடங்களாகின்றன. அவரின் மாதவிலக்கு சரியான சமயத்திற்கு வருவதில்லை. வந்தாலும் சரியாகப் போவதில்லை. இது நோயா?

பதில்: பூப்படைந்து சில காலத்திற்கு அநேகமான பெண் குழந்தைகளுக்கு மாதவிலக்கு விஷயத்தில் பலவித ஒழுங்கீனங்கள் ஏற்படுவது சாதாரணமான ஒன்றே. சிலருக்கு இரத்தப் போக்கு நிற்காமல் பல நாட்கள் போய்க்கொண்டிருக்கும். அநேகமான இப்படியான மாதவிலக்கை - Dysfunctional Uterine Bleeding என்று அழைப்பார்கள். ஆனால், அதிகமாக இப்படி சென்றால் - இரத்தச் சோகை ஏற்பட வாய்ப்பு உண்டு. இரத்த சோகை (Anaemia) ஏற்பட்டு தொடர்ந்து கவனிக்காமல் இருந்தால், இரத்தத்தின் உறையும் பண்பு - (Coagulation Factors) பாதிப்பு அடைந்து, மேலும் அதிகப்படியாக இரத்தம் போவதற்கு வழிவகுக்கும். அதேபோல் சில பெண் குழந்தைகளுக்கு 20 வயது வரை மாதாமாதம் ஒழுங்காக மாதவிலக்கு ஏற்படாமல் 2 அல்லது 3 மாதங்களுக்கு ஒரு முறை வரும். அல்லது மேலும் தள்ளிப்போகவும் சந்தர்ப்பம் உண்டு. அப்படி தள்ளிப்போகும் பட்சத்தில் - பின்னர் மாதவிலக்கு ஏற்படும்போது 5அல்லது 6 நாட்களுக்கு அதிகளவில் இரத்தப்போக்கு ஏற்படலாம். அல்லது 5 நாட்களுக்கு சொட்டு சொட்டாகவும் போக வாய்ப்பு உண்டு.

இன்னும் சிலருக்கு - மாதவிலக்கு விரைவாக - உதாரணமாக மாதத்திற்கு இரண்டு தடவை - வரக்கூடும். மாதவிலக்கு வர முன்னர் அல்லது பின்னர் இரத்தப்போக்கு ஏற்படும்.

மேற்கூறிய மாதவிலக்கு பிரச்சினைகளுக்கு இந்த இளம் வயதில் பெண் கருப்பை, சூலகம் என்பவை முற்றாக வளர்ச்சியடையாத நிலையில் இருப்பதும், ஹார்மோன் பிரச்சினைகளும் காரணமாகின்றன. இது தவிர தைரோய்ட், பிட்டியூட்டரி சுரப்புகளின் தொழில்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களும் காரணமாக இருக்கவும் கூடும். எனவே, முதலில் பெண் நோயியல் நிபுணர் (Gynaecologist) ஒருவரின் ஆலோசனை பெறுவது அவசியம். அவர்



ஸ்கேன் மற்றும் இரத்தப் பரிசோதனைகள் மூலம் இந்த பிரச்சினையின் காரணங்களை கண்டுபிடித்து - அதற்குரிய சிகிச்சை முறைகளை கைக்கொள்ளுவார். சிலவேளைகளில் - ஓரிரு மாதங்களுக்கு தொடர்ந்து ஹார்மோன் மாத்திரைகளை உபயோகிப்பது மூலம், மாதவிலக்கு பிரச்சினையை ஒழுங்குபடுத்தமுடியும்.

கேள்வி: ஆண் வயது-25. அன்று திருகோணமலையிலிருந்து கொழும்பு வரும் வழியில் திடீரென்று தாங்கொண்ணாத வலி ஏற்பட்டு இடைவழியில் குருநாகலை ஆஸ்பத்திரியில் அனுமதி பெற்றேன். அங்கு என்னைப் பரிசோதித்து சிகிச்சையளித்த டாக்டர், சிறுநீர்ப்பரிசோதனை, எக்ஸ் கதிர் பரிசோதனை என்பவற்றை செய்து - எனது சிறுநீர் குழாயில் சிறு கற்கள் இருப்பதாக சொன்னார். அவர் தந்த சிகிச்சையில் வலிகுறைந்தது. ஆனால், திரும்பவும் இது வரலாம். எனவே, உணவு முறை மற்றும் குடிக்கும் நீர் என்பவற்றில் கவனமாக இருக்கும்படி அறிவுறுத்தி அனுப்பினார். சிறுநீர் கற்கள் வராமல் தடுக்க வழிமுறைகளை தரவும்.

பதில்: சிறுநீரக கற்கள் Calcium Oxalate வகை இரசாயன உப்பாகும். இதன் வெளி அமைப்பு - பல முட்கள் போல் அமைந்திருக்கும். இவை சிறுநீரோடு சிறுநீர் குழாய் வழியாக கீழே இறங்கும்போது சிறுநீர் குழாய் சுவர்கள் கிழிபடுவதால் - சிறுநீர் குழாய் Spasm எனப்படும் சுருங்கல் ஏற்பட்டு - தாங்கொண்ணாத வலியை ஏற்படுத்துகின்றது.

கற்கள் பெரிதாக இருந்தால் - Ulirasonic வீச்சைக் கொண்டு கற்களை உடைத்து வெளியேற்றும் நவீன சிகிச்சை முறைகள் இப்பொழுது கிடைக்கின்றன.

அடுத்து - சிறுநீரக கற்கள் உருவாகாமல் தடுக்க வழிமுறைகளை தருகின்றேன்.

ஒரு முறை கற்கள் வந்தால் மறுபடியும் வர வாய்ப்பு உண்டு. எனவே, உங்கள் வைத்தியர் கூறியபடி உணவுப் பழக்கத்தில் கவனம் எடுக்கவேண்டும்.

தினம்தோறும் குறைந்தது 2 முதல் 3 லீற்றர் தண்ணீர் குடிக்கவேண்டும். வெறும் குடிநீர் என்றில்லாமல் - பழரசங்களும் பருகலாம்.

மாமிசம், பால், தயிர், தக்காளி, பசளிக்கீரை என்பவற்றை உணவில் விலக்கிக் கொள்ளவும்.

நார்ச்சத்துமிக்க, வாழைத்தண்டு, பீன்ஸ், கீரை, கடலை, ஓட்ஸ் போன்றவற்றை உணவில் சேர்க்கவும்.

அடிக்கடி வலி ஏற்பட்டால் எக்ஸ் கதிர், ஸ்கேன் பரிசோதனை அவசியம். கற்கள் பெரிதாக இருந்தால் முன்னர் கூடிய கதிர்வீச்சு கல் உடைப்பு சிசிச்சைமுறை பின்பற்றப்படவேண்டும்.

கேள்வி: ஆண் வயது 45. எனக்கு தூக்கம் குறைவு. படுக்கைக்கு போகும்போது தூக்கம் வந்து நன்றாக தூங்குகின்றேன். ஆனால், நடுராத்திரியில் திடீரென்று விழித்துவிடுவேன். அதன் பின் தூக்கம் வருவதில்லை. பரிகாரம் கூறவும்.

பதில்: தூக்கமின்மை ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் உணர்வுபூர்வ (Emotional) விஷயங்கள் தான். - Depression எனப்படும் மனஉளைச்சல் - நோயின் முதல் அறிகுறி தூக்கமின்மை. இது தவிர நீரிழிவு நோயாளர், இரத்த உயர் அழுத்த நோயாளர் என்போருக்கும் தூக்கம் ஏற்படுவது குறைவு. முதலில் நீங்கள் ஒரு பொது வைத்திய ஆலோசனை பெறுங்கள்.



தூக்கமின்மையின் காரணத்தை கண்டறிவது சிகிச்சைக்கு முன்னர் அவசியம்.

காப்பி, மது என்பவற்றை தவிருங்கள். தூங்கப்போக முன்னர் அளவுக்கதிகமாக உணவோ, பானங்களோ எடுக்கவேண்டாம். மது அருந்தும் பழக்கம் உள்ளவர்களுக்கு அதிகாலையில் விழிப்பு ஏற்பட்டு விடும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
35, ஜயந்தமல்லிமாவத்தை, கொழும்பு-14.

தூக்கத்திற்கு தூக்க மாத்திரைகளை உபயோகிக்கக் கூடாது. சில காலத்தின் பின்னர் தூக்க மாத்திரைகளுக்கு உடல் பழக்கமாகி - தூக்க மாத்திரை இல்லாது தூக்கம் வராது. அது மட்டுமல்ல - மெல்ல மெல்ல தூக்க மாத்திரைகளின் அளவை அதிகரிக்கவும் ஏற்படும்.

அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 13ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

இவ்வாறான பரீட்சையொன்றோ, வழிகாட்டியோ எதுவுமே இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல்முறையாக ஆரம்பித்து வெற்றிநடை போடுகின்றது.

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள் களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் (படிமுறைப் பரீட்சை -13 (Steping Exam - 13) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

ஆசிரியர்,
கல்விச்சுடர்,
சுடர் ஒளி பணிமனை,
இல. 85,
ஜயந்தமல்லிமராச்சிமாவத்த,
கொழும்பு-14.

யாழ் மாணவர்களுக்கு மட்டும்..
ஆசிரியர்,
கல்விச்சுடர்,
உதயன் பணிமனை,
இல. 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவர்கள்

படிமுறைப் பரீட்சை - 10 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

T.டன்ஸ்டன்
165 (கல்முனை-01)

S.நுஹா
158 (நிந்தவூர்)

M.சமிஹா
153 (நிந்தவூர்)

S.டீனேஸ் பிரசாந்தன்
153 (கோட்டகலை)

T.ஜஸ்ரின் ஜனுஸ்ரன் 175 (மன்னார்)	T.பாக்கிஹா 171 (நிந்தவூர்-13)	T.நில்வானா 152 (நிந்தவூர்)	T.சிப்னி 146 (நிந்தவூர்)	T.நிபிதாஸ் 152 (நிந்தவூர்)
T.தர்மேஸ் 146 (மன்னார்)	T.ஹஸ்னா ஹமீட் 149 (நிந்தவூர்)	T.மின்னத் ஹசீமா 146 (நிந்தவூர்)	T.மின்ஹா 145 (நிந்தவூர்)	T.உமாமா 142 (நிந்தவூர்)

எமது படிமுறைப் பரீட்சை இடம்பெறும் கல்வி நிலையங்கள்

வவுனியாவில்	எக்ஸ்பிரஸ் கல்வி நிலையம்
திருமலையில்	ACA கல்வி நிலையம்
கம்பளையில்	கதிரொளி கல்வி நிலையம்
நிந்தவூரில்	இல்மா ஹொலிடே ஸ்கூல்
சம்மாந்துறையில்	ஸ்ரார் கல்வி நிலையம்
கண்டியில்	அல் மதீனா பாடசாலை

பரீட்சை எழுதவிரும்பும் மாணவர்கள் மேற்படி கல்வி நிலைய நிர்வாகங்களுடன் தொடர்புகொள்ளவும்.

படிமுறைப்பரீட்சை - 11 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் படிமுறைப் பரீட்சை-14 இல் வெளிவரும். கல்விச்சுடர் ஆசிரியர்.

சுடர் சிந்தனை:- "பணிவாக இரு. உயர்வாக வருவாய்.."

படிமுறைப் பரீட்சை - 13 நேரம்:1மணி

மாணவர் பெயர்	:	.....
முகவரி	:	.....
கற்கும் பாடசாலை/	:	.....
கல்வி நிலையம்		.....
தொலைபேசி இலக்கம்	:	.....

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

" தென்னை மரத்தில் ஏறாதே
தேங்காயைப் பறிக்காதே
பனை மரத்தில் ஏறாதே
பனங்காயைப் பறிக்காதே
மாமரத்தில் ஏறாதே
மாங்காயைப் பறிக்காதே
பறிக்காதே, பறிக்காதே, பறிக்காதே"

1) இங்கு கூறப்பட்டுள்ள மூன்று மரங்களும் எவை?
- .....
- .....
- .....

2) இங்குள்ள முக்கனிகளுள் ஒன்று எது?
.....

3) இங்கு அதிக தடவைகள் வந்துள்ள சொல் எது?
.....

4) "ஏறாதே" என்பதற்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொல் தருக.
.....

5) பின்வருவனவற்றின் இளமைப் பெயரை எழுதுக.
அ) தென்னை .....
ஆ) மா .....
இ) பனை .....

02. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1) குருதி - .....
2) உறக்கம் - .....
3) கவி - .....
4) வெய்யோன் - .....
5) தன்மை - .....

03. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) தர்மம் - .....
2) தோற்றம் - .....
3) இன் சொல் - .....
4) இக்கரை - .....
5) கிராமம் - .....

04. பின்வரும் உருக்களை நன்கு அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவை தெரிவு செய்க.

1)



.....

.....

தீபாவளிக்கு வெளியான படங்களின் கலைநிலவரம்

தென்னக தமிழ்த் திரையுலகம் சில ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய சரிவு நிலையில் இருந்தது. ஆண்டுக்கு நூறு படங்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் வெளிவந்தாலும், அவற்றில் பத்து பதினைந்து படங்கள் மட்டுமே வெற்றிபெற்றன. மற்றவை போட்ட முதலையும் எடுக்க முடியாத அளவுக்கு

முதல் போட்டவர்களுக்கு முதலையாக வந்து கழுத்தைப் பிடித்துக் கொண்டதுதான் மிகவும் வேதனையான விடயம். எப்படியான திரைப்படங்கள் தயாரித்தால் ஓடும்? யார் நடித்தால் ஓடும்? என்பதிலெல்லாம் தயாரிப்பாளர்களுக்கு ஒரு தெளிவில்லாத குழப்பம்தான் ஏற்பட்டது.

ஆனால்- இந்த நிலை அதிக நாட்கள் நடிக்கவில்லை. தமிழ்த்திரைப் படத்துறையில் உடனடியாக ஒரு மாற்றமும் ஆரோக்கிய சூழ்நிலையும் ஏற்பட்டது. நல்ல படங்கள், சிறந்த தொழில்நுட்பத்துடன் எடுக்கப்பட்ட வித்தியாசமான படங்கள் ஓடத்தொடங்கின. கலைஞர் கருணாநிதி தமிழக முதலமைச்சராக வந்தவுடன் அழிவு நிலையிலிருந்த தமிழ்த் திரைப்படத்துறைக்கு புதிய இரத்தம் பாய்ச்சும் விதமாக பல நல்ல திட்டங்களை அறிவித்தார். ஏற்கனவே நஷ்டத்தினால் மூடப்பட்ட பல திரையரங்குகள் மறுபடியும் நவீன வசதிகளுடன் திறக்கப்பட்டன. வெளிநாடுகளிலும் தமிழ் திரைப்படங்களுக்கு நல்ல கிராக்கி நிலவத் தொடங்கியது. தமிழ் திரையுலகில் புதிது புதிதாக நடிகர்கள், கலைஞர்கள் தொழில் நுட்பவியலாளர்கள் தோன்றினார்கள்.

'சந்திரமுகி' இரண்டு தீபாவளிகளை கண்டது. 'சிவாஜி' உலகம் முழுவதும் வசூலை வாரிக் கொட்டியது.

இந்த நிலையில்தான் இந்த வருட தீபாவளிக்கு ரசிகர்களின் பலத்த வரவேற்புக்கு மத்தியில் ஐந்து படங்கள் வெளியாயின. அவை, விஜய்யின் 'அழகிய தமிழ் மகன்', சூர்யாவின் 'வேல்' தனுஷின் 'பொல்லாதவன்', சத்தியராஜ், பிரிதிவிராஜ் நடித்த 'கண்ணாம்பூச்சி ஏனடா?' மற்றும் ஜீவன் நடித்த 'மச்சக்காரன்'. என்பனவாகும்.

இவற்றில் விஜய்யின் புதியபடம் வசூலில் முதலிடத்தில் இருப்பதாக சமீபத்திய தகவல்கள் தெரிவித்திருக்கின்றன. அதற்கடுத்ததாக இரண்டாவதாக சூர்யாவின் 'வேல்' படமும், மூன்றாவதாக தனுஷின் 'பொல்லாதவனும்', நான்கு மற்றும் ஐந்தாவது இடங்களில் ஜீவனின் 'மச்சக்காரனும்' சத்திராஜின் 'கண்ணாம்பூச்சி ஏனடா?'வும் இருகின்றன. இவற்றில் 'அழகிய தமிழ் மகன்','வேல்', 'பொல்லாதவன்' ஆகிய மூன்றும், போட்ட பணத்தில் மூன்று மடங்கு வசூலை தருமென்றும் மற்றைய இரண்டும் போட்ட முதலுடன் மேலதிகமாக லாபத்தைத் தருமென்றும் செய்திகள் வெளியாகி உள்ளன. இதில் இன்னொரு விடயத்தை கவனிக்க வேண்டும். 'போக்கிரி' க்குப் பின் விஜய் நடித்து வெளிவந்துள்ள 'அழகிய தமிழ் மகன்' திரையிடப்பட்ட அனைத்து இடங்களும் திருவிழா கூட்டமாக உள்ளது. இத்திரைப்படத்தில் விஜய் முதன் முறையாக இரண்டு வேடங்களில் நடித்திருக்கிறார். ரஜனியுடன் 'சிவாஜி'யில் நடித்த ஸ்ரேயா கதாநாயகியாக நடித்திருக்கிறார். ஆரம்பத்தில் கூத்தும் கும்மாளமுமாக செல்லும் படத்தில் இரண்டாவது விஜய் அறிமுகமானவுடன்தான் குழப்பம்

பாலா சங்குபிள்ளை

உண்டாகிறது. ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள இப்படத்தில் இரண்டு விஜய்களும் சந்தித்துக் கொள்ளும் காட்சிகள் வித்தியாசமாக மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

அதேபோல சூர்யா நடிக்க ஹரி இயக்கியுள்ள 'வேல்' படத்திலும் சூர்யா இரண்டு வேடங்களிலும் தோன்றி நடித்துள்ளார். இரண்டு பாத்திரங்களையும் வித்தியாசமாக நடித்துள்ள சூர்யாவுக்கு 'கஜினி' க்குப் பின் இந்தப் படம் மிகப் பெரிய வெற்றிப் படமாக அமையப்போகின்றது. 'சாமி'யைப் போலவே 'வேல்' படமும் இயக்குனர் ஹரிக்கு ஒரு மிகப் பெரிய வெற்றிப்படமாகி விடலாம் என இப்போதே பேச்சு கிழம்பிவிட்டது.

தனுஷைப் பொறுத்தவரையில் 'பரட்டையென்கிற அழகு சுந்தரம்' என்ற திரைப்படத்தின் தோல்விக்குப் பின் அவர் நடித்த 'பொல்லாதவன்' வெளியாகியுள்ளது. வழமையான பழிவாங்கும் கதையமைப்பாக இருந்தாலும் புதிய இயக்குனர் சற்று வித்தியாசமாக படத்தை கொண்டு போயிருக்கிறார். அதேபோல தொடர்ந்து வெற்றிப்படங்களை கொடுத்து வந்த கவர்ச்சி கதாநாயகன் ஜீவன் நடித்து

(16ஆம் பக்கம் பார்க்க)

பேனா நண்பர்கள்

பெயர் :சிவராம் [சியாம்]
வயது: 22
முகவரி:முள்ளியவளை,
திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை

பெயர் : எச்.எம்.இமாம்
வயது: 16
முகவரி. அறுகம்பை, சின்னஉல்லை,
பொத்துவில் - 18.
பொழுதுபோக்கு: பத்திரிகை,
வானொலி.

பெயர் : எம்.ஏ.றில்வான்
வயது : 17
முகவரி: பிரதான வீதி, பசறமுச்சேனை,
பொத்துவில்.
பொழுதுபோக்கு: கவிதை, பத்திரிகை,
வானொலி.

பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டு கோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டை யின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

நித்யா ஜன்னலுக்கு வெளியே ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள். வந்துவிடுவார்கள் இதோ! துல்லியமான வான நீலத்தில் ஒரே ஒரு பிரயாணக் கப்பல் மிதந்துகொண்டிருந்தது. பாலிவினைல் மர நிழல்களில் செயற்கைப் புல்வெளிகளின் பச்சை ஒளிர்ந்தது. ஒரேஞ் நிறச் சாலைகள் அத்தனையும் காலியாக இருந்தன. எல்லோரும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறார்கள். வெளியே வரவேண்டிய எந்த அவசியமும் இல்லாத நாள்கள். நித்யாவின் உடல் முழுவதும் உற்சாகமும் எதிர்ப்பார்ப்பும் பரவியிருந்தது. ஆடிப்பாட வேண்டும் போல் இருந்தது. அவள் அருகே இருந்த சிறிய மொனிட்டர் பெட்டி ''நித்யா ஜாக்கிரதை. அலட்டிக்கொள்ளாதே. இப்போதுதான் குணமாகியிருக்கிறாய். போர்த்திக்கொள். ஜன்னலைத் திறக்காதே'' என்று வற்புறுத்திக்கொண்டே இருந்தது. அவள் அதை மதிக்கவில்லை. எச்சரிக்கைகள் எல்லாம் இன்று காற்றில் பறக்கட்டும். நான் இன்று துள்ளிக்குதித்தே ஆக வேண்டும். என் மகன் பிழைத்துத் திரும்பி வருகிறான். குழந்தையின் கன்னத்தில் ஒரு முத்தமிட்டால் என் உபாதைகள் அத்தனையும் செத்துப்போகும். அதுதான் எனக்குச் சிசிக்சை.

அவர்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நாங்கள் மூன்று பேரும் உயிர் தப்பியதற்கு இந்த விஞ்ஞான நூற்றாண்டிலும் கடவுள் அருள்தான் காரணம். நானூறு கிலோ மீட்டர் வேகத்தில் நேர்ந்த இந்த மோதலில் நாங்கள் சுக்கு நூறாகி இருக்க வேண்டாமோ? பதிலாக ஆத்மாவுக்கு சிறிய சிராய்ப்புதான். எனக்கு மண்டையில் அடிபட்டுப் பல நாள் மயக்க நிலையில் இருந்தேன். ஆனால் என் மகன் கண்ணன்?

பளிச்சென்று அந்தக் காட்சி மனதில் வெட்டியது. நோவா விழாவிலிருந்து

மூவரும் உற்சாகமாக அஸ்ட்ரா சூரிய சக்திக் காரில் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். காற்று மெத்தையில் விரைந்து கொண்டிருக்கிறது. திடீரென்று அத்தனை சிவப்பு விளக்குகளும் எரிய பாதுகாப்பு சாதனங்கள் செயல்படும் முன்னரே தூக்கி எறியப்பட்டு உருண்டு, புரண்டு... நினைவிழப்பதற்கு முன் பார்த்த கடைசிக் காட்சி கண்ணனின் முகம் . பயங்கரம்!

இன்று கண்ணன் பூரண குணமாகித் திரும்பி வருகிறான். வாசலில் மின்சார வீதி வண்டி நிற்க, அதன் கதவுப் பெருமூச்சு கேட்டது. நித்யாவுக்கு இதயம் துடிக்க மொனிட்டர் ''ஜாக்கிரதை, அலட்டிக் கொள்ளாதே. இதயத்துடிப்பு எல்லை மீறுகிறது. மருந்து சுரக்கும்'' என்றது. நித்யா தன்னை கட்டுப்படுத்திக்கொண்டாள். மருந்து சுரந்தால் தூக்கம் வரும். நான் விழித்திருக்க வேண்டும். என் மகனிடம் விளையாட வேண்டும். அதோ! ஆத்மா மகனை நிதானமாக நடத்தி அழைத்துக்கொண்டு வர, இந்த உயரத்திலிருந்து பார்க்கையில் நித்யாவின் உள்ளே தாய்மை உணர்ச்சி பிரவகித்தது. என் மகன்! என் ஒரே மகன்! கண்ணன் வந்துவிட்டான்.

அங்கிருந்தே ஆத்மா கையாட்டிப் புன்னகைத்து கண்ணனுக்கு அம்மாவின் ஜன்னலைக் காட்ட, குழந்தை நிமிர்ந்து சிரித்து அப்பாவைப் போலவே கையாட்டினான்.

''ஓடி வா, மகனே ஓடிவா!''

எதிர்பார்ப்பில் சக்கர நாற்காலியை விட்டு எழுந்துவிடுவாள் போல இருந்தது.

''ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'' என்றது அந்த இயந்திரம்.

''வாயை மூடு'' என்று அதட்டினாள்.

''உன் நல்லதுக்குத்தான் சொல்லுகிறேன்'' என்றது பதில் பெட்டி.

''முதலில் அந்த வாயாடிப் பெட்டியை ஒழிக்க வேண்டும். நேர்ஸ் வைத்துக்கொள்ள அதிகம் செலவாகிறது என்று இதை வைத்துக் கொண்டால் என்ன தொந்தரவு!''

வாயிற் கதவு திறந்து கொண்டது.

''அம்.....மா.'' அவள் மகன் நடந்து வந்தான்.

''ஓடி வா! அம்மாவிடம் ஓடி வா கண்ணா!''

கண்ணன் மெதுவாக நடந்து வந்தான். பாவம் குழந்தைக்கு அசதியாக இருக்க வேண்டும். அவள் கன்னத்தில் ஒரு முத்தத்தை ஒத்தி விட்டு,

''எப்படி இருக்கிறாய்?'' என்றாள்.

நித்யா தன் பாசத்தை கட்டுப்படுத்த இயலாமல் மகனை மார்போடு அணைத்துக்கொண்டு இறுக்கினாள்.

மெல்ல மெல்லத் தப்பித்து முழுசாக வந்திருக்கிறான்.

''அன்பாலேயே கொன்று விடாதே'' என்று சிரித்தான் ஆத்மா. கண்ணன் ஓரத்தில் போய் சமத்தாக நின்றான். வருகிற பதினஞ்சுக்கு எட்டு வயது முடிகிறது. அப்பாவை அப்படியே அச்சு!

''எப்படி இருக்கிறாய் கண்ணா?''

''எல்லாம் சரியாகிவிட்டதம்மா''

''முகத்தில் தழும்பு ஏதும் இல்லை. நல்ல வேளை!''

ஆத்மா: ''சிகிச்சையின் சாகசம். இருபத்தோரம் நூற்றாண்டு என்றால் சும்மாவா? டாக்டர் குணா பரம கெட்டிக்கார். இவன் பிழைத்து வந்தது நவீன மருத்துவத்தின் மிகப்பெரிய சாதனை.''

''கண்ணா என்னைப் பார்! பேசு கண்ணா! உன் குரலைக் கேட்டு எத்தனை நாளாகிவிட்டது!''

''என்ன பேச வேண்டும்?''

''அம்மா அம்மா என்று கூப்பிடு.''

''அம்மா.''

''மறுபடிச்சொல்.''

''அம்மா.''

''மறுபடி மறுபடி,''

''அலுப்பாக இருக்கிறது.''

''அப்ப தூங்கப்போடா கண்ணு. அப்புறம் பேசலாம்.''

''தூக்கமா?''

ஆத்மா: ''ஆம் கண்ணா. உன் அறையைக் காட்டுகிறேன். நித்யா நீ எழுந்திருக்காதே. குழந்தை சற்றுத் தூங்கட்டும்''

கண்ணனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று அறையில் விட்டுவிட்டு ஆத்மா திரும்பினான்.

''என்ன சந்தோஷம்தானே நித்யா!''

''சந்தோஷம்தான். ஆனால்.... '' என்று நிறுத்தினாள்.

''என்ன ?''

''குழந்தை கொஞ்சம் மாறிப்போய்விட்டான்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''என் உள்ளுணர்வு சொல்கிறது. ஆத்மா... என்னமோ ஆகிவிட்டது அவனுக்கு. விபத்தின் அதிர்ச்சியால் ஏதாவது....''

''ஒரு வேளை நீ அவனை நெடுநாள் கழித்துப் பார்ப்பதினால் இருக்கும்.''

''இல்லை. ஆத்மா... எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. மாறி இருக்கிறான்.

(16ஆம் பக்கம் பார்க்க)

புரிப்பில் ப்ரியாமணி

சர்வதேசப் படவிழாவை ஷாருக்கானுடன் இணைந்து குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார் ப்ரியாமணி. குறுகிய காலத்தில் கிடைத்த இந்த பெரிய கௌரவத்தில் பூரித்துப் போயிருக்கிறார். அதைவிட முக்கியமாக, ஷாருக்கான் தன்னுடன் சகஜமாக பேசியதை பெருமையாக கூறிக் கொண்டிருக்கிறார். விழா மேடையில் 'என்னைப் போலவே நீயும் பதற்றமாகவா இருக்கிறாய்?' என்று ப்ரியாமணியை கேட்டிருக்கிறார் ஷாருக். இதே போன்று பல விடயங்களை ப்ரியாமணியுடன் கலந்துகொண்டிருக்கிறார். ''நான் பயப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர் இப்படியான கேள்விகளை என்னிடம் கேட்டு சகஜப்படுத்தியிருக்கிறார். அவர் உண்மையில் ஒரு நல்ல மனிதன். அவருடன் இருந்தபோது வானத்தில் பறப்பதுபோல் உணர்ந்தேன்'' என்றெல்லாம் உணர்ச்சிவசப்பட்டார் ப்ரியாமணி. 'பருத்தி வீரன்' படத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியதற்காக சர்வதேசப் படவிழாவில் குத்துவிளக்கேற்றும் கௌரவம் ப்ரியாவுக்குக் கிடைத்தது. அவரது திறமையை வெளிக்கொண்டுவந்த அமீரை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. திரைக்குப் பின்னார் இருப்பவர்களை நியாயமான முறையில் கௌரவிக்கப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றே தோன்றுகிறது.

கந்தசாமி படப்பிடிப்பு ரத்து

திடீர் விபத்தால் 'கந்தசாமி' படப்பிடிப்பு தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டது. சுசி. கணேசன் இயக்கத்தில் தயாரிப்பாளர் தானு மிகுந்த பொருட்செலவில் 'கந்தசாமி' படத்தை உருவாக்கி வருகிறார். விக்கிரம் - ஸ்ரேயா நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் நடந்து வருகிறது. சென்னையில் வைத்து விக்ரம் மற்றும் கிருஷ்ணா (இவர் தெலுங்கு நடிகர் மகேஷ்பாபுவின் தந்தையும் முன்னாள் நடிகரும் ஆவர்.) சம்பந்தப்பட்ட காட்சியை இயக்குநர் சுசி.கணேசன் எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது படப்பிடிப்புக்காக வைத்திருந்த இருப்பும் கம்பி எதிர்பாராத விதமாக சுசி. கணேசனின் காலில் விழுந்தது. இதில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்படவே, உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு நான்கு தையல்கள் காயம்பட்ட இடத்தில் போடப்பட்டது. தொடர்ந்து படப்பிடிப்பு நடத்தும் நிலையில் சுசி.கணேசன் இல்லாததால், படப்பிடிப்பு தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டது.

பரத்தின் "பார்கவா"

முன்பெல்லாம் தமிழ்நாட்டை மட்டும் மனதில் வைத்து கதை தயாரித்தார்கள், பட்ஜெட் போட்டார்கள். அந்தக்காலம் மலையேறிப் போய்விட்டது. இப்போதெல்லாம் தமிழைவிட தெலுங்கையே அதிகம் நம்புகின்றார்கள். 'பேரரசு' இயக்கத்தில் பரத், காஜல் அகர்வால் நடிக்கும் 'பழனி' படத்தின் படப்பிடிப்பே இன்னும் முடியவில்லை. அதற்குள் படத்திற்கு 'பார்கவா' என தெலுங்குப் பெயர் வைத்து, தெலுங்கில் படத்தை டப் செய்யும் வேலைகள் நடந்துவருகின்றன.'திருப்பதி', 'தாம புரி' என இரண்டு படங்களால் கலங்கிப்போன பேரரசு, 'பழனி'யை பக்காவாக உருவாக்கி வருகிறார். வழக்கமான அடிதடி பேரரசு ஸ்பெஷல்தான் இதுவும். பாடல்களும் வழக்கம்போல பேரரசுவே! தெலுங்கில் இவரது படங்களுக்கு தனி மவுசு உண்டு. அதனால் 'பழனி' படத்தையும் 'பார்கவா' என்ற பெயரில் தெலுங்கில் வெளியிட உள்ளனர். முருகன் அருள் இருந்தால் பேரரசுவின் பஞ்சாமிர்தத்தை தெலுங்கு ரசிகர்களும் ரசிக்கலாம்.

முமைத் கான் நம்பிக்கை!

''நான் நாயகியாக தொடர்ந்து நடிக்கலாமா என்பதை ரசிர்களே முடிவு செய்வார்கள்'' - என்றார் முமைத்கான். இது பற்றி அவர் கூறிதாவது யாவது:- ''குத்துப் பாடல்களுக்கு ஆட்டம் போட்டுவந்த நான் 'மைஸம்மா ஐ.பி.எஸ்' என்ற படம் மூலம் நாயகியாக நடிக்கிறேன். இப்படம் திரைக்கு வருவதால் கொஞ்சம் பயம் இருக்கிறது. கதாநாயகி வேடம் என்றாலும் அதிக எதிர்பார்ப்பு வைத்துக்கொள்ளவில்லை. என் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ரசிகர்களிடம் விட்டுவிட்டேன். ஒரு பாடலுக்கு நடனம் ஆட 3 முதல் 4 நாட்கள் போதும். கதாநாயகியாக நடிப்பதற்கு அதிக நாட்கள் தேவை. 'ஆபரேஷன் துரியோதனா?', 'உடம்பு எப்படியிருக்கு' ஆகிய படங்களில் நான் ஏற்ற வேடங்களிலிருந்து இது வித்தியாசமானது. கதாநாயகி ஆகிவிட்டதால் ஒரு பாடலுக்கு ஆட மாட்டேன் என்று அர்த்தம் இல்லை. சிறுவயதிலிருந்தே எனக்கு நடனம் பிடிக்கும். இதைவிட இன்னும் இரண்டு தெலுங்குப் படங்களில் நாயகியாக நடிக்கிறேன்'' - என்றார்.

ரீமா முத்தம்.... கார்த்தி வெட்கம்

ரீமா கொடுத்த தித்திக்கும் முத்தத்தில் சிக்கித் திணறி, வெட்கிப் போய் விட்டாராம் 'பருத்திவீரன்' கார்த்தி. பருத்தி வீரனுக்குப் பின்னர் கார்த்தி கலக்கும் படம் 'ஆயிரத்தில் ஒருவன்'. செல்வராகவன் இயக்கும் இப்படத்தில் முதலில் சந்தியாதான், கார்த்தியுடன் ஜோடி சேர்வதாக இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் சந்தியாவைத் தூக்கி விட்டு ரீமாவைப் போட்டுவிட்டார் செல்வராகவன். படப்பிடிப்பு படு விறுவிறுப்பாக நடந்து வருகிறது. சமீபத்தில் சிலுசிலுவென ஒரு பாடல் காட்சியைப் படமாக்கினர். அதாவது, காதலைப் பற்றி ஒன்றும் தெரியாமல் இருக்கிறார் கார்த்தி. கார்த்தியை காதலில் விழவைப்பதற்காக பாட்டுப்பாடி கார்த்தியை கதகதப்பாக்குவது போல ஒரு காட்சி படமாக்கப்பட்டது. இந்தக் காதல் பாட்டில் விறுவிறுப்பை அதிகமாக்குவதற்காக, கார்த்தி உடல் முழுவதும் ரீமா சென் முத்தமிடுவது போலப் படம் பிடித்தனர். ரீமா சற்றும் தயக்கம் இல்லாமல் சட் சட்டென்று முத்தம் கொடுத்துக்கொண்டே போனர். ஆனால் கார்த்திதான் கூச்சப்பட்டுப் போய்விட்டாராம். இயக்குநரும், ரீமாவும் அவரை சகஜமாக்கி ஒரு மாதிரியாக இந்தக் காதல் களேபரப் பாடலைப் படமாக்கி முடிந்தனராம்.

நாயகன் ஆகிறார் செந்தில்; ஜோடி சேர்கிறார் மீனா



கதையின் நாயகன் என்ற ஒருவார்த்தை சொல்லிவிட்டால் போதும் யாரை வேண்டுமானலும் நாயகனாக ஏற்றுக்கொள்ளும் தாராள எண்ணம் கொண்டவர்கள்தான் தமிழ்த்திரை ரசிகர்கள். அவர்களுக்கு ஒரு செய்தி.... இதுவரை நகைச்சுவை நடிகனாக உங்கள் வயிற்றை பதம் பார்த்துவந்த செந்தில் 'ஆதிவாசியும் அதிசயபேசியும்' என்ற படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகின்றார். படத்தின் பெயரைப் பார்த்தவுடனேயே கதை புரிந் திருக்குக்குமே!? காட்டுவாசியாக இருக்கும் செந்திலின் கையில் கையடக் கத் தொலைபேசி ஒன்று சிக்குகின்றது. அதன்பின் நடக்கும் சுவாரஸ்யங் களே கதையாம். நாயகனுக்கு ஜோடி யார் என்று கேட்டால் பொறாமையு டன் கூடிய மயக்கம் வருகிறது. நாயகியாக மீனா, மாளவிகா இரண்டு பேரி டமும் நடிப்பதற்கு கேட்கப்பட்டுள்ளதாம். அனேகமாக மீனா தேர்வாகலாம் என நம்பப்படுகிறது. மேலும் ரமேஷ் அரவிந்த், லிவிங்ஸ்டன், மயில்சாமி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனராம். பி.பி.சி. இன்ரர் நேஷனல் என்னும் புதிய நிறுவனம் சார்பில் பி.வி.பாவு, சிவராமகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து தயாரிக்கும் இப்படத்தை சுரேஷ் கிருஷ்ணாவிடம் இணை இயக்குநராக பணிபுரிந்த மாலன் இயக்குகிறார். கதையை கிரண் எழுத, ஏ.ராஜகோபால் வசனம் எழுதுகிறார். படத்தின் மொத்த படப்பிடிப்பும் மலேசியா மற்றும் தென் அமெரிக்க காடுகளிலும் கடற்கரையிலும் நடத் தப்படவுள்ளதாம்.

மாதவனுக்கு ஜோடி ஸ்ருதி கமல் ஹாசன்

ஒரு வழியாக நடிக்க வந்தவிட்டார் கலைஞானி கமல்ஹாசனின் மூத்த மகள் ஸ்ருதி ஹாசன். மாதவனுடன் இணைந்து புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார் ஸ்ருதி. கமல்ஹாசனின் இரு மகள்களில் மூத்தவரான ஸ்ருதி ஹாசன் சமீப காலமாக அதிகம் பேசப்பட்டு வந்தார். சூப்பர் ஸ்டார் ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா கிராபிக்ஸில் கலக்கிக் கொண்டிருக்கும் நிலையில் ஸ்ருதியும் சினிமாத் துறையில் ஏதாவது ஒரு பிரிவில் புகுந்து கலக்குவார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துவந்தது. அதற்கேற்ப இசையில் அதிக நாட்டம் உடைய ஸ்ருதி, இசையமைப் பாளராக உருவெடுக்கும் நோக்கில் செயற்பட்டுவந்தார். முன்னோட்ட மாக சில அல்பங்களையும் அவர் உருவாக்கி வந்தார். இந்த நிலையில் ஸ்ருதி நடிக்கவும் வருவார் என்ற பேச்சு எழுந்தது. இதையடுத்து பல தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் ஸ்ருதியை நடிக்க வைக்க கமல் ஹாசனை அணுகினர். ஆனால் தனது விருப்பத்திற்கேற்ப முடிவு வெடுக்கும் சுதந்திரத்தை கமல்ஹாசன் ஸ்ருதிக்கு அளித்தார். லொஸ் ஏஞ்சல்ஸில் இசைப் படிப்பை முடித்த ஸ்ருதியின் முதல் ஹிந்துஸ் தானி இசை அல்பம் வெளியிடப்படும் தருவாயில் உள்ளது. இந்த நிலையில், ஸ்ருதி தனது பெற்றோர் வழியில் நடிப்புக் கடலில் குதிக்க முடிவெடுத்துவிட்டார். மராத்தி மொழி இயக்குநர் நிஷிகாந்த் இயக்கத்தில், மாதவனுடன் இணைந்து ஸ்ருதி நடிக்கப் போகிறார். இதே நிஷிகாந்த்தும், மாதவனும் இணைந்துதான் 'எவனோ ஒரு வன்' படத்தை உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மராத்தி மொழியில் வெளியான 'டோம்பிவிலி பாஸ்ட்' படத்தின் ரீமேக்தான் 'எவனோ ஒருவன்' மும்பை இசைப் புயல்கள் சங்கர் - ஈசான் - லாய் குழுவினர்தான், மாதவன் - ஸ்ருதி நடிக்கும் படத் திற்கு இசையமைக்கவுள்ளனர். ஸ்ருதி பாடல்களைப் பாடப் போகிறார். விருதுகளை வாரிக்குவித்துள்ள கலைக்குடும்பப் பின் னணி, கமல்ஹாசன் - சரிகாவின் மகள், இசையில் ஞானம், நல்ல பாடகி என பல பெயர்களைப் பெற்றுள்ள ஸ்ருதி மீது திரையுலகில் மட்டுமல்லாது சினிமா ரசிர்கள் மத்தியிலும் பெரும் எதிர்ப்பார்ப்பு எழுந்துள்ளது.

பிரதி மகன்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்னை முத்தமிட்டான். அதுகூட வேறுவிதமாக இருந்தது.''

''சே, உளறாதே. நான் உன்னை எத்தனை முறை முத்தமிட்டிருக்கிறேன். பதினாறு பதினேழு வகையாவது இருக்காது?''

''இருந்தாலும் ஆதாரமாக உனக்கு ஒரு முத்திரை, ஒரு வாசனை, ஓர் அடையாளம் உண்டு ஆத்மா. அதுபோல் என் மகன் முத்தத்துக்கும் ஓர் அடையாளம் உண்டு.''

''ஆஸ்பத்திரி மூன்று மாதத்தில் அவனை மாற்றிவிட்டதா?''

''அப்படித்தான் இருக்க வேண்டும். என்னை அம்மா என்று கூப்பிட்டதுகூட கடமைக்குக் கூப்பிட்டதுபோல் இருந்தது. குழந்தைக்கு என்னவோ ஆகியிருக்கிறது.''

''கற்பனை செய்யாதே. எல்லாம் சரியாகிவிடும், நித்தியா நீ போய் ஓய்வு எடுத்துக்கொள். எனக்கு அலுவலக அறையில் நிறைய செய்திகள் தங்கிப்போயிருக்கிறன. காலையில் பார்க்கலாம்.''

ஆத்மா சென்றதும் நித்யா யோசித்தாள். 'சே! கற்பனையா?' மற்றொருமுறை பிள்ளையைப் பார்க்கும் ஆசை ஏற்பட்டு சக்கர நாற்காலியின் விசையைத் தொட்டாள். சப்தமின்றி நகர்ந்து கண்ணனின் அறைக்குச் சென்றாள். கதவைத் தட்ட வேண்டாம். குழந்தை அலுப்பில் தூங்குவான். ஜன்னலுக்குச் சென்று எட்டிப்பார்த்தாள். திடுக்கிட்டாள்.

கண்ணன் கை கட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தான். எந்தவித சலனமும் இல்லாமல் அச்சடிதாற்போல், அந்த இடத்தில் உறையவைத்தாற்போல நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் விளையாட்டு சாமான்களைத் தொடவில்லை. அறையில் எதையும் கலைக்கவில்லை.

முன்பெல்லாம் என்ன ரகளைகள் செய்வான் ! ஏன் நின்றுகொண்டே இருக்கிறான்? கால் வலிக்காதோ!

கதவைத் திறந்து,

''கண்ணா!'' என்றாள்.

''தூங்கலியா?''

''இல்லை.''

''கால் வலிக்கலியா?''

''இல்லை.''

''படுத்து தூங்கு கண்ணா!''

''தூங்க வேண்டாம்''

''தூங்கணும் கண்ணா.தூங்கினாத்தான் தெம்பு வரும்.''

''எனக்கு வேண்டாம்.''

''அப்புறம் தூங்குகிறாயா? சாப்பிட்டாயா?''

''சாப்பிடலை.''

''பசிக்கலை?''

''பசி?''

''கடைசியா என்ன சாப்பிட்டாய் கண்ணா?''

''இல்லை. சாப்பிடலை. ஒண்ணுமே சாப்பிடலை.''

நித்யா சற்றுக் கலவரத்துடன் ஆத்மாவை ரேடியோவில் அழைத்தாள். ''ஆத்மா கொஞ்சம் வாயேன். குழந்தை என்னவோ பேசுகிறான். பசிபோலும். ஒண்ணுமே சாப்பிடலையாம்.''

ஆத்மா சற்று அவசரமாக வந்தான்.

''என்ன நித்யா?''

''பசிக்கலையா என்று கேட்டால் புரியாமல் விழிக்கிறான். ஒன்றுமே சாப்பிடவில்லையாம்.''

'' பார் நித்யா, உன்னிடம் ஒன்று சொல்லிவிட வேண்டும். கண்ணன் பிழைத்துவிட்டான்.உடம்பு சரியாகிவிட்டது. இருந்தும் இந்த விபத்தின் அதிர்ச்சி அவன் மனதில், மூளையில் ஏற்படுத்தி இருக்கக் கூடிய பாதிப்புகளைப் பற்றி எதுவும் உத்தர வாதமாகச் சொல்ல முடியாது என்றார் குணா. ஆரம்ப காலத்தில் சில வினோத நடவடிக் கைகள் இருக்கலாம். அதைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது. போகப் போகச் சரியாகிவிடும்.''

''அதில்லை ஆத்மா... ஒரு குழந்தை சாப்பிடாமல் இருக்குமா?''

''சாப்பிட்டிருக்கிறான். அதை நீ கேட்கிறபோது சரியாக சொல்லத் தெரியவில்லை. குழந்தையைத் தொணதெணக்காதே. இவ்வளவு பெரிய விபத்தில் அவன் தப்பித்து நடமாடுவதே பெரிய காரியம்.''

நித்யா திருப்தியடையாமல்,

''அதுகூடச் சரிதான். கண்ணா மன்னித்துக்கொள். நான் உன்னைத் தொந்தரவு செய்துவிட்டேன். சமர்த்தா தூங்குடா'' என்றாள்.

''தூக்கம் ?'' என்றான் கண்ணன்.

''நீ போ, நித்யா. மாலை பார்க்கலாம். அவனுக்கு உரிய மாத்திரை மருந்துகள் எல்லாம் கொடுத்தாகிவிட்டது.''

நித்யா தன் அறைக்குள் சென்றாள். இருப்புக் கொள்ளவில்லை. குழந்தை பசியோடு இருக்கிறான் என்கிற ஆதங்கம் இருந்தது. 'நாளை டாக்டர் குணாவுக்குச் செய்தி சொல்லிவிட வேண்டும். என்னவோ பிரமை பிடித்தாற்போல் ஒரே திசையில் பார்த்துக் கொண்டு நிற்கிறான். சாப்பிடவில் லையாம். ராத்திரி சாப்பிடுவான். இப்போது தானே ஆஸ்பத்திரி வாசம் முடிந்து வந்திருக் கிறான். எத்தனை மருந்து மாயங்கள் குடித்திருப்பான். பசியே இருக்காது. ராத்திரி குழந்தை நிம்மதியாகத் தூங்கட்டும். காலை பார்த்துக் கொள்ளலாம். அவனைக் கண்ணுக்கு கண்ணாகப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் இப்போது என் கடமை.'

அன்று இரவு மூன்று மணிக்கு நித்யா புரியாத ஒரு சொப்பனத்திலிருந்து எழுந்துவிட்டாள். ஒரு நிமிஷம் எங்கே இருக்கிறோம் என்று நிலையில் ஒருவித சந்தோஷமும் கூட இருந்தது. கண்ணன் திரும்பி வந்துவிட்ட சந்தோஷம். மகன் உறங்குகிறானா என்று ஒருமுறை பார்த்துவிடலாம் என்று சக்கர வண்டியில் அமர்ந்து அதைச் செலுத்தி மகனின் அறைக்குச் சென்று கதவைத் திறந்து பார்த்தாள். அதிர்ந்தாள்.!

கண்ணன் மாலை பார்த்தது போலவே ஒரே திசையில் பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தான். நிற்கும் பாணியில் ஏதோ ஒரு பெரிய மனுஷத்தனமும்,'நிற்பதுதான் என் விதி' என்கிறது போன்ற ஒரு விரக்தியும் தெரிந்தது. ஏன் இன்னும் உட்காரவில்லை அவன்? அவன் மனசு எப்படித் பாதிக்கப் பட்டிருக்கும்? நித்யாவுக்கு முதன் முதலாகத் தன் மகனிடம் சற்றுப் பயமாக இருந்தது.

''கண்ணா! கண்ணா!'' என்ற சன்னமாகக் கூப்பிட்டுப் பார்த்தாள்.

''என்ன?'' என்றான் திரும்பாமல்.

''தூங்கலியா கண்ணா?''

''தூங்க மாட்டேன்.''

''கண்ணா, தூங்காவிட்டால் உடம்புக்கு ஏதாவது பெரிதாக வந்துவிடும்.''

''என் உடம்புக்கு ஒன்றும் வராது.''

''கண்ணா நான் யார் என்று தெரிகிறதா?''

மெல்லத் திரும்பி,

''அம்மா எனக்கு தூக்கம் வேண்டாம். நீ போ'' என்றான்.

''முடியாது. நான் இங்கேதான் இருப்பேன்!''

''சரி இரு.''

ஒன்றும் பேசாமல் அவன் அப்படியே ஏதோ நிகழ்வதற்கு காத்திருப்பது போல் நின்றான்.

'கண்ணன் முன்னைப்போல் இல்லை. குழந்தை எப்படியெல்லாம் சிரித்துப் பேசும். எவ்வளவு விளையாடும், கொட்டமடிக்கும் சத்தமாக. சிகிச்சை அல்லது விபத்து இவனை மாற்றிவிட்டது. நாளை டாக்டரிடம் நிச்சயம் சொல்ல வேண்டும்.'

''உட்காரேன் கண்ணா!''

''சரி'' உட்கார்ந்தான்.

அப்பாடா!முதல் தடவை.

''அப்படியே படுக்கையில் படுத்துக்கொள்ளேன் ராஜா!''

''சரி.'' படுத்தான்.

''எங்கே,கண்ணை மூடிக்கொள் பார்க்கலாம்.''

அவன் கண்ணிமைகள் மூடின.

சற்று நேரம் அப்பழுக்கற்ற அவன் வதனத்தைப் பார்த்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டு மெல்ல விலகினாள்.

காலை பத்து மணிக்குள் குழந்தையிடம் நூறு மாறுதல்களை உணர்ந்தாள். 'அழுகை என்பதே இல்லை. எவ்வளவு பிடிவாதம் பிடிப்பான்! மருந்துக்குக்கூடப் பிடிவாதிக்காமல் சுத்தமாக உடை அணிந்துக்கொள்கிறான். தானே எல்லாம் செய்துக்கொள்கிறான்.'

டாக்டர் குணா வந்து,

'' என்ன நித்யா உன் மகன் எப்படி இருக்கிறான்?'' என்றார்.

''நிறைய மாறுதல் டாக்டர் !''

''அப்படியா? என்ன, என்ன சொல்லு? எல்லாவற்றையும் சரிபண்ணிடலாம்.''

''மூன்று மணி நேரம் நின்றால் ஒரு குழந்தைக்கு கால் வலிக்காதா? உட்கார் என்று சொன்னால் தான் உட்காருகிறான். சாப்பிடவே இல்லை. அடம்பிடிக்கிறது, பிடிவாதம் எல்லாம் காணாமல் போய்விட்டது. என்னவோ பெரிய மனுஷன் மாதிரி தானாகவே தலைவாரிக்கொள்கிறான்!''

''அவ்வளவுதானே? எல்லாவற்றையும் சரி பண்ணிவிடலாம்... ஆத்மா என்கூட வா. பயலைப் பரிசோதித்துப் பார்க்கலாம். நித்யா நீ இங்கேயே இரு. உனக்கும் உடம்பு சரியில்லை. அதிகம் சிரமப்படுத்திக்கொள்ளக்கூடாது.''

ஆத்மாவும் குணாவும் கண்ணனின் அறைக்குள்சென்று தாளிட்டுக்கொண்டார்கள்.

''என்னவோ செய்யட்டும். என் மகன் குணமானால் சரி.''

டாக்டருக்கு ஏதாவது பருகத் தர வேண்டும் என்று சமையல் அறைக்குச் சென்று பொத்தானைத் தொட்டாள். திரையில் ஒரு பட்டியல் தெரிந்தது.

''மூன்றுகோப்பை ஸிட்ரோ மூன்றாவது எண் பட்டியலில்'' என்றாள்.

''எப்போது வேண்டும்?''

டாக்டரை கேட்டுவிடலாம். பரிசோதனைக்கு நேரமாகுமா என்ன... சமையல் அறையில் இருந்த தொடர்புப் பட்டன் வரிசைகளிலே கண்ணனின் அறையின் எண்ணைத் தொட்டாள். அந்த அறையில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தது இங்கே கேட்டது.

''எனக்கு இதெல்லாம் முன்பே சொல்ல வேண்டாமா? அவள் என்ன மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது எனக்கு எப்படித் தெரியும்? '' கண்ணனின் குரல்!என்ன இப்படிப் பேசுகிறான்?வீடியோவைத் தட்டினால் அந்த அறை காட்சி திரையில் தெரிந்தது. ஆத்மாவும் குணாவும் நாற்காலியில் வீற்றிருந்த கண்ணனுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

குணா : ''சரி! சென்றதை மற. இப்போதாவது கற்றுக்கொள். சும்மா எப்போது பார்த்தாலும் நிற்கக்கூடாது. அவ்வப்போது அங்கங்கே உட்கார வேண்டும்.''

''சரி, சொன்னால் செய்கிறேன்''

''அவ்வப்போது அவளோடு சிரித்துப் பேச வேண்டும். விஷமம் செய்ய வேண்டும்.''

''விஷமம் என்றால்?''

''அடிக்கடி அவள் தலையைக் கலைத்துவிடு. ஸ்டீரியோவிஷனைப் போட்டுப் போட்டு அணை. குட்டிக்கரணம் போடு.''

''குட்டிக்கரணம்?''

''தலைகீழாக மடங்கி புரளுதல்.''

''அதற்கு என் ஜைரோ அனுமதிக்காது.''

''சரி, அதை விடு.''

''சாப்பிடு, சாப்பிடு என்கிறாள். எனக்கு அது புரியவே இல்லை. அவள் கொடுப்பதை எல்லாம் எனக்குள் போட்டால் என்னுள் இருக்கும் சிலிக்கன் கம்ப்யூட்டர் பாதிக்கப்படும்.''

''சாப்பிடுகிற மாதிரி பாவனை செய்து ஜன்னல் வழியாக கொட்டி விடேன்.''

''சாத்தியம்''

'' இதுபார்! முதல் மகன் இறந்துவிட்ட அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்கிற நிலையில் இல்லை அவள். அதிகபட்சம் மூன்று மாதம் அவள் மகனாக இருக்க வேண்டும் நீ''

''என்னைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையா?''

''நிச்சயம்! நிச்சயம்! வெளித் தோற்றம் தத்ரூபம்தான். அப்படியே என் மகன் போல இருக்கிறாய். ஆனால் நடை, உடை பாவனையில்தான் இன்னும் கொஞ்சம் நன்றாகச் செய்ய வேண்டும்.''

''எனக்கு கொடுத்த ப்ரோகிராம்படி நான் செய்கிறேன். அதை மாற்றிக் கொடுங்களேன். உங்களுக்குத்தான் தெரியுமே. என் மொடலில் எப்போது வேண்டுமானாலும் புது ஆணைகளைச் சேர்க்கலாம். என்ன?''

''ப்ரோகிராம் மாற்றும் சாதனம் எங்கே இருக்கிறது.''

'' என் கழுத்துக்குள். அங்கே ஓர் மைக்ரோ ஸ்விட்ச் இருக்கிறது. அதை ஒரு முறை செயல்படுத்திவிட்டு உங்களுக்குவேண்டிய அதிகப்படி ஆணைகளைத் தெளிவாக ஒருமுறை சொல்லிவிடுங்கள். அது போதும்.''

''அந்த ஸ்விட்சைக் காட்டு.''

நித்யா தன் மார்பை பிடித்துக்கொண்டாள். மூச்சு வாங்க ஆரம்பித்தது.

கண்ணன் எழுந்து நின்றான். மெல்ல தன் இரண்டு கைகளையும் இரண்டு கன்னங்களிலும் வைத்துக்கொண்டு சுளுக்கு எடுப்பவன் போல் தலையைச் சற்றே திருகிக் கொண்டான்.

அதன்பின், தன் தலையை முழுவதும் கழற்றி எடுத்துப் பக்கத்து மேஜைமேல் வைத்தான். டாக்டர் குணா அந்தக் கழுத்துப் பொந்துக்குள் கைவிட, நித்யா 'வீல் என்று அலறி மயங்கி விழுந்தாள்.

– நன்றி சுஜாதா–

தீபாவளிக்கு...

(13 ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்துள்ள 'மச்சகாரனும்' யோகக்காரனாகவே காணப்படுகிறான். போட்ட பணத்திற்கு பழுதில்லாமல் படம் ஓடுகின்றது. இனி கடைசியாக சத்யராஜ் நடிக்க பெண் இயக்குனர் ப்ரியாவின் இரண்டாவது படமான 'கண்ணாம்பூச்சி ஏனடா?'வும் வசூலில் கல்லாவை நிரப்பி வருகின்றது. மொத்தத்தில் இந்த வருட தீபாவளி சினிமா தயாரிப்பாளர்களின் மனதினை மகிழ்ச்சிப் படுத்தியுள்ளமையினால் இனி இன்னும் புதிய படங்களை தயாரிக்க அவர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவார்கள். இவற்றுக்கெல்லாம் மேலாக சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின் இந்தமுறைதான் மலையகத்தின் மத்தியில் அமைந்துள்ள ஹட்டன் நகரில் விஜய் நடித்த 'அழகிய தமிழ் மகன்' இன்னமும் ஜனத்திரள் நிறைந்த காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கின்றது. முன்னர் எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்கள் தீபாவளி காலங்களில் வெளியிடப்படும் போதுதான் இந்த காட்சியைக் காணக்கூடியதாக இருக்கும். ஏற்கனவே நஷ்டம் காரணமாக இரண்டு திரையரங்குகள் மூடப்பட்டுள்ள நிலையில் 'அழகியத் தமிழ் மகனின்' அட்டகாசமான ஓட்டத்தை பார்த்தவர்கள் அடுத்த நடிவடிக்கையாக ஒரு மினி திரையரங்கையாவது திறக்கலாமா என யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். நல்ல விஷயம் தானே!

அம்மா...

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

''தாமரை நீயா...?'' அதற்குமேல் அவன் பேச்சு இழந்தான். ஆதரவற்றோர் இல்லத்தில் சென்று எதிர்காலத்தையே தொலைத்து விட்டு அன்புக்கு ஏங்கி நின்ற மழலையை பொறுப்பேற்று ஆசையோடு மதுவென்று அவள் தானே பெயரிட்டாள்!

மதுவிற்கு பிடித்தவை, பிடிக்காதவை என சாப்பாடு, உடுப்பு தொட்டு தன் நாளாந்த நடவடிக்கைகளையே குழந்தைக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைத்துக் கொண்டு புது வாழ்க்கை வாழ்ந்து வருகிறாள். கருவில் சுமந்து பெற்றால்தான் பிள்ளையா.... இவள் வாழ்க்கையை வந்து பார்த்தால் புரியும் - தாய்மையின் இருப்பிடமே இவள் தானென்று! வாராது வந்த அந்த வசந்தத்தையே இழக்க துணிந்துவிட்டாளா?

ஆயுளுக்கு பக்கத்துணையாயிருக்க வேண்டிய கணவனே ஆதரவுதர மறுக்கும்போது பேதையவள் என்ன செய்வாள்....?

கமலநாதன் மதுவிற்கு முன்னால் மண்டியிட்டு அமர்ந்தார். ''பார்த்தாயா உன்னோட குழப்படியால பெரியவங்களுக்குள்ள சண்டை, இப்ப சொல்லு, எதுக்கு கோபியை அடித்தாய்...?''

''அவன் என் அப்பாவை கள்ளனென்றான்'' அது கேட்டு காசி நெற்றியை சுருக்கினான்.

''வகுப்பில அடுத்தவங்க பொருளுக்கு ஆசைப்படாதே... எதுவும் எடுக்கக் கூடாதென்று எனக்கு அப்பா சொல்லறவர். அவர் கள்ளனாம்.''

''எப்படி.....?''

''அவனோட அம்மாவை எங்கப்பா ஏமாத்திட்டாராம். அப்படின்னு வகுப்பில் எல்லார் கிட்டேயும் தப்பாக சொல்லுறான். பொய்சொன்னதுனால கோபம் வந்து அவனுக்கு...'' காசிக்கு சரேலென சவுக்கடி பட்ட ரணவேதனை! கையிலிருந்த கம்பு நழுவி தரையில் விழுந்தது.

''நீங்களே சொல்லுங்க மாஸ்டர். என்ர அப்பா அப்படி செய்வாரா.....?''

பிஞ்சு நெஞ்சின் அந்த வார்த்தை களைக் கேட்டு காசி மட்டுமில்லை அம்மா, தாமரை, கமலநாதன் அனைவருமே அதிர்ந்து போய் நின்றனர். அவர்களால் இனி பதில் பேசத்தான் முடியுமா....?

★

(முற்றும்)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

05. பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கோடிடுக.

1) இலங்கையின் முதல் பெண் பிரதம மந்திரி

A B C

2) ஈருடக வாழி உயிரினம் ஒன்று.

A B C

3) பிரபல ஓவியர் லியார்னடோ-டாவின்சியின் உலகப் புகழ் பெற்ற ஓவியம்.

A B C

4) தீயணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வாகனம்.

A B C

06. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

1) இல்லை/என்னிடம்/பணம்/பாட்டி.

.....

2) புரிந்து/தந்திரம்/விட்டது/நரியின்

.....

3) நலமாக/இருக்க/நாம்/வேண்டும்

.....

4) வேண்டும்/கல்வி/கற்க/அனைவரும்

.....

5) தலைநகரம்/ஆகும்/ இலங்கையின்/ஸ்ரீ ஜயவர்த்தனபுர

.....

06. எண் கோலத்தை நன்கு அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான சரியான விடையை குறித்துக் காட்டுக.

1)

5 8 6 9 6 9

[18] [24] [?] .....

1 4 6 3 8 9

2)

	2	5
2	a ?	b ?
3	c ?	d ?

a) .....
b) .....
c) .....
d) .....

3) 479 - [ ] = 234 .....

07. தரப்பட்டுள்ள உருவில் எத்தனை செவ்வகங்கள் உள்ளன? .....



08. 1) 53 பத்துக்கள் என்பதில் எத்தனை நூறுகள் உண்டு? .....

2) ரூபா 1இல் எத்தனை 5 சதங்கள் உள்ளன? .....

3) 48/100 என்பதை தசம எண்ணாகத் தருக. .....

4) 48 இன் 5/8 பங்கு எத்தனை? .....

09. பேருந்து ஒன்று 10.00 மணிக்கு திருமலையிலிருந்து புறப்பட்டு 14.30மணிக்கு யாழநகரவையை அடைந்தது எனின், அது பயணத்திற்குச் செலவிட்ட நேரம் என்ன? .....

10. 1) மணித்தியாலம் ஒன்றுக்கு பயணக்கட்டணமாக ரூ 400 அறவிடும் கொகுசு பஸ் ஒன்று ரூ 3600ஐ கட்டணமாக அறவிட்டால், பஸ் பயணம் செய்த மணித்தியாலத்தின் அளவு? .....

2) சதுர வடிவ மைதானம் ஒன்றின் ஒருபக்க அளவு 1500m எனின், அதன் சுற்றளவை km இல் தருக. .....

3) 24 அப்பிள் பழங்களின் விலை ரூ 768 எனின், 4 அப்பிள் பழங்களின் விலை யாது? .....

11) தரப்பட்டுள்ள உருக்களுள் வித்தியாசமான உருவின் கீழ் கீறிடுக.

1) 

A B C D

2) 

A B C D

3) 

A B C D

12. கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

1)

த : .....
ஆ: .....

2)

த : .....
ஆ: .....

3)

த : .....
ஆ: .....

4)

த : .....
ஆ: .....

13. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) தந்தி - .....
2) வரைபடம் - .....

14. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Environment - .....
2) Education - .....

15. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) வாடிவென்ன - .....
2) வஸ்ஸ - .....

16. எமது நாட்டில் யுத்தம் நின்று சமாதானம் மலர்ந்தபோது என்பதை தொடர்ந்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகள் அற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

1) .....
2) .....
3) .....
4) .....
5) .....

முற்றும்

தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

படிமுறைப் பரீட்சை 13 - 2007

ஆசிரியர்:- திரு.U.L.M. சாஜித் (திந்தவூர்)
இல்மா ஹொலிடே பாடசாலை,திந்தவூர். தொ.பே.இல:0779597407

வயசானாலும் அழகு குறையாது!

அனைத்துப் பொறுப்புக்களும் முடிந்த பிறகு வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழும் முறை இது.

இந்த வயதில் 'ஈஸ்ட்ரோஜன்' ஹார்மோன் உடம்பில் குறையத் தொடங்கும். இதனால் சருமத்தில் சில மாற்றங்கள் நிகழும். மெல்ல சுருக்கங்கள் ஏற்படும். முக்கியமாக நெற்றி, கழுத்து மற்றும் கைகளில் 50 வயது முதுமை மற்றும் கிழத்தனத்தின் காலம் ஆரம்பமாகிவிடும். ஆனால், இந்த காலகட்டத்திலும் நீங்கள் உங்கள் தோற்றத்தை இளம் பெண்களைப் போன்று உற்சாகமாகக் காட்டலாம்.

இன்றும் இளமைத் தோற்றத்தோடு காணப்படும் 67 வயது ஜோன் கோலின்ஸிடம் அதன் ரகசியத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

நடுத்தர வயது மகளின் தாய் மற்றும் இளவயது பேத்தியின் பாட்டியான ஜோன் கோலின்ஸ் ஒரு பிரபல நடிகை.

பெண்

'டைனெஸ்டி' சீரியலில் அவரது நடிப்பைக் கண்டு யாரும் சொல்ல முடியாது, இவருக்கு 67 வயதாகின்றது என்று. இந்த வயதில் அவர் 18 வயது இளம் பெண் போன்று கவர்ச்சியாக இருக்கிறார்.

''எப்போதும் மன இறுக்கத்தோடு இருக்கக்கூடாது. மற்றும் எந்த சூழ்நிலையையும் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று அழகை கெடாமல் பாதுகாக்க வழி கூறுகிறார்.

ஜோன் கோலின்ஸ் கதைகள் கூட எழுதியிருக்கிறார். அவர் பல திருமணங்கள் கூட செய்திருக்கிறார் மற்றும் மிகக் குறைவாகப் பேசுவார். தினமும் உடற்பயிற்சி செய்கிறார். மாடி வீடுகளுக்கு ஏற படிகளையே பயன்படுத்துகிறார். லிஃப்ட் உபயோகிப்பது கிடையாது. இதுவும் ஒரு உடற்பயிற்சிதான்.

அவர் பசி எடுக்கும் போது சாதாரண மற்றும் சிறிதளவே உணவு உட்கொள்கிறார். எப்போதும் எதையாவது சாப்பிட்டுக்கொண்டிருப்பது உடல் நலக்கேடு என்கிறார். ஜீரண உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டுமல்லவா என்றார்.

'' ஒரு பெண் அழகாக இருக்க வேண்டுமானால் தன்னை சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். 'நான் தொழிலில் வெற்றி பெறவில்லை. நிறைய செய்தாகிவிட்டது. இனி ஓய்வெடுக்க வேண்டியதுதான்' என்று நினைக்கக் கூடாது'' என்றும் அவர் கூறுகிறார்.

''கல்யாணம்தான் ஆகிவிட்டதே! எம்மை யார் பார்க்கப்போயினம்?''

''வயதாகிவிட்டது குழந்தைகள் வளர்ந்துட்டாங்க. அலங்காரமெல்லாம் இனி எதற்கு?''

''நான் இனி எங்கே போகப் போறேன். உடம்பு வேறு குண்டாகி விட்டது. அதைக் குறைச்சு என்ன பண்ணப்போறேன்...''

இப்படிப் பெரும்பாலான பெண்கள் சொல்வதைப் பல வீடுகளில் கேட்கலாம். இப்படியான பெண்களிடம் ப்யூட்டி பார்லர் அல்லது ஃபிட்னெஸ் சென்டர் செல்லுங்கள், விடியற் காலையில் காலாற நடவுங்கள் அல்லது உடற்பயிற்சி செய்துகொள்ளுங்கள் என்று எதையாவது சொன்னால் அல்லது ஒரு சில மேக்கப் செய்து கொள்ள ஆலோசனை வழங்கினால் கண்டுகொள்வதில்லை.

இந்த நிலைமை மிகவும் வருந்தத்தக்கது. ஏனெனில் தேவையில்லாத விஷயங்களில் பெண்கள் தங்களின் பொன்னான நேரத்தை வீணாக்குகின்றார்கள். ஆனால், தங்களது ஆரோக்கியம் மற்றும் அழகைப் பராமரிக்க அவர்களிடம் நேரம் இருப்பதில்லை.

வயது அதிகமானவுடன் இனி அழகாகத் தெரிய என்ன அவசியமிருக்கிறது என்ற இந்த வார்த்தையை பெண்களின் மூளையிலிருந்து அறவே நீக்கிவிடவேண்டும். இதுதான் தகுந்த நேரம். பெண் தன் உடல் மற்றும் முகத்தைப் பராமரிக்கவேண்டியது மிக மிக அவசியம். தரமான 'பியூட்டி ட்ரீட்மென்ட்', பொருத்தமான மேக்கப், நல்ல உடையைத் தேர்ந்தெடுத்தல், உயர் ரக ஹேர் ஸ்டைல் இவை சாதாரண மற்றும் நடுத்தரப் பெண்களையும் அழகாக மற்றும் கவர்ச்சியாக காட்ட உதவும்.

நடுத்தர வயதாகிவிட்டால், குழந்தைகள் பெரியவர்களாகிவிட்டால் மற்றும் மெனோபாஸால் பாதிக்கப்பட்டால் என்ன? இது புது வாழ்க்கையை ஆரம்பிக்கக்கூடிய காலம்.

லேட்டஸ்ட் பாஷன்



பிளவுஸ் டிசைன்கள்

மொடர்ன் பிளவுஸ் போடும் பெண்களுக்கு வகைவகையாய் புதுப்புது டிசைன்களில் ரெடிமேட்டாக உடைகள் வந்தபடி இருக்கின்றன. சேலை உடுக்கும் பெண்களுக்குத்தான் எப்போதும் டிசைன்கள் பற்றிய கவலை அதிகம் உண்டு!

''ஆமாம் எப்பவும் அதே போல ஒரு சேலை, ஒரு பிளவுஸ்! கலர் மட்டும்தான் மாறும்! ச்சே! போரடிக்குது!'' என்று சொல்பவர்கள் உண்டு. இதோ, சேலை கட்டும் பெண்களுக்கு சேலைகளை வகை,வகையாக கட்ட புத்தம் புதுசாய் பல ப்ளவுஸ் டிசைன்கள்! நம் வாசகிகளுக்கு என்றே இவற்றை பேப்பரில் டிசைன் செய்திருக்கிறார் சென்னையின் பிரபலமான பாஷன் டிசைனர் தபு. படத்திலுள்ள பிளவுஸ் டிசைன்களில் உங்கள் ரசனைக்கும், உடல் வாகுக்கும், எடுக்கும் துணி வகைக்கும் பொருத்தமான டிசைனை தேர்வு செய்து டெய்லரிடம் கொடுத்து தைத்து வாங்கிக் கொள்ளுங்கள்!

படத்தில் உள்ளவை தவிர, தோள்பட்டைகளில் மெல்லிய பட்டைகளுடன் இருக்கும் நுடுல் ஸ்ட்டேப் பிளவுஸும், மற்ற பிளவுஸ்களைவிட, உயரம் சற்றே அதிகமான டைப்பில் கார்செட் பிளவுஸும் இப்போது புழக்கத்தில் உள்ளன!

சீக்வன்ஸ், கிரிஸ்டல் கற்கள், பாஷன்படி பார்ட்டிகள், விசேஷங்களுக்கு மிகப் பொருந்தும். கிரிஸ்டல் கற்களை பிளவுஸில் ஒட்டி வைக்காமல் பிளவுஸோடு வைத்துத் தைத்து வாங்குகள்.

பிளவுஸை தைப்பதில் கூட இப்போதைய புழக்கத்தில் உள்ளன. மார்பகங்களை கூர்மையாகக் காட்டும்படியான பிளவுஸ் கட்டிங்குகள் இப்போதைய புழக்கத்தில் இல்லை. மார்பகங்கள் அதன் இயல்பான வட்டத்துடன் தெரியும்படி சாதாரணமாக தைக்கும் 'பிரின்ஸஸ் கட்' இப்போது பிரஸ்யம்!

தவிர பிளவுஸ் கழுத்தின் முன் பக்கம் சாதாரண உயரத்துடனும், பின்பக்கத்தில் மிக ஆழமாகவும் வெட்டித் தைக்கும் ஓவர் லேப்பிங் டிசைனும் இப்போது புழக்கத்தில் உள்ளது.

தேன் கலர், மஞ்சள், வெந்தயக் கலர், தங்கநிறம் போன்றவைதான் இந்த வருடத்தில் 'ஹொட்'டான நிறங்கள்!

பிளவுஸ் தைக்கும்போது சேலை என்ன மெட்டீரியலோ, அதே மெட்டீரியலில் பிளவுஸையும் வாங்கப் பாருங்கள்! ஷிபான் துணி என்றால், பிளவுஸின் முன் பக்கத்துக்கு மட்டும் லைனிங் தந்துவிட்டு பின்புறமும், கைகளும் ஸீத்ருவாக இருக்கும்படி விடுவது லேட்டஸ்ட் ஸ்டைல்! முழு கை பிளவுஸ் தைக்கும்போது முடிவில் 'புஷ் அப்'யும் கொக்கியும் வைத்துக் கொள்ளலாம்!

வழக்கமாக புடைவையுடனே வரும் பிளவுஸ் மெட்டீரியலில் பிளவுஸ் தைத்துக் கொள்வதுண்டு. இது பாரம்பரியமான முறை.

தற்போதைய பாஷன், காண்ட்ராஸ்ட் கலரில் பிளவுஸ் போடுவது அல்லது டபுள்கலரில் பிளவுஸ் போடுவது, புடைவையிலுள்ள இரு நிறங்களைத் தேர்வு செய்து ஒன்றை பிளவுஸின் நிறமாகவும் மற்றதை 'பைப்பிங்' செய்யும் நிறமாகவும் வைத்துக் கொண்டாலும் பாஷனாக இருக்கும்!

செட்டிநாட்டு மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:

விரால் மீன், மற்றவகை மீன் -2, சின்ன வெங்காயம் - 10, நறுக்கிய பெரிய வெங்காயம் - 1, தக்காளி - 2, பச்சை மிளகாய் - 2, பூண்டு - 10 பல், தனி மிளகாய்த் தூள் - 3 டீஸ்பூன், மல்லித்தூள் - 2 டீஸ்பூன், மிளகு, வெந்தயம், சோம்பு, சீரகம் தலா - 1 டீஸ்பூன், புளி - ஒரு எலுமிச்சை அளவு, உப்பு - 3 டீஸ்பூன், நல்லெண்ணெய் - 4 டேபிள்ஸ்பூன்.

செய்முறை:

முதலில் மீனைச் சுத்தம் செய்து துண்டுகளாக வெட்டி, உப்பு போட்டு உரசிக் கழுவவும். உப்பு மற்றும் புளியை 2 டம்ளர் தண்ணீரில் ஊற வைக்கவும். வெங்காயம், பூண்டை தோலுரித்து நறுக்கவும். தக்காளியை நறுக்கிக் கொண்டு, பச்சை மிளகாயை கீறி வைக்கவும். பின்னர் மிளகாய்த்தூள், மல்லித்தூள், மிளகு, சோம்பு, சீரகத்துடன் சின்ன வெங்காயத்தைச் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டு வெந்தயம், சோம்பு, சீரகத்தை போட்டு பொரிந்ததும், கறிவேப்பிலையை நறுக்கிய வெங்காயம், பூண்டு, தக்காளியுடன் சேர்த்து வதக்கவும். குழம்பு நன்கு கொதித்து எண்ணெய் பிரிந்து கெட்டியானதும், ஏற்கனவே சுத்தம் செய்து வைத்துள்ள மீன் துண்டுகளைப் போட்டு ஒரு கொதி வந்ததும், இறக்கி வைக்கவும். இந்த மீன் குழம்பு 'கமகம' என்று கோல்டன் கலரில் சாப்பிடச் சுவையாய் இருக்கும்.

அம்மா என்றோர் சீற்று!

ஆண்டவனுக்கு ஏன் இப்படியொரு ஒரவஞ்சனை. குழந்தைப் பாக்கியமில்லாது தவித்தவளுக்கு அந்த வரத்தை கொடுத்துவிட்டு இப்படி இடையில் தட்டிப்பறிப்பானேன்.....?

சிலருக்கு அளவுக்கு அதிகமாகக் கொடுப்பவன், பலருக்கு எதையுமே வழங்காமல் தவிக்க வைக்கிறான். இன்னும் சிலருக்கு இதைப்போல ஒரு கையால் கொடுத்து மறுகையால் தட்டிப்பறிப்பதும் என்ன நீதி.....?

தாமரைச்செல்வி தாய்மையுற்றிருப்பதை பரிசோதனை ரீதியாக உறுதிப்படுத்திய முதல் கிளினிக்கிலேயே வைத்தியர் எச்சரித்திருந்தார், சிசு உட்பதிந்திருக்கும் வழமைக்கு மாறான நிலை பேறுகாலத்தின்போது சிக்கல்களை தோற்றுவிக்கலாமென. ஆனால் பூரணமாக ஆறு மாதங்களும் நிறைவடைவதற்குள் தொடர்ச்சியான இரத்தப்போக்கு தாயின் உயிருக்கும் உலைவைக்கக்கூடிய நிலைதோன்றியபோது ஒரேயடியாக கருப்பையை அகற்றியாகவேண்டுமென கைவிரித்துவிட்டார். இதனையே ஜீரணிக்க முடியாத நிலையில் இப்போது புதுப்பிரச்சினை. சத்திர சிகிச்சையின் பின் அவளுக்கு இன்னும் நினைவு மீளாததால் வெளியே நிற்கும் உறவுகள் கைகளை பிசைந்தவாறும்..... ஆளுக்கு ஆள் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொண்டும்.

பத்து நிமிடங்களின் பின் அவசர சிகிச்சை விடுதியின் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்ட டாக்டர் மூர்த்தி விரக்தியின் விளிம்பில் நின்றுகொண்டிருந்த காசிநாதனை மட்டும் உள்ளே அழைத்தார்.

மனைவியுடன் எதைப்பற்றி வார்த்தையாட வேண்டாமென டாக்டர் அறிவுறுத்தினாரோ அதையேதான் அவள் உதடுகள் பிரித்து முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

''ஐயோ! என் குழந்தை...உலகத்தை பார்க்க முன்னமே''

''தாமரை நம் குழந்தைக்கு ஒண்ணுமில்லை. எதைப்பற்றியும் கவலைப்படாதேம்மா உன் பக்கத்தில் நானிருக்கேன்''. அவளுக்கு ஆறுதல் சொன்னாலும் இனி குடும்பத்தில் சங்கிலித் தொடராக எழப்போகும் பிரச்சினைகளை எண்ணி அவன் மனம் கனத்தது.

அவனை தனியே அழைத்து சென்ற டாக்டர் சத்திரசிகிச்சையில் வெட்டி அகற்றிய தசைப்பிண்டத்தைக் காண்பித்தார். வீங்கியிருந்த கருப்பையின் வாயிலில் ஒட்டிக்கொண்டு ஒரேஞ் பழ சைஸிலும் பெரிதாக, ஆனால் இன்னும் முழுவடிவம் பெறாத சிசு..... அவனுள் எழுப்பியிருந்த கற்பனைக்கோட்டைகளும் தகர்ந்தன. வாழ்க்கையில் இனி தந்தை என்ற அந்த உயரிய பாத்திரத்தை பெற முடியாத பாவியாகிவிட்டான்.

காசி நானிப்ப டாக்டர் என்ற முறையில் அல்லாமல் உன் கல்லுரி நண்பனாக சொல்கிறேன். இனிமேல்தான் தாமரைக்கு உன் அருகாமையும் அன்பும் அதிகம் தேவைப்படும்..... மற்றவையின் பாராமுகமும் குத்தல்பேச்சும்கூட அவளை உளவியல்ரீதியாக பாதித்து நிரந்தர மனநோயாளியாக்கிவிடும்''

''அவள் உடல் ஆரோக்கியத்தோடிருந்தபோதே அம்மாவோ, மற்றவர்களோ தங்கள் உறவுகளில் ஒருத்தியாக ஏற்றுக்கொண்டதில்லை. இனிமேற் காலத்திலா அவளிடம் பரிவுகாட்டுவார்களென்று நம்புவது?''

அவன் குடும்ப நிலையை எண்ண மூர்த்திக்கும் உள்ளம் வேகியது. கல்லூரிப்பருவத்தில் காசி எவ்வளவு துடிதுடிப்பானவன்; அந்தக் கலகலப்பு பக்கத்தில் நிற்பவர்களையும் பக்கெனத் தொற்றிக்கொள்ளுமே'!

தாமரையின் கட்டிலைச்சுற்றி காசியின் அம்மா, சகோதரிகள், மைத்துனி குழலி, அவள் குழந்தைகள் என மொய்த்து நிற்பது வைத்தியர் அறைக்கு குறுக்குத் தடுப்பாகவுள்ள கண்ணாடிச் சுவரினூடாக தெரிந்தது.

தாய் சகோதரிகளின் விருப்பம்போல காசியும் தாமரை மேல்கொண்டிருந்த மோகத்தை உதறிவிட்டு அவனது மைத்துனி குழலியையே மணந்திருந்தால் இப்போது அகமகிழ குழந்தைச் செல்வங்களுடன் அவன் வாழ்க்கையும் அமைதிப் பூங்காவாகியிருக்குமே.....! அதன் பிறகு குழலியை காசியின் அண்ணாவுக்குக் கட்டிக்கொடுத்துவிட்டார்கள்.

'ச்சே, ஒரு வைத்தியனாக இருந்துகொண்டு இதென்ன சாதாரண பக்களை போன்ற சிந்தனையோட்டம். தவறு லென்பது ஆண் பெண்ணிடையே சமநேரத்தில் ஊற்றெடுக்கும் புலனறியா ஈர்ப்புணர்வு; அடுத்தவர்கள் அதன்வேர் அறியார்' மூர்த்தி தன்னையே கடிந்துகொண்டார்.

''தாமரை உன்னை நம்பித்தான் தன்வீடு, வசதிகளை தூக்கி எறிஞ்சுட்டு வந்தவள். அவளை உன் உறவுகள் மதிக்கலைன்னா நீ தனிக்குடித்தனம் போகிறதுதான் வழி''

''என்ன? என் அம்மா, அக்கா, தங்கச்சிகளை விட்டுவிட்டு...''

''உன்னோட நிம்மதி, சந்தோசம் உன் கையிலேதானிருக்கு. இதைவிட உனக்கு வேறு தெரிவில்லை. அந்த தற்காலிக பிரிவுகூட உன் அருமையை அவர்களுக்கு உணர்த்தும். கூடவே இன்னொன்றும் மனைவியுடன் கலந்தாலோசித்து குழந்தையொன்றை தத்தெடுத்துக்கொள். அதனால் வரண்டுகிடக்கும் உன் வாழ்க்கை செழிக்கும்; புது உறவு மலரும்... உங்களுக்கு பிற்காலத்தில் ஆதாரமாகவுமிருப்பான்.''

மூர்த்தி தனக்கு பட்டதைச் சொல்லி விட்டான். நடைமுறை வாழ்க்கையில் இவையெல்லாம் சாத்தியமா கக்கூடியவைதானா... இடையிலுள்ள தடைகள்...?

* * * *

கிணற்றடிக்கு வந்த தையல்நாயகி குழந்தையின் அழுக்குத்துணிகளை துவைத்துக் கொண்டிருந்த மருமகள் தாமரையைப் பார்த்து முகம் சுழித்தாள்.

''என்ன மாமி, ஈர உடுப்புகளையா தேடுறீங்கள்? சவர்க்காரம் தேய்த்து ஊறவிட்டுருக்கிறன்.''

''என்ன காரியம் செய்தாய்? புருசனும் பெண்டாட்டியும் வேணுமானால் ஊர் பேர் தெரியாத மண்ணுகளை வீட்டுக்குள்ளே கொண்டுவந்து சீராட்டுங்கோ..... அந்த

சுடர் ஒளி

சிறுகதை

கழிவுடுப்புக்களோட என்ர துணிமணிகளையும் போட்டு, எனக்கு வாற கோபத்துக்கு காசி குறிக்கிட்டான்''

''என்னம்மா ஏதோ தீண்டத்தகாததை தொட்டுவிட்ட மாதிரி குதிக்கிறியள். நம்மோடு வாழவந்தபிறகு குழந்தை மதுவும் நம் சொந்தம் இல்லையா?''

''ஆமாண்டா, நீ சொல்லுவே. ஊர், பேரு எதுவும் தெரியாத மண்ணுகளை வீட்டுக்குள்ளே கொண்டுவந்து தாலாட்டு. எனக்கு பிறத்தியான் தொடுசலொன்றும் வேண்டாம். இப்படி சீராட்ட நாலு பேரு இருந்தால் ஊரில காவாலித்தனம் பண்ணுகிற இளசுகள் இன்னும் நாலு குழந்தைகளைப் பெத்து தெருவில போட்டுடுங்க. எனக்குதான் வீடுகொள்ளாதளவு பேரப்பிள்ளைகளிருக்கையில் அநாதைகளைக் கொஞ்சவேண்டிய அவசியமென்ன...?'' ஆவேசமாக பேசியதில் அம்மாவிற்கு மூச்சு வாங்கியது.

''எதுவுமறியாத பிஞ்சுக் குழந்தையை வையாதீங்கம்மா. ஒருவேளை அதன் பெற்றோர், உறவுகள் போரின் கொடும்பசிக்கு இரையாகியிருக்கலாம்....? அல்லது சுனாமியிலோ, இடப்பெயர்வுகளின் போதோ தவறியிருக்கலாம்.....!'' என்று கவலையோடுமொழிந்தான் காசி.

மாமியாரின் முதுகுப்புறம் துணிகளை அலசிக்கொண்டிருந்த தாமரை கைகூப்பி தலையை மறுதலித்து தர்க்கிக்க வேண்டாமென சைகை செய்தாள். பேதை இவள் இன்னும் எத்தனை காலம்தான் அடங்கியொடுங்கி எதிர்ப்பேச்சு பேசாமல் வாழாவிருப்பாள்?

தாமரை புகுந்த வீட்டிற்கு கைநிறைய சீதனம் கொண்டுவரவில்லையென்றாலும் தன் பட்டதாரி மாதச் சம்பளத்தை அப்படியே கணவனிடம் சேர்ப்பித்து அவனின் மூத்த, இளைய சகோதரிகளைக் கரைசேர்க்க கைகொடுத்தாளே.....!

அதே தங்கைகள் அவளை அண்ணியென்றும் பாராமல், ''அழுகின்ற குழந்தையை ஆற்றுப்படுத்தக்கூட தெரியலையே...'' என அவளுக்கு உறைக்கக்கூடியதாக சிலேடை பேசுகிறார்கள். மூத்தக்கா மட்டும் இலேசுப்பட்டவளா என்ன, பிள்ளைப் பாக்கியமில்லாதவளிடம் தன் குழந்தையை கொடுக்கமாட்டேனென்ற வீம்புக்காரி! இன்னும் சொல்லப் போனால் கருசிதைவுக்குப் பின்னர் உடலும் உள்ளமும் ஒடுங்கிப்போயிருந்தாள். இடையில் மதுவின் வரவு ஒன்றுதான் அவளுக்கு ஆறுதலையும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது.

'குழந்தை பற்றிய பேச்சு எடுத்தால் போதுமே, உடனே ஒரு விரிவுரையே ஆரம்பிச்சிடு. அது தெரியாமலா உங்களையெல்லாம் பெத்துப் போட்டேன்!' என்று அம்மா பார்வையால்அவனை எரித்து விட்டு குழலியின் இரண்டாவது பெடியனைத் தள்ளிக்கொண்டு கிணற்றடியிலிருந்து நழுவினாள்.

தொடர்ந்தும் இந்த சூழ்நிலைக்குள் வாழ்ந்தால் விரைவில் பைத்தியமே பிடித்துவிடும். மூர்த்தி சொன்னது போல தலைக்குளித்தனம் போய்விடுவதுதான் இதற்கு சரியான தீர்வு! இந்த சூழல் குழந்தையின் வளர்ச்சிக்கும் கூட ஆரோக்கியமானதல்லவே. பிரிந்து வாழ்ந்தால்தான் இவர்களுக்கும் அருமை புரியும். அதன்பிறகு அவர்களாகவே தேடி வரட்டும்'. காசிநாதன் முடிவெடுத்துவிட்டான்.

* * * *

மாலை வெக்கையின் கொடுமையிலிருந்து தப்புவதற்காக வாடகை வீட்டின் முன்பக்கமாக வரிச்சுத்தடிகளின்மேல் கிடுகுகளைப் பரப்பி சிறுபத்தியை வேய்ந்துமுடித்த காசி நெற்றி வியர்வையை வழித்தான். தனிக்குடித்தனம் வந்ததால் கசந்துவிட்டிருக்கும் உறவை சீர்படுத்தும் முயற்சியாக அம்மாவின் இன்றைய வரவு அமைந்திருக்கிறது. வந்த சாட்டோடு, காசியுடன் ஒன்றாகப்படித்து விதானையாராகவிருக்கும் நண்பனை கொண்டு குடும்ப அட்டையை புதுப்பிக்கவேண்டிய வேலையையும் பொறுப்புக் கொடுத்திருந்தாள். அப்போது மதுவின் வகுப்பாசிரியர் வெளிப்படலையைத் திறந்துகொண்டு மிதிவண்டியை உள்ளே விட்டார். முன்னுக்கு அண்ணாவின் இரண்டாவது பையன் கோபி, தலையைச்சுற்றி வட்டமாக பண்டேஜ் கட்டு.

''அட வா கமலநாதன். வெயில் மண்டையை பிளக்குது. நேற்றைக்கு பெற்றோர் சந்திப்புக்கு வரச்சொல்லி அறிவித்தல் கிடைச்சது. தை பிறக்க மதுவை ரவுன் பள்ளிக்கூடத்துக்கு விட யோசிச்சிருக்கிறம். அதால தான்....''

''ம்ம்... அதிருக்கட்டும், பள்ளிக்கூடத்தில இடைவேளை சமயத்தில கோபி தலையில கூழாங்கல் பட்டு ஒரே இரத்தக் குளம்! அதைப்பார்த்து அப்படியே மயங்கிப்போனான். இப்பத்தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் தையல் போட்டிருக்கு.''

''கூலாங்கல்லு வந்து மோதலைன்னா இவனாகப்போய் ஏதாவது வினையை தேடிக்கொள்வான் – அவன் சுபாவம் அப்படி!''

''இல்லை மதுதான் கோபியைக் கல்லால் அடித்திருக்கிறான்; கூட விளையாடிய பிள்ளைகள் சாட்சி!''

இதைக்கேட்ட காசியின் முகம் கறுத்தது; கண்கள் சிவந்தன. ''டேய் மது, வாடா இங்க....! தாமரை நீயும் வந்து அவன் பண்ணியிருக்கிற அநியாயத்தை பார்!''

இதுவரை நாளும் இல்லாதவாறு இன்று கணவன் இரைந்தது கேட்டு பரபரப்போடு வெளியே வந்தாள் தாமரை. அவள் பின்னே மாமியாரும்.

''கோபிக்கு கல்லால் அடிச்சு மண்டையை உடைச்சுப்போட்டு இடையில் ஓடி வந்திருக்கிறான். எங்களிடம் காச்சலென்னு கதைவிட்டிருக்கிறான். பொய் வேறு பேசியிருக்கிறான்.'' வெகுண்டவன் உள்ளே சென்று படுக்கையில் கிடந்தவனை தரதரவென இழுத்து வந்தான். குழந்தை மிரண்டு வெலவெலத்துப் போயிருந்தான்.

அதற்கிடையில் தையல் நாயகி பேரனருகில் சென்று அவனை அணைத்தபடி புலம்ப ஆரம்பித்துவிட்டாள். ''ஒவ்வொன்றும் இருக்கவேண்டிய இடத்திலதான் இருக்கணும். குப்பையில கிடந்ததை நடுவீட்டுக்குள்ளே கொண்டு வந்து அழகு பார்த்ததன் விளைவைப் பார்த்தியாடா....? அநாதைப்புத்தியை காண்பிச்சுட்டுது.''

அம்மா வாய்க்கு வந்தபடி திட்ட காசிக்கு சினம் பன்மடங்காகியது. எட்டி வேலியிற் தழைத்திருந்த பூவரசங் கம்பொன்றை ஒடித்தான். மதுவின் முதுகில் பளீர்பளீரென அறைந்தான். ''அப்பா அடிக்காதீங்க, நோகுதப்பா.... நோ....''

''விடுங்க, பிள்ளையை அடிக்காதீங்க.... பெத்த பிள்ளையாகவிருந்தால் இப்படி மாட்டையடிக்கிற மாதிரிஅடிப்பீங்களா?'' என குறுக்கே பாய்ந்த தாமரையிலும் கடைசி அடி விழுந்தது.

''காசி வேண்டாம் விடு. கொஞ்ச நேரத்தில மிருகமாக மாறிவிட்டியேடா! பள்ளிக்கூடத்தில ஆசிரியர்களே பிரம்பு பாவிக்கக்கூடாதென்று சட்டம் வந்திட்டுது.'' என்று கமலநாதன் மாஸ்ரர் கண்டிப்பாகச் சொன்னார்.

மது தொடர்ந்தும் அழுதவாறிருந்தான். அம்மா நடப்பவற்றை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

செல்வி வாசுகி கந்தசாமி

''இதை இப்படியே கண்டிக்காமல் விட்டால் நாளைக்கு மற்றவர்களால் வெறுக்கப்பட்டு – ஏன் ஒரு சமூக விரோதியாக உருவெடுக்க காரணமாயிடுவான். அப்புறம் ஊருலகம் வளர்ப்புப் பற்றி குற்றம் சொல்லும்'' என்றான் காசி.

''நமக்குத்தான் குழந்தை பாக்கியமில்லை. அதுக்காக ஆரோ பெற்ற பிள்ளையை அடிக்கிற உரிமை நமக்கு கிடையாதுங்க... இவனை பழையபடியே அநாதரவிழந்த குழந்தைகள் காப்பகத்திலேயே விட்டுடுவோம்..... இவ்வளவு நாளும் நம்மைச் சுற்றியிருக்கிறவங்க, உறவுக்காரங்களுக்குத்தான் இவனை பிடிக்கலை. இப்போ உங்களுக்கே இவன் வேண்டப்படாதவனாக..... இனியும் இங்கிருக்க வேண்டாம்.'' தாமரை நெஞ்சம் வெடித்து அழுதாள்.

(16ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் பகுதி

விடுகதைகள்

- பச்சை பச்சை டாக்டர் பால் போல டாக்டர் குண்டு முத்து டாக்டர். அவை எவை?
- தோலைப் பார்த்தால் கன்னங்கரேல், உரிச்சுப் பார்த்தால் மஞ்சளோ மஞ்சள். அது என்ன?
- அழுக்கு துணிமூட்டை,கையில் பிடிக்காமல் நடந்து போகிறான். அவன் யார்?
- வேலைக்காரி, கெட்டிக்காரி, ஓடிப்போகமாட்டா. அவள் யார்?
- பந்தக்கால் நாலு, பவழக்கால் நாலு, வெள்ளித்தடி இரண்டு, வெண்சாமரம் ஒன்று. அது என்ன?
- குலைகுலையாய்க் காய்க்கும் வாழை மரம் அல்ல; கொடிமரம் போல் நிற்கும் பாக்கு மரம் அல்ல; அது என்ன?
- வெட்டவெளிக் காட்டுக்குள்ளே விளக்கேந்திக் கொண்டு விக்கி விக்கி அழுதபடி, விரைந்து ஓடுறாள் வெள்ளைத்தாய். அது என்ன?
- நடுக்காட்டில் ஒரு கட்டி வெல்லம் வைத்தேன். ஈயும் இல்லை.எறும்பும் இல்லை. அது என்ன?
- உண்டதை நினைப்பான், உதையை மறப்பான், உயிரையும் கொடுப்பான். அவன் யார்?
- கூடவே வருவான் சின்னத்தம்பி, தொந்தரவு செய்யாத நல்லதம்பி. அவன் யார்?

விடுகதைகளுக்கான விடைகள்:
1. வெள்ளரிக்காய், கமலாப்பழம், பாகற்காய். 2. கதிரவன்முருங்கை. 3. கிணறு. 4. இலைபோடும். 5. நாரத்தங்காய். 6. வெள்ளைமாமரம். 7. நாவல். 8. வெற்றிலை 9. நான். 10. பிரிவு

அழகாக நிறம் தீட்டுங்கள் 28

தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

சிறுவர் கைவண்ணம்

ஆர்.புஸ்பகுமார்,தரம் 5ஏ,
புனித அந்தோனியார்
த.ம.வித்தியாலயம்.
கொழும்பு–14.

சுஜித்தன்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி
கொழும்பு–15.

நிரோஜா,
தரம் 6,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு– 15.

ரெமோனா ஏபிரகாம்,
நாகொட வித்தியாலயம்,
வெலிசறை.

வேட்டைப் பூனை



தொடரும்...

தெரிந்துக்கலாமா?

- தங்கமீனை நெடுநேரம் இருட்டறையில் வைத்தால் அது வெள்ளையாகிவிடும்.
- ஒரு தேக்கரண்டியை நிரப்ப 120 நீர்த் துளிகள் தேவை.
- ஒரு பெண் கொசு ஓராண்டில் 150,000,000 முட்டைகளை இடுகிறது.
- புலிகள் வெள்ளை நிறத்தில் எதைக் கண்டாலும் பயப்படும். சூரிய ஒளியை விரும்பாது.

சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

அழகாக நிறம் தீட்டுங்கள் 24

பாராட்டுப் பெறுவோர்...

1. மொஹமட் நுஸைர் இம்ரா,
   தரம் 4 பி,
   ஜப்பார் மத்திய கல்லூரி, கலகெதர.
2. ஜி.அஸ்கா பானுன்,
   தரம் 4 சி,
   கைரியா மு.ம.வித்தியாலயம்,
   கொழும்பு- 09.
3. ஆர்.வர்ஷினி,
   தரம் 1,
   பலாங்கொடை தேசிய பாடசாலை.
4. ப.நித்தியப்பிரியா,
   தரம் 6,
   94, மடத்துவீதி, மன்னார்.
5. ஏ.எம்.எம்.அஜாஸ்,
   அஸ்கர் வித்தியாலயம்,
   ஏறாவூர்.

முதலிடம் பெற்றவர் - பாத்திமா மரியம், தரம் 2
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.

கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

பள்ளிகள்

■ கவிஞர் ஸி.எஸ்.காந்தி

தேவனின் சுதனார் இயேசு
தோன்றினார்;ஆதி ஆதாம்
ஏவாளின் பாவச் சாயல்
இழையோடும் மானி டத்தின்
பாவத்தின் கறையை நீக்க
பாவிகள் உய்ய மண்ணில்!
காவலாய் நின்றார்; சொற்கள்
கைகளால் புதுமை செய்தார்!

காய்ந்துளம் ஏய்க்க வந்த
கபடப்பேய் நகர்வு; துஷ்டப்
பேய்களின் பிடியில் சிக்கிப்
பிணங்கியோர் மீண்டார்;வாட்டும்
நோய்வாயில் வீழ்ந்து பாயில்
நுடங்கியோர் எழுந்தார்; நோயில்
மாய்ந்தவன் , சிறுமி, மாண்ட
இலாசரஸ் உயிர்த்தெ ழுந்தார்!

கண்ணொளி குருடர் பெற்றார்
காதொலி செவிடர் பெற்றார்
அண்மிய குஷ்ட ரோகி
அக்கணம் சொஸ்த மானார்
புண்ணியர் அங்கி தொட்டுப்
பெண்ணவள் உபாதை விட்டாள்
நுண்ணிய மக்கள் நோக்கி
நல்கினார் உரைகள் இயேசு!

போதனை சிறிது; போகும்
இடங்களில் புதுமை; அன்னார்
சாதனை பெரிது; வீழ்ந்த
சனங்களைப் புரந்தார்; நின்றார்
வேதனை துடைத்தார்; எங்கும்
வியத்தகு மகிமை; இயேசு
நாதரின் மார்க்கம் சேர்ந்தோர்
நிறுவினர் கோயில்; பள்ளி!

நேசம்

■ மாவனல்லை எம். ரஸ்லான் ராசிக்

என்னைச் சுமந்து கொண்ட
மண்ணுக்கு நன்றி
அன்பு சுரந்திடும்
என் இதயத்திற்கு நன்றி
காதலை ஏற்றுக்கொண்ட
என் காதலிக்கு நன்றி
நிதமும் உதிருகின்ற
அவள் புன்னகைக்கு நன்றி
எனக்கு துணையாக நிற்கும்
என் கவி வரிகளுக்கு
காலமெல்லாம் நன்றி.

நேர்த்தி வினைகளைப் போடு!

முத்துக் கவித்தமிழ் சித்தம் சிரித்திட
நித்தம் கவிதைகள் கூறு! - இங்கு
ரத்தம் குடிப்பவர் பித்தம் தெளிந்திட
கத்தும் கடலென மாறு!

கொட்டும் மழையிலும் வெட்டும் வெயிலிலும்
சிட்டு தவிப்பதை பாடு!- பேய்
சட்டச் சடவென கொட்ட மடிக்குது
வெட்டி யரிந்ததை போடு!

புட்டி மதுவிலே முட்டி மகிழ்ந்திடும்
கெட்டித் தனமதை நீக்கு!- உடல்
கட்டுக் குலைந்துயிர் விட்டுப் பிரியுமுன்
மட்டித் தனமதை போக்கு!

அட்டைத் தனம்விடு! பெட்டைத் தனம்சுடு!
வெட்டித் தனத்தினை யோட்டு!-துயர்
விட்டுவிலகிட விட்டுக் கொடுத்துந்தன்
பட்டு மனத்தினை காட்டு !

தேச மெழுந்திட (து)வேச மெறிந்திடு
நேச விதைகளை போடு!- அன்பு
பாச மலர்ந்துபோர் நாச மெரிந்திடும்
வாச மலர்களை சூடு!

எந்திக்கை யாயுதம் வாந்தியை கக்குது
சாந்தி அமிழ்ந்ததில் போச்சு!- அண்ணல்
காந்தி நபியேசு புத்தர் வழிநட
நீந்தி வருமுயிர் மூச்சு!

சிங்கம் புலிவிடு! தங்க மனம்நடு!
எங்கும் அமைதியே நாடு!- எங்கள்
மங்கை மலர்களை தங்கை யெனநினை
சங்கத் தமிழ் கவிபாடு!

வங்க மதிர்ந்திட சங்கு முழங்கிடும்
கங்கு லரக்கனை எரிப்போம்!- இங்கு
பங்க மடைந்தவர் பங்கை வழங்கிநாம்
பங்க யமாய் நிதம் சிரிப்போம்!!

■ ஈழநிலா

மாய சக்தி

மாய சக்தி
ஒன்றின் முன்
மண்டியிட்டுள்ள
மனிதா.....!

நிழலைத் தேடி
நிஜத்தைத்
தொலைக்காதே...!
சுகத்தைத் தேடி
பயத்தை இழக்காதே
பிறரிடமிருந்து
எடுப்பதை நிறுத்தி
கொடுக்கப் பழகு..!

■ நானாட்டான் எஸ்.ஜெகன்

எலும்புக் கூடுகளும் இரத்தம் நிரம்பிய குவளைகளும்

அடிக்கடி நான்
மரணித்துப் போகிறேன்
இந்த உலகம்
விசாலமானதாம்
ஆனால் விசேஷமாக
எதையும் நான் காண்பதில்லை

ஒரு அமானுஷ்ய சக்தி
எனக்குள் ஊடுருவி
விட்டதாகத்தான்
உணர்கிறேன்.

ஊரடங்கு நேர வீதிபோல
வெறிச்சோடிக் கிடக்கிறது
இதயம்
கடலைப் பிளந்த
குண்டமாக மனசுக்குள்ளே
ஒருவித உருட்டுதல் சதாவும்.
என் ஆகாயத்திற்கு மட்டும்
அஸ்தமனம் மீது
அப்படி என்னதான் காதலோ...?

பகலில் சூரியன்
தன் அகோரப்பற்களை
காட்டி என்னை பயமுறுத்த
நான் நேசித்தவைகளெல்லாம்
நகம் வளர்த்த கையை
என் குரல் வளையை நோக்கி
நீட்டியதாகவே...

மண்ணை தகர்த்துக் கொண்டு
வெளிவந்த
எலும்புக் கூடுகள்
இரத்தம் நிரம்பிய
குவளைகளுடன்
உல்லாசமாக...

எல்லோருடய குப்பைகளும்
என் இதயத் தொட்டியில்
இடப்பட்டதாய் மாறுகிறது
ஐயோ...! ராட்சச கழுகொன்று
இதயத்தை கொத்திக் குதறி
ரணமாக்கிய வண்ணம்.
விஷ ஜந்துகளெல்லாம்
என் மேனியை முத்தமிட்டு
செந்நீர் பருகி
காமம் தீர்த்துச் செல்கின்றன.
ஒரு ஒளிக்கீற்றை கூட கண்டிராத
சூனகமொன்றின் நடுவில்
சிக்கிய கோழிக் குஞ்சாய்
இப்போது நான்.

■ திபத்நலாவ எச்.எப்.ரில்வா

சிகரட்

உயிர்த் தேன் குடிப்பதற்காக
புகைச் சிறகடித்து
உதட்டுப் பூவில் உட்காரும்
மின்மினிப் பூச்சி.
புகைப்போரை உயிரோடு
பற்றவைக்கும்
ஊமை நெருப்புக்கொள்ளி.

■ கவிஞர் அக்கரைபூர் அப்துல் குத்தூஸ்

அழகியே

அழகாகக் கருதப்படும்
உன்னிடம்
என் காதலைச் சொன்னேன்.
முறைத்தாய் பின், நெளிந்தாய்.
சிலகேள்விகள் கேட்டாய்!
கண்ணாடி பார்ப்பதுண்டா?
நீ சிவப்பா?
ஆறடியா உன் உயரம்?
கார், பைக் ஏதுமுண்டா?
சில கேள்விகள் கேட்டாய்!

அங்கவீனமாகப் பிறக்காததே
அதிகம் என்றேன் நான்!
அத்துடன் என் காதல்
உயிர் நீத்தது சரிதானே?

■ மன்னார் ஞா.ஸர்வேஸ்வரன்

கடல் கடந்து வீசுகின்ற காற்று! கனதி மிக்க கவிதைகளின் ஊற்று!!

■ கவிஞர் ஆழியாள்

காமத்தைப் பாடுவதும்; காமக்கலை உறுப்புக்களை கவிதைகளில் போடுவதும்; காளையரை சாடுவதும்தான் பெண்ணியத்தின் கவிதைக்கலாசாரம் என்று பேய்த்தனமாய் பேசும் சில பேதையரின் மத்தியிலே விளக்கமாய் படித்து, விசித்திரமான விளக்குமாறுகளால் 'விலங்குகள்' போடும் விலங்குகளை ஒடித்து, இம்சைகளை இடித்து, ஆணாதிக்கத் தளையின் அசிங்கத் தலையறுக்க, அணுவாய் எழுந்து, அழகாய் பல ஆட்டிலறியின் பலத்தோடு எண்டிசையும் வெடிக்கிறது சில ஈழப் பெண்களின் கவிதைகள்.

காட்டெருமைகளின் தேசத்தில் காலம் காலமாய் கட்டப்பட்டு வந்த கறுத்துப்போன கருத்து மதில்களை கட்டுடைத்து; தங்களின் குரல்வளைகளை குதறவரும் குரங்குகளை குப்புற வீழ்த்தி; புயலாகவும், தென்றலாகவும் புறப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய ஈழத்து பெண் கவிதைக் காற்றுக்களில் கவிஞர் ஆழியாள் மிக முக்கியமானவர்.

இந்தக் காற்றைச் [சு]வாசித்ததால் ஈழத்தில் பல இளம் பெண் படைப்பாளிகள் கருத்தரித்துள்ளனர். சிலர் கவிஞர்களாக உருத்தரித்துள்ளனர். இவரின் நேர்த்தி மிக்க வார்த்தைகளின் வசீகர வாசத்தை அதன் நேசத்தை, நெஞ்சில் பதித்ததன் தாக்கத்தை வளர்ந்துவரும் பெண் கவிஞர்களான 'பெண்ணியா', 'அனார்' போன்றோர்களின் கவிதைகளிலும் கண்டுகொள்ளக்கூடியதாக இருப்பது கவிஞர் ஆழியாளின் கவிதை மொழிதலுக்குக் கிடைத்த மிகப் பெரும் வெற்றியே.

இந்தக் கவிதை நதியில் கால் நனைத்தவர்கள் நவீன கவிதையின் நர்த்தனத்தையும், புரட்சிப் பூக்களின் புன்னகையையும் தரிசிக்க முடியும். 2000 ஆண்டளவில் வெளிவந்த 'உரத்துப் பேச' என்ற கவிதைத் தொகுதி மூலம் உரத்துப் பேசப்பட்ட இவரின் கவிதா விலாசத்தை 2006இல் வெளிவந்த 'துவிதம்' மீண்டும் தூக்கி நிறுத்தியுள்ளது. இவர் கவிதைகள் 'மூன்றாவது மனிதன்', 'கணையாழி','சரிநிகர்', 'உயிர் நிழல்', 'இன்னுமொரு காலடி', 'யுகம் மாறுது', 'ஆறாம் திணை', 'ஊடறு', 'எக்ஸில்', 'பெண்கள் சந்திப்பு மலர் 2004' போன்ற காத்திரமான தேசிய,சர்வதேச கலை, இலக்கிய இணைய சஞ்சிகைகளில் இடம்பெற்றுள்ளன.

மதுபாஷினி [1968] என்ற இயற்பெயர் கொண்ட இவர் திருகோணமலையில் பிறந்தவர். மூதூரில் ஆரம்பக்கல்வியைக் கற்று, மதுரை மீனாட்சி கல்லூரியில் ஆங்கில இலக்கியத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கில விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். இன்று அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். நவீன தமிழ் , ஆங்கில இலக்கியங்களில் தேடலும், வாசிப்பும் மிகுந்தவர். மொழி பெயர்ப்பு, படைப்பிலக்கியம், விமர்சனம் ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். வளர்ந்து வரும் இளம் பெண் கவிஞர்கள் ஆழியாள் போன்ற கவிஞர்களின் கவிதைகளுக்குள் ஆழ்ந்து போவதன் மூலமும் தங்களைச் செதுக்கிக்கொள்ளலாம் என்றால் மிகையல்ல.

இவரின் முகவரி:
AAZHIYAAL (MATHUBASHINI)
2/97, NAMADGI CRT,
PALMERSTON,
CANBERRA - 2913
AUSTRALIA.
E-Mail : aazhiyaal@hotmail.com
Tel: + 61262418183

நிலுவை

நீ திருப்பித் தரலாம்
மணிக்கூட்டை
கை விளக்கை, கத்திரிக்கோலை
(கன்னி மீசை வெட்ட நீயாய்க்
கேட்டது நினைவு)
கடும்பச்சை வெளிர் நீலக்
கோடன் சேட்டுக்களை
தரலாம்- இன்னமும் மிச்சங்களை
இன்று பல்லி எச்சமாய்ப் போனவற்றை.

உன் முகட்டில்
சுவடாய்ப் பதித்த
என் காட்டு ரோஜா உணர்வுகளையும்,
அள்ளியள்ளித் தெளித்து
பூப்பூவாய்ப் பரவிய
திவலைக் துளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?
எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?

கடிதத்திலா
காதிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ
நீ எனக்துள் செலுத்திய
ஆயிரத்தெட்டுக் கோடி
விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்துச்
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்துள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்.

நன்றி: 'உரத்துப்பேச' 20.10.1995

இலங்கை நாடார் நலன்புரிச் சங்கம்

3ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் சமூக ஒன்றுகூடலும் 2006/2007

02.12.2007

ஒற்றுமையே நாடார் சமூகத்தின் பலம்

இலங்கை வாழ் இந்திய வம்சாவழி நாடார் சமூக மக்களின் இவ்வமைப்பானது 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் சமூக உறுப்பினர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், அறியாத உறவுகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும், சொந்தங்களுக்குள் பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளவும், தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் ஆகும். அத்தோடு மட்டும்நின்று விடாமல் சமூகத்தில் நலிவடைந்தோருக்கு பொருளாதார, தார்மீக ரீதியில் உதவுவதும் ஆகும். சொந்தங்களையும் உறவுகளையும் வலுப்படுத்தவே இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. எத்தனையோ வகையில் இப்பூகோளம் பிரிந்து காணப்படுகின்றது. கண்டங்கள், நாடுகள், மொழிகள், மதங்கள், இனங்கள், கொடிகள், நிறங்கள் என்று வகைப்படுத்தபட்டுள்ளது. என்றாலும் இவை யாவும் ஒன்று சேர்ந்தாலே மொத்தப் பயனையும் பெற முடிகிறது. அதேபோல் தமிழ் சமுதாயத்தின் ஒரு அங்கமாகவே நாடார் சமூகமும் திகழ்கின்றது. தமிழ் இல்லையேல் நாமில்லை. தமிழர் வழி வந்த நாடார் சமூகம் தமிழுக்கும் சேவை செய்து வருகின்றது. விசேடமாக தமிழ் மாணவர் கல்வியில் தன்னை வெகுவாக ஈடுபடுத்தி வருகின்றது.

(23ஆம் பக்கம் பார்க்க)

ST. ANTONY'S METALS
41, Station Road, Dehiwela.
T.P: 0777 385189

M.S.TRADERS
114A, Temple Road,
Mount Lavinia
Tel: 2716048

VINOTH STORES
Dealers in Scrap Metals
155, Grandpass Road,
Colombo - 14.
T.P: 2478032, 0777 527931.

S.N.S.HARDWARES
Dealers in Hardware & Scrap Iron
522/1, Balagolla, Kengalla, Kandy.
Tel: 081 2421569.

SRI MUGIL VILLAS
NEGOMBO DOSA KING
#91, Rajapakse Broadway, Negombo. Tel: 031 2238792

V.NADARAJA
Galamulla Road,
Remuna, Horana.
Tel: 034 2264559,
0777 850019.
Dealers in Second Hand Hardware,
Rubber & Tea Factory Machinery

RAJA STORES
Dealers in scrap Iron,
Bottles, Metals & Sacks
220/1, Chilaw Road, Kattuwa, Negombo.
Tel: 031 2237326, 0714019374

S.R.METALS
Importers & Exporters
Dealers in Scrap Iron,
Brass, Copper, Aluminium,
All Kinds of Metals & Hardware Items
Colombo - 12.

NADAR WELFARE
ASSOCIATION OF LANKA
Colombo - 12

JEGAN TRADERS
Dealers in used Japanese Motor Spares, Ferrous and Non ferrous Scrap Metal.
Colombo - 10

இலங்கை நாடார் நலன்புரிச் சங்கம்

3ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் சமூக ஒன்றுகூடலும் 2006/2007

02.12.2007

ஒற்றுமையே நாடார் ....

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோன்ற நற்காரியங்களில் ஈடுபட்டு வரும் இலங்கை நாடார் நலன்புரி சங்கம் அதன் மூன்றாவது ஆண்டு நிறைவை முடித்துக் கொண்டு ஒரு புதிய வருடத்துக்குள் நுழைகின்றது. இனிவரும் காலங்களில் நாடார் சமூக மற்றும் இந்திய வம்சாவழி தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்பைவிட கூடிய அக்கறை காட்ட விரும்புகின்றது. இத்தகைய நன் நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு தொடர்ந்தும் தனது சேவைகளைச் சமூகத்திற்கு செய்யவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

ஒற்றுமையே பலம். வாழ்க தமிழ்.

அ.ஜெயக்குமார்,
பொதுச் செயலாளர்,
இலங்கை நாடார் நலன்புரிச் சங்கம்.

DAVID STORES
Dealers in Gunny Bags,
Scrap Metals & Poly sacks
248, Main Street, Kekirawa. Tel: 025 2264459

NIROSHAN TRADING ENTERPRISES
General Merchants,
Building Contractors, Suppliers of all
Hardware Building Materials Electricals Items &
Engineering Tools & Training Materials.
#420 -2/6, Sri Sangarajah Mawatha,
Colombo - 12.
Tel: 2243256, Fax: 2445203.

Breg Trone
Trading Company
340-1/1,1st Complex, Sea Street,
Colombo - 11. Tel: 4958147

SARASWATHY
HARDWARE STORES
Dealers in General Hardware
Metal Old New Iron Materials
& Cast Iron, M.S.Plates & Shafting
#474, Sri Sangarajah Mawatha, Colombo - 10.
Tel: 2392716, 2438663

JEEWAS METAL
Dealers in Hardware Items,
Ferrous & Non Ferrous Scrap
Metal Polypropylene Bags,
Plastic Barrels,
Industrial Raw Material.
21/A, Kandy Road, Balagolla, Kengalla.
Tel: 081 2423474.

T.PLIENDRAN
& FAMILY
# 346/28/A, Bangalhena Road,
Walgama, Malwana.
Tel: 4924571, 0777 565917

Arthur Tours
184, Galle Road, Colombo - 06.
Tel: 2582978, 2363796, 2360797
Hot Line: 0777 222333

RAJAH TRADERS
Exporters & Importers
Dealers in all Kind of used Batteries,
Stainless Steels, Brass, Aluminium, Copper,
Cast Iron, Scrap Iron & Metals ect.
225, Kandy Road, Peliyagoda.
Tel: 2933983, 2910822, 2906135
Fax: 2330721

மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

புரவலர் புத்தகப் பூங்காவின்

பதிப்புலகில் ஒரு புதிய தரிசனம்

'புரவலர் புத்தகப் பூங்கா',இலங்கை நூல் பதிப்பக உலகின் புதிய உதயம். மாதம் ஒரு நூல் என்ற திட்டத்துடன் வெளிச்சம் பாய்ச்ச வருகை தந்துள்ள இவ் உதயத்தின் முதல் தரிசனம் 18/11/2007 ஞாயிற்றுக் கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் நிகழ்ந்தது. மூன்று நூல்கள் ஒரே நிகழ்வில் வெளியிடப் பட்டன.



'கனலாய் எரிகிறது' (கவிதை), சலங்கையின் நாதம்(நாடகம்), 'பீலிக்கரை' (சிறுகதை) ஆகிய மூன்று நூல்களே வெளியீட்டுவிழா கண்டன. முறையே கே.எம்.ஏ.அஸீஸ், எம்.உதயகுமார், பிரமிளா செல்வராஜா ஆகியோர் இவற்றின் படைப்பாளிகள். ஞானம் பதிப்பகம், நூல்களை வெளியிட்டு வைத்தது.

புரவலர் ஹாசிம் உமர் இலக்கிய உலகின் மிக நெருக்கமான நண்பர், உறவினர் என்று குறிப்பிட்டாலும் மிகையல்ல. அவர் கலந்து கொள்ளாத நூல் வெளியீட்டு விழாக்களை கண்டு பிடிப்பது குதிரைக் கொம்பைத் தேடி அலைவது போன்ற செயலாகும். முதல் பிரதி வாங்குவதில் கின்னஸ் சாதனையை நோக்கி அவர் பறந்து கொண்டிருக்கிறார். இதுவரை 475 முதல் பிரதிகளை பெற்றுக் கொண்டவர் என்ற சிகரத்தின் உச்சியிலிருந்து சங்கீதம் இசைக்கும் குயிலாக அவர் காட்சியளிக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஓர் இலக்கிய சந்திப்பின் போது 'ஆமாம் நூல்களாக வாங்கிக் குவிக்கிறீர்களே! நீங்கள் ஏன் புத்தகம் போடக் கூடாது?' என்ற கேள்வியை எழுப்பிய போது 'அட, என்னங்க கொல்லன் தெருவிலே ஊசி விக்கிற கதையாக இல்லே இருக்கு. எதுக்கு நமக்கு அந்த வேலை' என்றார். காலம் மாறிவிட்டது. மனத்திலும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

நமது புதிய, எழுத்தாளர்கள் புண்ணியம் செய்தவர்கள். புரவலர் கொல்லன் தெருவுக்கு வந்து விட்டார். ஆனால், மிக மிக வித்தியாசமான விற்பனை. இதுவரை புத்தகம் போடாதவர்களின் புத்தகங்களைப் போடுவது, வெளியீட்டு விழாக்களை அவரே நடத்துவது, வருமானத்தையும் எழுத்தாளர்களுக்கு வழங்குவது, நூல்களையும் எழுத்தாளர்களுக்கு கொடுப்பது என்று ஒரே அசத்தல்.

அடேங்கப்பா! என்று மலைத்துப் போகாமல் இருக்க முடியவில்லை.

'காலம் அறிந்து செய்யப்படுகின்ற உதவி ஞாலத்தை விட பெரிது எண்பார் வள்ளுவர் பெருந்தகை. அத்தகையதொரு வரைவிலக்கணத்துக்கு உள்ளடக்கமானது இவ்வருஞ்செயல்.

நமது புனைகதைத் துறை, கவிதை உலகம் என்பன விரிவு கண்டு வரும் காலகட்டம் இது. ஏராளமான படைப்பாளிகள் இந்த துறைகளில் காலடி பதிக்கின்றனர். அவர்களின் தகுதியும், படைப்புக்களின் கனதியும் வெவ்வேறு தரத்திலானவை என்ற போதும் அவை அச்சுவாகனம் ஏறுவதும், நூலுரு பெறுவதும் காலத்தின் தேவையாகும். அந்நிலை கானல் நீராகவே இருக்கின்றது. படைப்பாளிகளின் பொருளாதார நிலையும், வாசகர் வட்டத்தின் கொள்வனவு தகுதியும் மனத் தெம்பை அளிப்பனவாக இல்லை. இத்தகைய அடித்தள கட்டுக்கோப்பு தளர்வு கண்டுள்ள சூழ்நிலையில்தான் புரவலர் புத்தகப் பூங்காவின் வருகை பெருந்துணையாக அமைகிறது. இதன் காரணமாக இதனை 'காலமறிந்த உதவிக்கரம்' என்று சுட்டிக்காட்டப்பட்டது. நமது இலக்கிய உலகம் இத்தகைய தொரு உதவிக்கரத்துக்கு தலைவணங்குதற்குரியது.

நூல் வெளியீட்டு விழா கலாநிதி துரைமனோகரன் தலைமையில் இடம் பெற்றது. வழக்கமான இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் என்ற வரையறுப்பையும் கடந்து, கலைஞர்களும், பலர் குடும்ப சகோதரர்களாகவும் பிள்ளை குட்டிகளையும் கூட்டிக் கொண்டு சமூகமளித்திருந்தமையும் விசேட அம்சமாகும். நூல் வெளியீட்டு விழாக்களை ஜன ரஞ்சகப்படுத்தும் ஓர் அம்சமாக இதனை கணிப்பில் எடுத்துக் கொள்ளலாம். எழுத்துலகமும் எழுத்தாளர்களும் புகலிடம் கோரிச் செல்லும் அகதிகளைப் போன்று ஒரே 'ரென்ட்' கூடாரத்துக்குள் அடைக்கப்பட்டவர்களாகவே இந்த நாட்டில் இருக்கிறார்கள். அந்நிலையை மாற்றும் அம்சமாகவே இந்நிகழ்வு திகழ்கிறது.

கலைச் செல்வன் இது குறித்து

கே.வி.

பேசிபோது, 'ஹாசிம் உமர் அவர்களே! அழைப்பிதழ்களை இலக்கிய சுவாசம் கொண்டவர்களுக்கு மட்டுமே அனுப்புங்கள்' என்றார். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களே இவர்கள் என்றார்.

கம்பவாரிதி அவர்கள் தமது உரையின் போது 'மண்டபத்தில் நிரம்பி வழியும் சனத்திரளில் மிகவும் வழக்கத்துக்கு மாறான வித்தியாசமான முகங்களைக் காண்கிறேன். இவர்களையெல்லாம் இலக்கிய உலகத்துக்குள் அழைத்து வரும் பெரும்பணியையும் புரவலர் செய்து விட்டார்' என்று பாராட்டினார். இவ்வாறாக ஆரம்பித்த அவருடைய பாராட்டுதல் மேலும் தொடர்ந்தது.

'புரவலர் வர்த்தக உலகத்தை சேர்ந்தவர். ஆனால் அவர் அந்த உலகுடன் மட்டும் தனது வாழ்வை நடத்திச் செல்லவில்லை. இலக்கிய உலகுடனும் தன்னை பிணைத்துக் கொண்டார். இதனூடாக சமூக நீரோட்டத்தில் இரண்டறக் கலந்துவிட்டார். சமூகத் தில் அவரை நேசிப்பவர்களே இதோ இந்தக் கூட்டத்தில்அதிகமாக இடம் பிடித்துக் கொண்டுள்ளார்கள்.

கட்சி அரசியலின் ஆதிக்கமும், குழு வாதங்களும் இலக்கிய உலகிலும் அதிகமாக இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் கடந்துதான் இங்கே நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய தொரு நிலையில் புரவலரின் நூலாக்க முயற்சி வளரிளம் எழுத்தாளர்களுக்கு வரப்பிரசாதமாகும்' என்றும் அவர் புரவலருக்கு புகழ் மாலை சூடினார்.

கலாநிதி துரைமனோகரன் தலைமையுரை நிகழ்த்தினார். ஒரு சம்பிரதாயமான உரை நிகழ்த்தி விட்டு அமர்ந்துவிடும் பலரைப் போலல்லாது வெளியிடப்பட்ட நூல்கள் குறித்து சில விமர்சனக் குறிப்புக்களையும் அவர் முன்வைத்தார்.

பிரமிளா செல்வராஜனின் பீலிக்கரை சிறுகதை தொகுதி பற்றிய கருத்துக்களை அவர் அதிகமாக முன் வைத்தார்.

பிரமிளா ஓர் இளம் எழுத்தாளர். அவருடைய ஆரம்பகாலமான இக்கால கட்ட எழுத்துக்கள் இத்தொகுப்பில் உள்ளன. இப் படைப்புக்களில் அவருடைய ஆக்கத்திறன் முதிர்ச்சியாக இழையோடுகிறது. அவருடைய படைப்புக்கள் அனைத்திலுமே இறுதியில் ஓர் எதிர்பாராத மாற்றம்-திருப்புமுனை அமைக்கப்படுகிறது. இது கதை வசிப்பில் சுவையை ஏற்படுத்துகிறது. பிரமிளா மலையக எழுத்தாளர் என்ற எல்லையைக் கடந்து, முழுநாட்டினதும் பிரச்சினைகளை உள்வாங்கி எழுதுதக் கூடியவராக பரிணாமடைய வேண்டும். இலங்கையில் முதல் சிறுகதையை எழுதியவர் தொழிற் சங்கவாதியான கோ.நடேசய்யர் ஆவார். மலையக மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை வைத்து இவர் ஆக்க இலக்கியம் படைத்தார். பிரமிளாவும் அவ்வழித் தோன்றலே! 2007ஆம் ஆண்டில் ஓர் இளம் பெண் எழுத்தாளர் நமது இலக்கிய உலகுக்கு கிடைத்துள்ளார்.

'கனலாய் எரிகிறது' என்ற கவிதைத் தொகுப்பு பற்றிய குறிப்புகளைத் தந்த போது தற்காலம் வெளிவரும் கவிதைகளை படிக்கும் போது தனக்கு அழுகை வருவதாக குறிப்பிட்ட கலாநிதி 'கனலாய் எரிகிறது' தலைமை பல கவிதைகளை கொண்டிருப்பதால் அது சிறப்பாக இருப்பதாகப் பாராட்டினார். சலங்கையின் ஒலி' நாடக நூலின் ஆசிரியரான கலைஞர் எம்.உதயகுமாரும் கலாநிதியின் பாராட்டினைப் பெற்றுக் கொண்டார்.

கண்ணீர் விடச் செய்யும் கவிதைகள் காணீர்!

''கவிதைகளை படிச்சுப் போட்டு கண்ணீர் வடிக்கிறாராம் கலாநிதி துரை மனோகரன்.''

''என்ட தம்புரானே!''

''இப்ப எந்த பத்திரிகையை எடுத்தாலும், சஞ்சிகையை எடுத்தாலும் ஒரே கவிதைகள்தான்.''

''உதுகளைப் படிச்சுப் போட்டே கண்ணீர் வடிக்கிறவர்?''

''ஓமோம்! ஓமோம்.''

''சாரி! ஏன்? எல்லாம் சந்திரமதி புலம்பல் கவிதைகளோ...?''

''கல்விமான்களைக் கூட கண்ணீர் விடச் செய்யும் எங்களின்ட வல்லமையைத்தான் என்னென்று போற்றுரது. கவிமக்களே! போற்றுதீர்! போற்றுதீர்! அது சரி! உந்தக் கவிதையில் எந்த நயத்தைக் கண்டு போட்டு கலாநிதி கண்ணீர் வடிக்கிறவர்! உள்ளடக்கம், எதுகை, மோனை, படிமம், யாப்பிலக்கணம், சொற்களின் லயம்...''

''என்ட தம்புரானே! கவிதை என்றால் இத்தனை சமாச்சாரங்கள் கிடக்கே?''

''பின்ன என்னப்பு. ஒரு தமிழ்த் துறைத் தலைவர் சும்மா கன்னா பின்னாவென்று மேடையிலே பிரசங்கம் செய்வாரே?''

''அதுசரி! அதுசரி! உவர் இந்தக் கருத்தை எங்கே வைச்சுச் சொன்னவர்?''

''புரவலர் ஹாசிம் உமர் ஒரு புத்தகப் பூங்கா ஆரம்பிச்சிருக்கார். மூன்று புத்தகங்களை வெளியிட்டார். எங்களின்ட கலாநிதி தலைமை வகிச்சார் அவர் தன்ட தலைமை உரையிலேதான் இப்பத்த கவிதைகளை படிச்சுப் போட்டுதான் கண்ணீர் வடிக்கிற சமாச்சாரத்தைச் சொன்னவர்.''

''அடடே! கேட்கச் சங்கடமாக இருக்கு. ஏன் இந்தக் கண்ணீர் வடிப்பு?''

''அப்பு! எங்களின்ட புதுக்கவிதையாளர் பெருமக்களில் பெரும்பாலானோர் தமிழுக்குச் செய்கிற அநியாயத்தைப் படிச்சுத்தான் அவர் கண்ணீர் வடிக்கிறார். கவிதை என்றபெயரிலே வசனங்களை முடிக்கிறதும், வரிசைகளை கோர்க்கிறதும் என்ட மாதுரியான அவலங்கள்தான் அவரை இந்தப்பாடு படுத்திக்கிடக்கு.''

''அடிசக்கை!''

''சரியாச் சொல்லிப் போட்டார். கதிரைமலையான் தான் தமிழை காப்பாத்த வேணும்.''

கவிஞனின் சீற்றமோ சீற்றம்

''எழுதுவதைப்போல வாழ்ந்து காட்டனும். அப்படி இல்லாத பயலுவல்ட எழுதுகோலை கொளுத்தனும். இப்பிடின்னு ஒருத்தர் சொன்னாராமில்லே.''

''அட இழவே. இதென்ன புது சமாசாரமா கெடக்கு?''

''புதுசு இல்லே. ரொம்ப பழசு.''

''அப்படிங்ரியே!''

''ஆமாலே. இந்த எழுதுகோலை எரிக்கிற சமாச்சாரத்தை விட்டுப் பிட்டு இந்த பயலுவலேதான் எரிக்கனுமின்னு ஒருத்தர் சொல்லுதாரு.''

''அடப்பாவமே! ரொம்பவும் வன்முறையா இல்லே இருக்கு. என்ன சமாசாரம்! ஏன் இப்புடி எகிறிக் குதிக்கிறாரு?''

''எல்லாம் ஏட்டிக்குப் போட்டி சமாச்சாரம் தாம்லே. எல்லாருமே இலக்கியம் பேசுராங்க. ஆனா அகதிகள் கூட்டம் மாதிரி ஆளுக்காளு ஒரு கூட்டம். இந்தக் கூட்டத்துக்கு அதைப்புடிக்காது. அந்தக் கூட்டத்துக்கு இதைப்புடிக்காது.''

''என்ன குழுவாதம் பத்திச் சொல்லுதியலா''

''சரியாகச் சொன்னிய. அதுவேதான்''

''இதுதான் நமக்குப் புடிச்ச பெரிய வியாதி ஆச்சே. அது சரி, இவரு ஏன் ஆளையே எரிக்கனும்னு கொதிக்கிறாரு''

''ஒரு பாசம்தான். நேசம்தான்.''

''கிழிஞ்சுது போ''

''ஒரு எழுத்தாளரு. மனுஷன் எழுதுரதோட நிக்கமாட்டாரு. வெளியீட்டு விழா, கருத்தரங்கு, நினைவுச் சொற்பொழிவு இப்பிடி எதையாவது செஞ்சுண்டே இருப்பாரு.''

''இது பெரிய விசயமாச்சே!''

''இது உமக்குத் தெரியுது. எல்லோருக்கும் தெரியல்லியே.! இந்த எழுத்தாளரு கொஞ்சம் சுகயீனமா படுத்துட்டாரு. நம்ம ஆளு இவரைப் போய் பார்த்திட்டு திரும்பி இருக்காரு. வழியிலே சமுதாய எழுச்சிப் பாட்டுப் பாடுகிற ஒரு கவிஞரை சந்திச்சிட்டாரு''

''என்ன? எழவு ஊட்டுக்குப் போய் வராப்புலே முகம் வாடி இருக்குயே'' இது கவிஞர் கேள்வி.

''நம்ம எழுத்தாளரை கொஞ்ச நாளாவே காணோம். என்ன சமாச்சாரம்னு தேடிப் போனா மனுஷன் சீக்கா படுத்தும் கெடக்காரு....''

''ஆமா. அதுக்கு நீர் ஏன் உம்ம வீட்டுலே எழவு விழுந்த மாதிரி மொகத்தை வைச்சிக்கிட்டு இருக்கீரு.''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. ரொம்பவும் சீக்கா இருக்காரு, மனசு கேட்கல்லே. சங்கடமா இருக்கு.''

''நல்ல ஆளையா நீரு. இவுகளுக்குப்போய் மனசு சங்கடப்பட்டுன்னு இருக்கீரே''

''நம்ம ஆளு வெலவெலத்துப் போனான்.''

''என்ன! இப்புடி சொல்லுரீரு?''என்று கேட்டாரு.

ஒரு நமுட்டுச் சிரிப்பு சிரிக்க கவிஞர் சொல்லுதாரு ''ஏன் ஐயா! இவுகளுக்குப் போய் துக்கப்படுறீர். இவுகளுக்கு என்ன ஆனால் என்ன. இது இல்லே இது மேலேயும் ஆகும். இந்த ஆளு செஞ்ச காரியம் தெரியுமா. நாம ஒரு பெரிய கல்விமானுக்கே நெனவுக் கூட்டம் போட இருந்தோம். இவன் அதுக்கு முந்தி கூட்டம் போட்டு பேரைத் தட்டிக்கிட்டானே...''

''அடப்பாவி! உங்க மாதிரி ஆளுங்க கல்விமானுக்கு கூட்டம் போட்டா என்ன, கல்தூக்கி வீசுனா என்ன?''

''நம்ம ஆளு மிதிபட்டு பாம்பாயிட்டான்!''

சிறு விளம்பரங்கள்

திருமண சேவை

4,000 Hindu, Christian, Muslim மண மக்களின் பதிவுகள் E-mail மூலம் இலவச மாகத் தொடர்புகொள்ள முடியும். மாதந் தோறும் 24 நாடுகளிலிருந்து 10,000 பேர் பார்வையிடுகின்றனர். பதிவும் இலவசம் www.SUBAMANGALAM.com

சக்தி திருமண சேவை யாழ் கொழும்பு இந்திய வம் சாவளி RC உள்ளூர் வெளிநாட்டு மணமக்களை பெற்றுக் கொள்ளலாம். Shakthi Marriage service, # 30, Ramani Mawatha, Negombo. Tel: 031 223230, 0777 - 043138, 031 5674603.

மலையகத்தில் ஜாதி, சமயம் தகுதிக்கேற்ப மண மக்களை பொருத்தி தருவது. கல்யாண மாலை 19-20, கண்டிவீதி, நுவரெலியா T.P:- 052 5570132

உங்களை இணைப்பது தெய்வம் தானென்றா லும் கருவியான www.tamilmatrimony.lkயை நாடினால் கட்டணமேதுமின்றி பயனடையலாம். விவரங்களுக்கு http://www.tamilmatrimony.lk/info@tamilmatrimony.lk. +94774533600

எங்களிடம் உள்நாட்டு வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ மணமக்களின் விபரங்களும் உள்நாட்டு முஸ் லிம்களின் விபரங்களும் உள்ளன. samang ali marriage Service, 237, 6/10, 4th Floor, Main Street, Colombo - 11. T.P:- 4862219, 2341704.

கல்வி

Spoken English & Sinhala குறுகிய காலத்தில் அடிப்படையிலிருந்து எழுத்து பேச்சுப் பயிற்சியும் இல்லத்தரசிகள் வெளிநாடு செல்வோருக்கானது. Harani English Language Centre, வெள்ளவத்தை. 0777 254627

தரம் 7முதல் 11 வரையான மாணவர்களுக்கு கணித பாடம் வீடு வந்து அனுபவமிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும். தனி வகுப்புக்களும், குழு வகுப்புக்களும் எடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். 0773560024

பிரபல பட்டதாரி ஆசிரியர் Local & London (A/L) இணைந்த கணிதம் குழுவாகவோ வீடுவந்தோ கற்பித்துத் தரப்படும். Year - 9 -11 வரையானவர்களும். தொடர்பு கொள்ளலாம் - (maths) 0773650321

A/L Chemistry பாடவிதானம் 15 வருட கடந்த கால மாதிரி வினாக்கள் என்பவற்றுடன் இரசாயனவியல் அதிசிறப்புப் பட்டதாயினால் வீடுவந்து கற்பிக்கப்படும். தொடர்பு: 071 6828687, 011 2813781.

மொழிபெயர்ப்பு சேவை. தமிழ்மொழியில் இருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்தில் இருந்து தமிழ் மொழிக்கும் மொழி பெயர்த்தல். தொலைபேசி: 0716850013, 492274.

பயிற்சி வகுப்புக்கள்

